THE

PASTOR'S MANUAL.

11

போதகர் நெறிநூல்.

MADRAS.

AMERICAN MADURA MISSION.

1880.

C. K. S. PRESS, VEPERY, MADRAS.

PREFACE.

முகவுரை.

இச்சிறுநூல் மதுரை நாட்டில் கர்த்தருடைய இராச்சியத்தை ஸ்தாபிக்கிறதற்கேற்ற பிரயாசம் எடுத்து அனுபவம் அடைந்தவர்களால் உண்டாக்கப்பட்டு மதுரை மிஷியோனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்த போதகன்மார் தங்கள்தங்கள் சபைகளை நடத்துவதில் எந்தக் கிறிஸ்த வகுப்பாரும் அனுசரிக்கக்கூடாத பிரமாணங்களை விலக்குகிறதும் எல்லா வகுப்பாரும் அங்கீகரிக்கத்தக்க பிரமாணங்களை அனுசரிக்கிறதும் முக்கியம் என்பதை இதில் காட்டக் கருதியிருக்கிறோம்.

மேலும் கிறிஸ்த சடங்குகள் பலவற்றுள்ளும் ஒவ்வொன்றும் பல விதமாய்ச் செய்யத்தக்கதாயிருப்பதாலும் கிறிஸ்தவர்களெல்லாரும் அவைகளை ஒரே விதமாகவே செய்யவேண்டுமென்கிற அவசியமில்லையாதலாலும் தகுந்த விதங்கள் பலவற்றுள் ஒவ்வொன்று திருஷ்டாந்தமாக இதில் காண்பிக்கவும் கருதினோம்.

எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது, என்று புகழப்பட்ட திருச்சபையின் பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம்போலிருக்கிற நீதிமான்களுடைய பாதையாயிருப்பதாக.

CONTENTS.

PART FIRST.

PRINCIPLES.

PART SECOND.

FORMS AND SCRIPTURES.

பொருள் அட்டவணை.

முதற் பிரிவு.

மூலநியாயங்கள்.

பக்கம்

I. கிறிஸ்த சபை ஆளுகையின் மூலாதார விதிகள்.

பக். 1—8.

II. சபை ஏற்படுத்துவதில் அனுசரிக்கும் ஒழுங்கு.

பக். 9—18.

III. சபைத் தொழில்.

பக். 19—52.

IV. போதகர் தொழில்.

பக். 53—70.

இரண்டாம் பிரிவு.

ஒழுங்கும் வேத வாக்கியமும்.

I. சபை.

பக். 73—90.

II. போதகரை ஏற்படுத்தல்.

பக். 91—100.

III. ஆலயப் பிரதிஷ்டை.

பக். 101—107.

IV. ஆட்களைச் சபையில் சேர்த்தல்.

பக். 108—115.

V. சபையிலிருந்து ஆட்களை அனுப்பிவிடல்.

பக். 116.

VI. சபைச் சிட்சை.

பக். 117—123.

VII. சபை ஐக்கிய சங்கம்.

பக். 124—130.

பக்கம்

VIII. ஒய்வுநாள் ஆராதனை.

பக். 131—141.

IX. விசேஷித்த கூட்டங்கள்.

பக். 142—188.

X. ஞானஸ்நானம்.

பக். 189—195.

XI. கர்த்தருடைய இராப்போசனம்.

பக். 196—200.

PART FIRST.

PRINCIPLES.

முதற்பிரிவு.

மூலநியாயங்கள்.

THE PASTOR'S MANUAL.

போதகர் நெறிநூல்.

I.

FUNDAMENTAL PRINCIPLES OF A CHRISTIAN CHURCH.

கிறிஸ்துசபை ஆளுகையின் மூலாதார விதிகள்.

I. சபைச் சட்டம்.

சபையின் ஆளுகைக்கும் சிட்சைக்கும் மாறாத பிரமாணம் வேதமே.

II. சபைத் தன்மை.

1. கிறிஸ்து சபை என்பது தேவனை ஒருமித்து ஆராதிக்கவும், நற்கருணை, ஞானஸ்நானமாகிய ஞானுநுபானங்களை ஒருமித்து நடப்பிக்கவும், கிறிஸ்தவர்களும் மற்றவர்களுமாகிய யாவரும் நன்மை அடையும்படி தேவனுடைய இராச்சியத்தை அபிவிர்த்திசெய்யவும் ஐக்கியப்பட்ட கிறிஸ்தவர்களின் கூட்டமேயாம்.

(1.) கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களாகத் தங்கள் நடக்கையினுல் காணப்படுகிறவர்களே சபையாராவதற்குத் தகுந்தவர்கள். சபையில் சேர்வதினுலேயே ஒருவன் கிறிஸ்தவன் ஆகமாட்டான்; ஆனுல் கிறிஸ்தவர்கள் ஒருமித்துக் கூடியதே சபையாம்.

(2.) விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் சகோதரராக ஐக்கியப்படும்படி சபையாக ஒருமித்துக் கூடுகிறார்கள்.

2. சபையின் நோக்கம் ஆவிக்குரிய ஊழியம்; ஆயினும் அவ்வூழியம் நடந்தேறுவதற்காக லௌகிக ஊழியம் ஒன்று அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய ஊழியம் போதகர் தொழிலிலும் உலகத்திற்குரியது சபையின் பொதுத் தொழிலிலும் சாதாரணமாய்க் காண்ப்படும்.

3. இலகுவாய் ஒருவரையொருவர் கவனிக்கவும் சபையாய் ஆராதனைக்கு ஒருமித்துக் கூடவும் முடியாதபடி ஒரு சபை அதிகச் சனங்கள் சேர்ந்ததாய் இருக்கக்கூடாது. அல்லது சபையின் காரியாகாரியங்களைத் தாங்கவும் விலக்கவும் போதாத குறைந்த சனங்களாயும் இருக்கக்கூடாது.

III. சபை ஒழுங்கு.

1. மேலே கண்ட தகுதி உள்ள எத்தனைபேரும் ஒரு சபை ஆகலாம்; ஆனாலும் கொள்கை பேதத்தினாலாவது கோபதாபத்தினாலாவது இருக்கிற சபையை விட்டுப் பிரிந்துபோகவும் முக்கியமான முகாந்தரங்களினாலல்லாமல் இருக்கிற சபையை விட்டுப் புதுச் சபை ஸ்தாபிக்கவும் இதனால் இடமில்லை.

(1.) இப்படி சபை ஆவதற்கு உடன்படிக்கை ஒன்று வேண்டும்.

(2.) இந்த உடன்படிக்கை தேவாராதனையிலும் கிறிஸ்துவின் இராச்சிய நியமங்களிலும் ஐக்கியப்பட்டவர்களாயிருப்போம் என்று தேவ சனங்களாகிய மற்றச்

சபைகளோடு தாங்கள் மனப்பூர்வமாய்ச் செய்துகொண்டதாகும்.

(3.) தேவனுடைய சனங்களிடத்தில் செய்யும் இந்த உடன்படிக்கை தாங்கள் முன்னமே தேவனிடத்தில் அந்தரங்கமாய்ச் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அத்தாட்சியாகும்.

2. இவ்விதமாய் ஏற்பட்ட ஒரு சபை மற்றெந்தச் சபைக்கும் உள்ளவைகளாகிய கிரியைகளைச் செய்யவும் சிலாக்கியங்களை அநுபவிக்கவும் உரிமைகளைப் பாராட்டவும் தக்கதாகிறது.

IV. சபை ஆளுகை.

1. ஒவ்வொரு சபைக்கும் கிறிஸ்துவின் நிபந்தனைப்படித் தன்தனக்குரிய விஷயங்களில் சுயாதிகாரமுண்டு: அதாவது, ஒவ்வொரு சபையும் தன் தன் அங்கங்களாவோரைச் சேர்த்துக்கொள்ளவும் விலக்கவும், போதகரையன்றி மற்ற உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும் விசாரிக்கவும் அவசியமானால் தண்டித்து விலக்கவும், சபை ஒழுங்குக்கேற்ற விதிவிலக்குகளை உண்டுபண்ணவும் அதிகாரமுள்ளதாம். இந்த விஷயங்கள் எல்லாவற்றிலும் சபைகள் கிறிஸ்துவுக்கு நேரான உத்தரவாதிகள். இந்த உத்தரவாதத்தினின்று தங்களை நீக்கிக்கொள்ள ஒருபோதும் அவர்களால் கூடாது.

2. ஆளும் அதிகாரம் சபையினுடையதானதால் சபை அதிகாரஸ்தர் எந்த விஷயத்திலும் சபை கொடுத்த அதிகாரம் என்பதைக் கவனித்தே நடக்க வேண்டும்.

V. சபை உத்தியோகம்.

1. சபையின் உத்தியோகஸ்தர், முதலாவது, வேதபோதனைமுதலிய ஆவிக்குரிய ஊழியம் செய்பவர்களும், இரண்டாவது, சபையின் லௌகீக விஷயங்களை நடத்தி வருபவர்களுமாம்.

2. வேதபோதனைமுதலிய ஆவிக்குரிய ஊழியம் செய்துவரும் போதகர்களும் தருமத்திற்காகவும் செலவிற்காகவும் பொருள் சேகரிப்பது, செலவழிப்பது, முதலிய லௌகீக அலுவல் நடத்திவரும் மூப்பர்களும் சபையின் பொது உத்தியோகஸ்தர்களாம்.

3. இவர்களில் போதகர்கள் என்னப்பட்டவர்கள் கல்வி, அறிவு, தெய்வபத்தி, இவைகளில் தேர்ந்தவர்கள் என்றும், சபையாரைத் திவ்விய நியமனப்படி போதித்து நடத்தச் சக்தியுள்ளவர்கள் என்றும் சபையாரால் மதிக்கப்பட்டுப் போதக அபிஷேகத்தினால் ஊழியத்திற்குப் பிரத்தியேகப் படுத்தி வைக்கப்பட்டவர்களாம்.

(1.) இவர்கள் தாங்கள் அதிகாரம்பெற்றிருக்கிற சபையைத் தவிர மற்றச் சபைகளில் ஆளுகை செலுத்துவது கூடாது.

(2.) இவர்கள், முதலாவது, யாதொரு சபைக்கு வேதபோதனைமுதலிய ஆவிக்குரிய ஊழியம் நடத்துகிறவர்களாகவும்; இரண்டாவது, பட்டமுள்ளவர்களாகவே சபை அனுமதியின்பேரில் விவசாயம், படிப்பித்தல், முதலிய அலுவலில் இருப்பவர்களாகவும்; மூன்றாவது, பின் சொல்லப்படும் சபையின் விசேஷ உத்தியோகமாகிய

சுவிசேஷக ஊழியம் நடத்துகிறவர்களாகவும் இருக்கலாம்.

(3.) அபிஷேகமானது ஒருவரிடத்தில் போதகருக்கு வேண்டிய இலட்சணங்களும் வரங்களும் உண்டென்று சபைச் சங்கத்தார் அறிந்து அவரில் நிறைவேற்றுகிற சடங்காயிருக்கிறதினால் அபிஷேகத்தினால்தானே ஒருவருக்கு முன்னில்லாத வல்லமையாவது வரமாவது வருகிறதுமில்லை, தேவனிடத்தில் விசேஷமாய்ச் சமீபித்து மனிதருக்குள் அதிகாரம் செலுத்தும்படியான ஆசாரியத்துவம் உண்டாகிறதுமில்லை.

(4.) ஒரு சபையிலிருந்து அனுப்பப்பட்டுச் சபையில்லாத ஓரிடத்துக்குப் போய்ப் போதகமுதலிய ஊழியம் செய்துவரும் சுவிசேஷகர் சபையின் தற்கால விசேஷ உத்தியோகஸ்தராம். இவர்கள் போதகப்பட்டம் பெற்றும் பெருமலும் இருக்கலாம்.

VI. சபைச் சம்பந்தம்.

1. சபைகள் கிறிஸ்துவின் பல அவயவங்களாயிருந்து அவரைத் தங்களுக்குத் தலையாக உடைய ஏக சரீரமாய் அவரில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

2. சபைகள் எல்லாம் தங்கள்தங்கள் உரிமைகளிலும் சிலாக்கியங்களிலும் சமமாயிருப்பதினால் ஒரு சபை இன்னொரு சபைக்குச் சட்டம் ஏற்படுத்தி அதிகாரம் செலுத்தாமல் மேற்குறித்த சம்பந்தத்தினால் மாத்திரமே பொது விஷயங்களில் அதிகாரம் செலுத்தப் பாத்தியமுள்ளதாயிருக்கிறது.

3. இச்சம்பந்தம் ஒவ்வொரு சபையிலும் போதகரும் சுவிசேஷகரும் நியமிக்கப்படும்பொழுதும் விலக்கப்படும்பொழுதும் விசேஷமாய் விளங்கும்.

(1.) போதகர், சுவிசேஷகர், இவர்கள் தொழில் எல்லாச் சபைகளுக்கும் பொதுப் பிரயோசனமாகையாலும்

இவர்கள் நற்கீர்த்தியும் கல்வியும் செல்வாக்குமுள்ளவர்களாயிருப்பது மற்றச் சபைகளுக்கு விசேஷப் பிரயோசனமாகையாலும் இவர்களை நியமிக்கையில் அடுத்த சபைகளாகிய சங்கத்தின் ஆலோசனையின்பேரிலேயே நியமிக்கவேண்டும்.

(2.) எந்தப் போதகர்பேரிலாவது போந்த குற்றம் சாட்டப்பட்டால் சபை சங்கத்தைக்கொண்டே விசாரித்து ருசுவுக்குத் தக்கபடி கண்டனைதண்டனை செய்விக்கவேண்டும்.

(3.) ஒரு போதகர்பேரில் போந்த குற்றம் சாட்டப்பட்டிருந்தும் அவரிருக்கும் சபை அசட்டையாயிருந்தால் சங்கமே அச்சபையையும் போதகரையும் அழைத்து விசாரணை செய்யவேண்டும்.

(4.) தேவனுடைய இராச்சியம் உலகமெங்கும் பரவும்படி சுவிசேஷகரை அனுப்புவதிலும் வேதாகமசன்மார்க்க புஸ்தகங்களை அச்சிடுவதிலும் சஞேபகார முயற்சிகள் பண்ணுவதிலும் சபைகள் எல்லாம் ஒன்றுபட்டிருப்பது சபைச் சம்பந்தத்திற்கு ஏற்றதாயிருக்கிறது.

VII. சபைகளின் அன்னியோன்னியம்.

1. சபைகள் எல்லாம் ஐக்கியமாயிருக்கவும் பொது விஷயங்களில் அன்னியோன்னியம் பாராட்டவும் விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இவைகளில் வளர ஒன்றுக்கொன்று உதவிசெய்யவும் சகல நல்ல காரியங்களிலும் சேர்ந்து முயற்சிக்கவும் கடமைப்பட்டவைகளாயிருக்கின்றன.

2. சபைகள் அன்னியோன்னியம் பாராட்ட வேண்டிய சில விஷயங்களாவன:—

(1.) தங்கள் விசுவாச சட்டங்கள் தேவநியமங்களின்படி உண்மையானவைகளாயிருப்பதற்கு அவைகளை ஒன்றுக்கொன்று வெளியிட்டு அறிக்கைசெய்தல்.

(2.) ஒரு சபையிலிருந்து வருகிறவர்களை அந்தச் சபையின் சாட்சிப்பத்திரமூலமாய் ஏற்றுக்கொண்டு அச் சபையைத் தனக்குச் சமமானதாக அங்கிகரித்தல்.

(3.) போதகர் சுவிசேஷகர் என்பவர்களை நியமித்தல், விலக்குதல், குற்றம் சாட்டப்பட்டால் விசாரித்தல், இவைகளில் ஒன்றுக்கொன்று ஆலோசனையும் புத்தியும் சொல்லுதலும் ஏற்றுக்கொள்ளுதலும்.

(4.) லௌகிக விஷயங்களிலும் ஆவிக்குரிய விஷயங்களிலும் பலவீனம் உண்டாகும்பொழுது ஒன்று மற்றொன்றிற்கு உதவிசெய்தல்.

II.

ORGANIZATION OF A CHURCH.

சபை ஏற்படுத்துவதில் அனுசரிக்கும் ஒழுங்கு.

I. சபை.

தங்களைப் பிரத்தியேகமான ஒரு சபை ஆக்கிக்கொள்ள நினைக்கும் கிறிஸ்தவர்கள் மேற்படி விஷயத்தைக் குறித்து முடிவு செய்வதில் தங்களுக்கு ஆலோசனைசொல்லவும் கருத்துள்ள நடக்கையால் தங்களை உற்சாகப்படுத்தவும் தங்களுடைய செபக்கூட்டங்களையும் ஆலோசனைக்கூட்டங்களையும் முன்னின்று நடத்தவும் பத்தியும் அனுபவமுமுள்ள, நம்பத்தக்க ஒரு போதகனை, அல்லது உபதேசியானை, வரவழைத்துத் தங்களோடே சிலநாள் இருக்கும்படி செய்துகொள்ளவேண்டியது.

சபையாக அமைவதாகிய இந்த முக்கியமான விஷயத்தைத் தனித்தும் கூடியும் தீர்க்கமாய் யோசிக்காமல் முடிவு செய்யக்கூடாது. சபை ஏற்படுத்தப்படுவது நல்லதென்று விரும்புகிறவர்கள் அதினால் விளையும் நன்மைகளை அறியாதவர்களுக்குத் தெளிவாய்க் காண்பித்து அவர்களும் இவ்விஷயத்தில் உற்சாகமான நல்விருப்பம் கொள்ளும்படி ஏற்றப் பிரயத்தனம் யாவும் செய்யவேண்டியது.

சுவிசேஷ நியமங்களைத் தங்களுக்குள்ளும் அடுத்தவர்களுக்குள்ளும் கொண்டுசெலுத்தவும் சபை ஒழுங்கைக் கிரமமாய் நடத்திவரவும் போதுமான கிறிஸ்தவர்கள் எவ்விடத்தில் இருக்கிறார்களோ அவ்விடத்தில்தான் சபை ஸ்தாபிக்கப்படவேண்டும். ஆகையினால் சபையாகச் சேரப்போகிறவர்கள் கவனிக்கவேண்டிய சில முக்கியமான விஷயங்களாவன:—

1. பிரத்தியேகமான ஒரு சபையாய்க் கூடிவருகிறதற்குச் சிநேகத்திலும் உபதேச விஷயத்திலும் தங்களுடன் ஒற்றுமைப்படக்கூடிய கிறிஸ்தவர்கள் போதுமான பேர் சொற்ப தூரத்திற்குள் இருக்கிறார்களாவென்று பார்க்கவேண்டியது. இத்தனை பேர் இருக்கவேண்டுமென்று வேதத்தினாலாவது சபை வழக்கத்தினாலாவது ஏற்படவில்லை. சபை விஷயங்களை ஒழுங்காய் நடத்திக்கொள்ள போதுமானவர்கள் இருக்கவேண்டும். ஒரு சபை உண்டாவதற்கு ஏழு ஆண்கள் இருப்பது அவசியம் என்று முற்காலங்களில் எண்ணப்பட்டுவந்தது:

என்றாலும் இந்தத் தொகைக்கும் குறைந்தபேர்களால் சபைகள் ஸ்தாபிப்பதும் உண்டு. ஆனால் சீக்கிரத்தில் தொகை அதிகரிக்கும் என்கிற நம்பிக்கை இருந்தாலொழிய இவ்வளவு குறைந்த பேர்களைக்கொண்டு சபைகளை ஏற்படுத்தப்படாது.

2. தாங்கள் இருக்கும் இடத்தில் சபை ஏற்படுத்தினால் தேவகிருபையால் அது பிரபலமும் சுய பரிபாலனமுமுள்ளதாக ஏற்ற சனங்கள் சூழவிருக்கிறார்களா, அல்லது தாங்களும் அடுத்த சபையில் சேர்ந்துவிடுவது தேவனுடைய மகிமைக்கு ஏற்றதாயிருக்குமாவென்று யோசிக்கவேண்டியது.

3. ஆராதனைக்குத் தகுந்த இடம் இருக்கிறதா, அல்லது சபையுண்டானபின்னாவது கட்டப்பட்டுத் தாபரிக்கப்படுமாவென்றும் சுவிசேஷ நியமங்களைக் கிரமமாய் நிறைவேற்றி வருவதற்கு வேண்டிய ஒழுங்கு செய்யப்படுமாவென்றும் யோசிக்க வேண்டியது.

4. சபையை ஏற்படுத்தப்போகிற சங்கத்தார் அங்கிகரித்துவருகிற விசுவாசப்பிரமாணம், உடன்படிக்கை, இவைகளைச் சபை ஆகப்போகிறவர்கள் வாசிக்கக்கேட்டுச் சபைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். சபைக் கூட்டங்களில் இந்த விஷயங்களைப்பற்றிப் பூரண முடிவு செய்தபிறகு சபை ஆக விரும்புகிறவர்கள் ஒருவருக்கொருவர் இந்த விஷயத்தைப்பற்றித் தங்களுக்குள் இன்னும் கலந்து பேசிக்கொள்வதற்கும் தேவனுக்குச் செபத்தின் மூலமாய்த் தங்கள் விருப்பத்தை வெளியிடுவெ

தற்கும் ஒரு கூட்டமாகக் கூடிவரவேண்டும். சபா நாயகராகிய இயேசுகிறிஸ்துவின் பிரியம், மனம் இன்னதென்று அறிகிறதற்கும் உட்சபையார் புறச் சபையாராகிய எல்லோருடைய தொகை, நிலைமை, மனம், இவற்றைத் தெளிவாய் யோசித்து அறிவ தற்குமாக இடையில் சில நாள் தாமதிப்பது நல்லது. நன்றாய் ஆலோசித்ததின்பின் இந்த விஷயத்தை எல்லாரும் முறைப்படி அங்கிகரித்துக்கொண்டால் அந்த இடத்தில் ஒரு சபை ஏற்படுத்தப் படுகிறது அவசியமென்று காண்கிறதினாலே அதைக் குறித்துத் தங்களுக்கு ஆலோசனைசொல்லவும் ஒத்தாசைசெய்யவும் சபை ஆகப்போகிறவர்கள் அடுத்த சபைகள் கூடியதான ஆலோசனைச் சங்கம் வரும்படி காலத்தையும் இடத்தையும் குறிப்பிட்டு அழைக்கவேண்டும். அந்தக் கூட்டத்தின் நடபடிக்கை, சம்மதம், முதலானவைகளைப் பதிவு செய்துவைக்க ஒரு இராயசக்காரன் ஏற்படுத்தப் படவேண்டும். அழைக்கப்பட்ட சங்கம் வந்துகூடிம்பொழுது தங்கள் நோக்கம், தீர்மானம், முதலிய யாவையும் சங்கத்திற்கு விவரமாய்ச் சொல்ல ஆயத்தமாயிருக்கும்படி சில காரியஸ்தர்களும் ஏற்கவே நியமிக்கப்படவேண்டும். ஏற்படப்போகும் சபையிலே சேர விருப்பமுள்ளவர்கள் தாங்கள் முன்னிருந்த சபைகளிலிருந்து விலகிக்கொண்டதைத் தெரிவிக்கும் கடிதங்களை இந்தச் சங்கம் கூடு முன்னமே பெற்றுக்கொள்ளவேண்டும். ஒரு சபையிலும் சேராமலிருந்து புதிதாய்ச் சேர விரும்புகிற

வர்கள் இந்தப் புதுச் சபை ஏற்படும் நாளிலேயே சங்கத்தாரால் பரீட்சிக்கப்பட்டு அதில் சேர்க்கப்படலாம்.

சங்கமானது குறித்த நேரத்தில் கூடி அழைப்புப் பத்திரத்தில் கண்ட யாவரும் ஆசராயிருக்கிறார்களாவென்று பார்த்துத் தற்காலத்திற்குவேண்டிய உத்தியோகஸ்தரை நியமித்துக்கொண்டதின்பின், முதலாவது, சங்கம் கூடிவந்ததற்குக் காரணமான முன்னடபடிக்கைகளையும் அழைப்புப்பத்திரத்தையும் வாசிக்கக்கேட்டு, இரண்டாவது, புதுச் சபையில் இருக்கப்போகிறவர்கள் விசுவாசப்பிரமாணம், உடன்படிக்கை, இவைகளை ஏற்றுக்கொள்வதைப்பற்றிக் கவனித்து, மூன்றுவது, சபைச் செலவைப் பொறுக்க இன்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று விசாரிக்கவும் வேண்டும்.

சங்கத்தார் இவைகளை அங்கிகரித்துக்கொண்டால் சபையை ஏற்படுத்தவும் அது பிரத்தியேகமான சபையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதென்றும் மற்றச் சபைகளுக்கும் அதற்கும் ஐக்கியம் இருக்கிறதென்றும் அது தேவனுடைய நாமத்திலும் அவருடைய மகிமைக்காகவும் ஏற்படுத்தப்பட்டதென்றும் காட்டவும் பிரத்தியேகமான ஒரு ஆராதனைக்கூட்டம் வைக்கவேண்டும். சாதாரணமாய் இது சங்கத்தார் ஒத்துக்கொண்ட நாளிலேயே வைக்கப்படும்.

II. சபை உத்தியோகஸ்தர்.

1. இவ்விதமாய் ஸ்தாபிக்கப்பட்ட புதிய சபையைச் சேர்ந்தவர்கள் ஒரு போதகருடைய சம்ரட்

சணைக்காகத் தாங்கள் கொடுக்கவேண்டிய பங்களவு கொடுக்கத் திறமையும் கட்டுப்பாடுமுள்ளவர்களாகும்போது தங்களுக்கு ஒரு போதகனைத் தேடிக்கொள்ளவேண்டும். துவக்கத்தில் போதகருடைய சம்ரட்சணைக்காகச் சனங்கள் இத்தனையில் ஒருபாகம் கொடுக்கக்கூடியவர்களாய், அல்லது மனதுள்ளவர்களாய், இருக்கவேண்டுமென்று நிலையான சட்டம் வைக்க ஏலாது. சனங்கள் செயலுள்ளவர்களாகும்போது அவருடைய சம்பளம் முழுமையும் கொடுத்துவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சிறிதான சபைகள் போதகருடைய சம்ரட்சணை முழுவதையும் கொடுக்கத் திறமை அடையும் வரைக்கும் ஒரு போதகனை ஏற்படுத்துவதினால் உண்டாகும் நன்மைகளை அடையாமல் காத்திருக்கக்கூடாது. சீக்கிரமாய்த் தொகையில் பெருகவும் போதகர் சம்ரட்சணைக்கு முழுமையும் கொடுக்கவும் கூடியதாகக் காணப்படுகிற ஒரு சபை முதலில் போதகர் சம்ரட்சணையில் கால்வாசியாவது கொடுக்கவேண்டும்.

சபை தன் சக்திக்குக் குறைந்து கொடுக்கக் கொஞ்சமாகிலும் எண்ணக்கூடாது. இது எந்தச் சபைக்கும் அடுத்த ஒரு பொதுவிதி. போதகருக்குக் கொடுக்கும் இந்த அளவு எந்த விதத்திலும் சபையார் தங்களை ஒறுத்துக்கொள்ளவும் தாங்கள் போதகர் வேண்டுமென்கிற விஷயத்தில் மெய்

யான ஆவல் கொண்டவர்கள் என்பதைக் காட்டவும் போதகரால் அடையக்கூடிய நன்மைகளை எல்லாம் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும் அவர்களை தூண்டிவிடத் தக்கதாய் இருக்க வேண்டும்.

(1.) போதக உத்தியோகம் சபைக்கு விசேஷமானதாயும் ஒருவர் போதிக்கிற சபைக்கு மாத்திரமல்லாமல் சூழ்ந்திருக்கிற சபைகள் எல்லாவற்றிற்கும் பிரயோசனமானதாயும் எங்குமுள்ள கர்த்தருடைய சனங்களாகிய கிறிஸ்தவர்கள் யாவருக்கும் ஆதரவானதாயும் இருக்கிறதினால் எந்தச் சபையும் அடுத்த சபைகளுக்குத் தெரிவித்து அவைகளினது உதவியையும் நல்லாலோசனையையும் பெற்றுக் கொள்ளாமல் ஒருவரைத் தனக்குப் போதகராக ஏற்படுத்தப்படாது.

சபை ஏற்படுத்துகையில் செய்யப்படும் செபம், ஆலோசனை, முதலிய எத்தனங்கள் யாவும் இந்த விஷயத்திலும் செய்யத்தகும். மேலும் சபையாருக்குப் பிரியரும் போதகத்தொழிலுக்குப் பக்குவரும் தேவனால் அழைக்கப்பட்டவருமான ஒருவரைத் தேடித் தெரிந்துகொண்டு சபையினதுபேரால் அழைக்கும்படி காரியஸ்தர், மூன்று பேரை நியமிப்பது ஏற்றதாகும்.

சபையார் ஒருவரைத் தெரிந்து அழைத்ததின்பேரில் அடுத்த சபைகளாகிய சங்கத்தார் வந்து தாங்கள் தெரிந்துகொண்டவரைப் பார்த்தறிந்து ஆவிக்குரிய விஷயங்களில் அவர் அனுபவத்தையும் வேதசாஸ்திரம், திருச்சபை சரித்திரம், தத்துவஞானம், முதலியவற்றில் அவருடைய கல்வியையும் சபையொழுக்கத்திலும் போதகரொழுக்கத்திலும் அவருடைய படிப்பையும் மற்ற விசேஷங்களிலும் அவருடைய திறமையையும் பரீட்சிக்கவும் அவர் தங்களுக்குப் போதகராயிருக்கத் தகுந்தவரென்று கண்டால் அவரை அபிஷேகம்பண்ணவும் சபை ஐக்கிய சங்கத்தில் அவரை ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ளவும் சபை

தான் இருக்கிற இடத்தில் கூட்டங்கூடும்படி சங்கத்தை அழைக்கவேண்டும். சங்கம் கூடும்பொழுது சபையும் சபையால் அழைக்கப்பட்டவரும் சொல்வதெல்லாம் சங்கத்தார் கேட்டானபின் மற்றெல்லோரையும் அனுப்பிவிட்டுச் சங்கத்தார்மாத்திரம் தனித்திருந்து காரியத்தை யோசித்துத் தீர்மானம்பண்ணித் தங்கள் தீர்மானத்தை அறிவிக்கும்படி சபையை மறுபடியும் அழைக்கவேண்டும். சபை செய்தது சரியானதென்றும் அழைக்கப்பட்டவரை அபிஷேகம்பண்ணுவது தேவனுடைய மகிமைக்கு ஏற்றதென்றும் சங்கத்தார் தீர்மானித்தால் சபைக்குப் பிரியமான நேரத்தில் அதற்கேற்ற ஆராதனையை நடத்தி அவரைப் போதகராக ஏற்படுத்த வேண்டும். சபை செய்தவைகளாவது அழைக்கப்பட்டவரிடமாவது ஒழுங்கீனமிருக்குமாகில் சங்கத்தார் ஒழுங்குதவறினவரிடத்தில் குறை இன்னதென்று குறிப்பிட்டுக்காட்டி இன்னொரு காலத்தில் ஒழுங்குப்படி காரியத்தைச் செய்து முடிக்கவாவது வேறொருவரைப் போதகராகத் தெரிந்துகொள்ளவாவது சபைக்குப் புத்திசொல்லிக் கூட்டத்தை நிறுத்தலாம்.

அபிஷேகம்பண்ணுவது எப்படியென்றால் அபிஷேகம் பெறுகிறவர் தலைமேல் சங்கத்தார் கைகளை வைத்திருக்கையில் ஒருவர் செய்கிற செபத்தினால்தானே. இதைச் செய்தவுடன் சங்கத்திற்காக ஒருவர் புதிய போதகரை நோக்கி அவர் நிறைவேற்றவேண்டிய கடமைகளைக் கற்பிப்பதும் ஒருவர் அன்னியோன்னிய ஐக்கியத்திற்கு அடையாளமாக சங்கத்தார் பேரால் அவருக்கு வலது கை கொடுப்பதும் ஒருவர் சபையார் செய்யவேண்டிய கடமைகளை அவர்களுக்கு உணர்த்துவதும் விசேஷம். மேலும் முந்தியாவது பிந்தியாவது பிரசங்கம், முதலிய ஆராதனையை நடத்துவதும் பிரயோசனமாயிருக்கும்.

(2.) சபையால் அழைக்கப்பட்டவர் போதகப்பட்டம் பெற்றவரானால் அபிஷேகம்பண்ணாமலே அவரை இந்தச் சபைக்குப் போதகராக நியமிக்க வேண்டும். இதைச் செய்வதும் செபத்தினாலேதான். ஆகையால் இப்

படிப்பட்டவரை நியமிக்கையில் தலையில் கைகளை வைப்பதை நிறுத்திவிட்டு அபிஷேகசெபத்திற்குபதி லாக நியமிப்புசெபம் செய்து மற்றதெல்லாம் முன் குறித் தபடியே நடத்தவேண்டும்.

(3.) ஒருவரைச் சுவிசேஷகராக ஏற்படுத்துகையில் அவர் சேர்ந்திருக்கிற சபையே சங்கத்தை அழைத்து அவரை அபிஷேகம்பண்ணக் கேட்டுக்கொள்ளவேண் டும்.

போதகருடைய தொழில் விசேஷமாய் ஆவிக் குரியதாகையால் அது பிரத்தியேகமாகப் பின் னுல் எழுதப்படும்.

2. சபையின் ஆவிக்குரிய ஊழியத்திற்குத் துணையாயிருக்கிற லௌகிக ஒழுங்குக்கேற்றபடி மூப்பர், இராயசக்காரர், முதலிய உத்தியோகஸ்தர் நியமிக்கப்படவேண்டும்.

(1.) பொதுவான உத்தியோகஸ்தர்.

மூப்பராகிய உதவிக்காரர்களுடைய தொழில்:—ஏழை களை விசாரிப்பதிலும் இராப்போசனம் பரிமாறுவதிலும் சபையை மேல்பார்ப்பதிலும் போதகருக்கு உதவி செய் வதும் சபையின் பொக்கிஷத்தைப் பாதுகாப்பதும் போதகர் இல்லாத காலத்தில் அவருடைய வேலை நடந் தேறப் பார்ப்பதுமாம்.

இராயசக்காரருடைய தொழில்:—சபையில் சேர்தல், விலகல், ஞானஸ்நானம் பெறுதல், இவைகள் நடந்த தேதிகளையும் எல்லாச் சபையாரின் பேர்வரிசையையும் பதிவுசெய்வதும் ஆலோசனைக்கூட்டங்களையும் தீர்மா னிக்கவேண்டிய சங்கதிகளையும் தெரிவிப்பதும் அந்தச் சமயத்தின் நடபடிக்கைகளெல்லாவற்றையும் எழுதிவை த்து அப்போதைக்கப்போதே திருத்தப்படும்படி வாசிப்ப தும் சபைப்பத்திரமுதலிய கடிதங்களைச் சபைப் பேரால்

எழுதுவதும் சபைப் புஸ்தகங்களையும் சாசனங்கள்முத லியவற்றையும் பத்திரப்படுத்துவதும் வேண்டியபோது அவைகளுக்கு பிரதிசெய்து கொடுப்பதுமாம்.

பெரியதும் சிறியதுமான எல்லாச் சபைகளுக்கும் மேற்குறித்த இரண்டு உத்தியோகஸ்தர்களும் இருப்பது நல்லது. தகுந்த ஆட்கள் இல்லாதகாலத்திலோ போதகரே மற்ற உத்தியோகஸ்தராகவும் இருந்து அவர்கள் அலுவலை யும் நடத்திவர வேண்டும்.

(2.) விசேஷ உத்தியோகஸ்தர்.

அப்போஸ்தலரால் எழு உதவிக்காரர் நியமிக்கப்பட்ட துபோல பெரிய சபைகளில் ஒரு உதவிக்காரனுக்கு அதிகம் நியமிக்கலாம். இராயசக்காரருக்கு உதவியாக உபவிராயசக்காரரையும் நியமிக்கலாம். சபையின் பொது வான காரியங்களைத் தீர்மானிக்கவும் சபையாரின் விசே ஷமான காரியங்களில் ஆலோசனைசொல்லவும் போதகர், மூப்பர், இராயசக்காரர், இவர்களை ஒரு காரியஸ்தர் கூட்டமாக்குவது உண்டு. இவ்விதக் கூட்டத்தில் மற்றவர்களும் சேர்ந்திருக்கலாம். சபை இராயசக்காரரே இதின் நடபடிக்கைகளையும் பதிவுசெய்து வைக்கவேண்டும். சபைப் பெண்களுக்குள் ஏற்றகாரியங்களை நடத்தவும் போதகருக்கு உதவிசெய்யவும் கனம்பொருந்திய ஒரு சகோதரியை உதவிக்காரியாக நியமிப்பது அநேக சபை களுக்குப் பிரயோசனமாயிருக்கும்.

(3.) உதவிக்காரரைக் காலம் குறிப்பிடாமல் நியமிப் பது வழக்கமாயினும் பொதுவாய்ப் போதகரைத் தவிர எந்த உத்தியோகஸ்தரையும் வருஷத்திற்கொருமுறை தெரிந்து நியமிப்பது நலமாயிருக்கும். குறிப்பிட்ட கால த்திற்குமுன் எந்த உத்தியோகமாவது காலியாகுமானால் அதில் தற்காலத்திற்கென்று ஒருவரை நியமிக்கலாம்.

(4.) எந்தச் சபையிலும் காரியத்திற்கும் சமயத்திற்கும் ஏற்றபடித் தற்காலக் காரியஸ்தர் ஏற்படுத்தப்படுவார்கள்.

III.

FUNCTIONS OF A CHURCH.

சபைத்தொழில்.

I. சபைக் கூட்டம்.

ஆராதனைக்கென்று வைக்கப்படும் கூட்டங்கள் தவிர சபைக் காரியசம்பந்தமாயும் கூட்டங்கள் வைக்கப்படுவதுண்டு. சங்கங்களுக்கு, அல்லது மற்ற ஆலோசனைக்கூட்டங்களுக்கு, போகப் பிரதி காரியஸ்தர்களை நியமிப்பது, சபையில் ஆட்களைச் சேர்ப்பது, சபையாருக்கு விலக்குச்சீட்டுமுத லானவை கொடுப்பதற்குச் சம்மதஞ்சொல்வது, தர்க்கமில்லாத விஷயங்களைப் பேசித்தீர்ப்பது, முதலான இவைபோன்ற காரியங்களையெல்லாம் ஒய்வுநாளின் கிரமமான ஆராதனை முடிந்தபின் சபையார் எல்லாரும் கூடிப் பேசிக்கொள்ளலாம். ஆனால் பேசப்படும் விஷயம் சமுசயமும் ஆலோ சிக்கத்தக்கதுமாயிருந்தால் சபையார் குறிக்கிற, அல்லது சங்கத்தை அழைக்கிற, ஒரு காலம்வரைக் கும் அது நிறுத்திவைக்கப்படவேண்டும். சாதா ரணமாய் இவ்விதக் கூட்டங்கள் இராப்போசனத் துக்கு ஆயத்தக்கூட்டம் நடக்கும் தினத்தில் வைக் கப்படும். ஆதலால் அவசரமில்லாத விஷயங்களை யெல்லாம் இந்தக் காலம்வரைக்கும் நிறுத்திவைக்க லாம்.

மேலும் செபஞ்செய்வதற்காகவும் சென்ற வருஷம் நடந்த வேலையைத் திரும்பப்பார்வையிடுவதற்காகவும் கணக்கு, முதலியவைகளை அறிக்கையிடுவதற்காகவும் அடுத்தவருஷத்தின் வேலையைப் பற்றி ஒரு ஒழுங்கு செய்துகொள்வதற்காகவும் வருஷமுதலில் வருஷாந்தரக் கூட்டம் வைக்கப்படவேண்டும். இப்படிச் செய்வது சபைகளுக்கு வழக்கமாயும் அவசியமாயும் இருக்கிறது. இந்த வருஷாந்தரக் கூட்டத்தில் சபையின் போதகர், இராயசக்காரர், முதலான உத்தியோகஸ்தர் சபையில் சேர்ந்தவர்கள், நீக்கப்பட்டவர்கள், பிறப்பு, விவாகம், மரணம், சபையாருடைய பத்திவிருத்தி, முதலானவை; பலகாரியங்களுக்காகச் சபையார் கொடுத்த தர்மம்; சமீபித்த இடங்களிலும் மற்ற மதஸ்தர்களுக்குள்ளும் செய்யப்பட்ட வேலை; செபக்கூட்டங்கள், மாதாந்தக் கூட்டங்கள், ஓய்வுநாள் பள்ளிக்கூடம், தினப் பள்ளிக்கூடம்; கட்டடம் பழுதுபார்த்தல், முதலான பல செலவுகள்; போதகருடைய சம்பளம்; இவைமுதலானவைகளைப்போன்ற காரியங்களைப்பற்றி அறிக்கையிட ஆயத்தமாயிருக்கவேண்டும். மேலும் புதிய வருஷத்து வேலைகளை நடப்பிப்பதற்கேற்ற சில காரியஸ்தரை நியமித்து அவ்வேலைகள் இன்னவகையாய்ச் செய்யப்படவேண்டும் என்றும் சபையார் கொடுக்கும் தர்மப்பணத்தை இன்ன சங்கங்களுக்கும் இன்ன விஷயங்களுக்கும் செலவழிக்க வேண்டும் என்றும் தீர்மானஞ்செய்யவேண்டும்.

முக்கியமும் விசேஷமுமான காரியம் செய்ய வேண்டியபோது விசேஷித்த கூட்டம் வைக்கவேண்டும். மேலும் அப்படிப் பேசவேண்டிய முக்கியவிஷயம் இன்னதென்று மற்றும் சாதாரணமான செபக்கூட்டங்களிலே எல்லாருக்கும் தெரியப்படுத்திவைக்கவேண்டும். யாவரும் இந்தக் கூட்டத்தை அறிந்து அதற்கு வர ஆயத்தப்படும்படி முந்தியே வெளியரங்கமாய் அறிவிப்பது மிகவும் அவசியம். கூட்டங்கூடுகிற நாளுக்கு முந்தின ஓய்வு நாளில் அறிவித்தால் போதுமானதென்று எண்ணப்படுகிறது. போதகரில்லாத காலத்தில் அந்தந்தச் சமயங்களுக்குமாத்திரம் ஒரு தலைவரை ஏற்படுத்திக்கொள்ளலாம். வருஷாந்தரக் கூட்டத்திலேதான் உத்தியோகஸ்தரைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சபையில் சேர்ந்த எல்லோரும் சபைக்கூட்டங்களுக்கெல்லாம் வரலாம். சபை விஷயங்களைப் பொருப்பாய்ப் பார்க்கக்கூடிய, தகுந்த வயதுள்ள புருஷர்கள் யாவரும் தீர்மானம்பண்ணுவதில் தாராளமாய்த் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட இடம் பெறுவார்கள். சபையிலே சேராதவர்கள் சபை அனுமதியின்பேரில்தான் பேச இடம் பெறுவார்கள். ஒரு விஷயத்தைப்பற்றிச் சம்மதங்கேட்கையில் சபையிலுள்ள மிகுதியானவர்களுடைய தீர்மானமே சபையின் தீர்மானமாகும். மிகுதியானவர்களுக்குச் சம்மதமில்லாத விஷயத்

தை விட்டுவிடவேண்டும். அல்லது அவர்கள் சம்மதப்படும்வரையில் காத்திருக்கவேண்டும்.

சபை ஆலோசனைக் கூட்டங்களை நடத்தும் விதிகள் கூட்டம் கிரமமாய் நடத்தப்படுவதற்கும் எவர்களும் பேசப்படும் விஷயத்திற்கேற்க தன் தன் அபிப்பிராயத்தைத் தாராளமாய் வெளியிடுவதற்கும் மிகுதியானவர்கள் காட்டும் சம்மதத்தை அறிந்து அதின்படி தீர்மானம் செய்வதற்கும் ஏற்ற விதமாய் இருக்கவேண்டும்.

1. போதகரே சபைக்கூட்டங்களை நடத்தவேண்டும்.

(1.) அவரில்லாத சமயங்களில் கூட்டம் தொடங்குகிற நேரத்தில் யாவரும் வந்து கூடினவுடன் யாராவதொருவர் எழுந்து சபை கூடியிருக்கிற விஷயம் இன்னதென்று காட்டி அக்கூட்டத்திற்குத் தலைவராக ஒருவரைத் தெரிந்து ஏற்படுத்துவது அவசியமென்று சொல்லித் தாமே ஒருவரைக் குறிப்பிட்டுக்காட்டி மற்றவர்களுடைய சம்மதத்தின்பேரில் அவர் நியமிக்கப்படலாம். சபைமூப்பராவது இராயசக்காரராவது இருந்தால் அவர்களே இந்த விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டியது.

தமது மனம்போனபடி கூட்டத்தை நிறுத்துகிறதும் தாம் விரும்பாததையிட்டுப் பிறர் ஒரு காரியத்தைப்பற்றிச் சம்மதம் சொன்னால் அவர்களைக் கேட்காதபடி நடத்துகிறதும் ஒரு காரியத்தை ஒழுங்குபண்ண சபையைக் கூட்டுமென்றால் அதற்கு மறுக்கிறதும் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு முற்றிலும் விரோதம் செய்யப்பார்க்கிறதும், இவைபோன்ற நீதிக்கும் நேர்மைக்கும் முற்றும் விரோதமான மற்றெந்தக் காரியங்களுக்கும் இந்த அதிகாரத்தை உபயோகிக்கப் பார்க்கிற எவர்களும் இந்தத் தலைமை உத்தியோகத்திற்குத் தகுந்தவர்களல்ல.

(2.) கூட்டத்தை நடத்துவதில் தலைவர் கவனிக்கவேண்டிய ஒழுங்கு:—

ஒவ்வொருவர் சொல்வதையும் தாம் கேட்டுக்கொண்டு மற்றவர்களுக்குத் தெரிவிப்பதும் ஒவ்வொரு கேள்விக்கும் சம்மதம் கேட்டு அதற்குண்டான முடிவைப்பற்றிச் சொல்வதும் பேசுகையில் கூட்டத்தாருக்குள் மரியாதையும் கிரமமும் இருக்கப்பார்ப்பதும் கூட்டத்தில் தக்கவை தகாதவைகளைக்குறித்து முடிவுசெய்வதும் காரியஸ்தர் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்கும்போது அப்படிச்செய்வதும் சபையாருக்கு வரும் கடிதம், விண்ணப்பம், இவைகளை வாங்கிக்கொண்டு சபையாருக்குத் தெரிவிப்பதுமாம்.

தலைவர் கொஞ்சநேரம் போய்விட நேரிட்டால் அவர் யாரையாவது தம்முடைய வேலையைப் பார்க்க நியமித்துவிட்டுப் போகலாம். அல்லது யாதொரு ஆட்சேபமும் இல்லாதிருந்தால் இராயசக்காரரையே முகாமையாயிருந்து நடத்தும்படி செய்யலாம்.

தலைவர் யாதொரு காரியத்தைப்பற்றி நியாயஞ்சொல்ல விரும்பினால் தாம் தற்காலத்திற்கு தலைவராய் இராமல் அப்படிச் செய்யவேண்டும்.

2. சபை இராயசக்காரரே எல்லாக் கூட்டங்களின் நடபடிக்கைகளையும் பதிவுசெய்யவேண்டும்.

(1.) அவரில்லாவிட்டால் தற்காலத்திற்கென்று ஒருவரை நியமித்து அவர் அக்கூட்டத்தின் நடபடிக்கைகளை எழுதிவைத்து இராயசக்காரரிடம் ஒப்புவிக்கவேண்டும்.

(2.) கூட்டம் நடக்கையில் இராயசக்காரர் கவனிக்கவேண்டிய ஒழுங்கு:—

கூட்டத்தின் நடபடிக்கைகளில் ஒவ்வொருவரும் சொல்லுகிற அபிப்பிராயங்களையெல்லாம் எழுதாமல் சபையார் செய்த முடிவு, தீர்மானம் இன்னதென்று எழுதிவைப்பதும் பேரட்டவணைப்படி சபையாருடைய பேர்

களை வேண்டிய காலங்களில் கூப்பிடுவதும் வாசிக்க வேண்டிய கடிதம்முதலானவைகளை எழுந்து நின்று வாசிப்பதும் ஒருவரைப்பற்றிய சங்கதி தீர்மானிக்கப்பட்டால் அதை அவருக்கு எழுதித்தெரிவிப்பதுமாம்.

3. கூட்டத்தில் சபையார் கவனிக்கவேண்டிய ஒழுங்கு.

(1.) முன் கூட்டத்தின் நடபடிக்கைகளை இராயசக்காரர் வாசித்ததின்பேரில் பேசப்படவேண்டிய விஷயங்களைச் சபைத்தலைவர் குறிப்பிட்டுக் காட்ட பேசவேண்டிய சங்கதிகளின் ஒழுங்கைச் சபையாரே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட காரியங்கள் பேசி முடிவானவுடன் சபையில் யாராவது தான் விசேஷித்தது என்று தான் எண்ணுகிற காரியம் இருந்தால் அப்போதே தெரியப்படுத்திக்கொள்ளவேண்டும்.

(2.) சபையிலுள்ள ஒருவர் ஒரு காரியத்தைப்பற்றித் தூண்டி மற்றொருவரும் அதற்கு அனுசரணையாய்ப் பேசினால்தான் அந்தக் கூட்டத்தில் அது தீர்மானிக்கப்படுவதற்காவது நிறுத்திவைக்கப்படுவதற்காவது ஏற்றுக்கொள்ளப்படும்.

தீர்மானித்தலில் தூண்டப்பட்டபடியே தீர்மானித்தல், திருத்தித் தீர்மானித்தல், தள்ளிவிடல் ஆகிய மூன்று வகை உண்டு.

நிறுத்திவைத்தலில் ஒரு கெடுவைக்குறித்து நிறுத்திவைத்தல், காரியஸ்தரை ஏற்படுத்தி அவர்கள் விசாரித்துத் தெரியப்படுத்தும் வரையில் நிறுத்திவைத்தல், கெடுவில்லாமல் நிறுத்திவைத்தல் ஆகிய மூன்று வகை உண்டு. கெடுவில்லாமல் நிறுத்திவைத்தல் ஒரு வகையாய்த் தள்ளிவிட்டதற்குச் சமானந்தான்.

சபையில் தூண்டப்பட்ட ஒரு சங்கதியை எழுதித்தரவேண்டும் என்று ஒருவர் கேட்டால் அப்படியே செய்யவேண்டும்.

பேசப்படும் காரியத்தை நிறுத்திவைக்கவேண்டும் என்று தூண்டினவனுக்கு மனமிருந்து மற்றவர்களும் ஆட்சேபியாமலிருந்தால் அதை அப்படியே நிறுத்திவைக்கலாம்.

(3.) பேசப்படும் விஷயத்தைப்பற்றி ஒவ்வொருவரும் தனக்கிருக்கும் அபிப்பிராயத்தைச் சொல்லலாம். ஆனால் எவரும் தான் பேசவேண்டும் என்று எழுந்துநிற்கையில் தன் பெயரைத் தலைவர் கூப்பிடுமுன் பேசக்கூடாது. ஒரே காலத்தில் இரண்டுமூன்று பெயர் எழுந்துநிற்பார்களானால் முதலில் எழுந்தவருடைய பெயரையே தலைவர் கூப்பிடவேண்டும்.

காலம் வீணாய்ப் போகும்படி ஒருவனே திரும்பத் திரும்பப் பேசுவது யோக்கியமல்ல. ஒவ்வொருவன் பேசுவதும் பேசப்படும் விஷயத்திற்குச் சம்பந்தப்பட்டதாயும் மரியாதையுள்ளதாயும் தலைவரைப்பார்த்துச் சொல்வதாயும் இருக்கவேண்டும்.

எவனாவது காரியத்திற்குச் சம்பந்தப்படாததும் மரியாதைக் குறைவானதுமானவைகளைப் பேசினால் தலைவர் உடனே அவனைத் தடுத்து அவன் சொல்லிய வார்த்தைகளைக் குறிப்பிட்டுக்காட்டி இனிமேல் அப்படிப் பேசாமலிருக்கும்படி செய்யவேண்டியது.

(4.) தூண்டப்பட்ட விஷயத்தைத் திருத்துவது நல்லது என்று ஒருவருக்குக் காணப்பட்டு மற்றொருவரும் அதற்கு அனுசரணையாயிருந்தால் அதைப்பற்றி யோசிக்கக்கூடும்.

இப்படித் திருத்தியதை இன்னும் ஒருதரம் திருத்தலாம். அதற்குமேல் திருத்தியதைத் திருத்துவது ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. ஆனாலும் திருத்தப்படாத விஷயத்தைத் திருத்துவதற்குத் தடையில்லை.

திருத்தமோ தூண்டப்பட்ட விஷயத்தை விலக்குகிறதாயிருக்கக்கூடாது.

(5.) தீர்மானத்தின்பேரில் சம்மதங்கேட்கையில் ஒருவரும் அதைப்பற்றித் தப்பிதமான அபிப்பிராயம் கொண்

டிராதபடி தலைவர் எழுந்துநின்று எல்லாருக்கும் விவரப்பட அதைத் தெளிவாய்ச் சொல்லித் தங்கள் சம்மதத்தைக் கை நீட்டுதலினாலாவது எழுந்து நிற்பதினாலாவது காட்டும்படி சபையாருக்குச் சொல்லவேண்டும். அப்பொழுது சம்மதமுள்ளவர்கள் இத்தனைபேர், சம்மதமில்லாதவர்கள் இத்தனைபேர் என்று கணக்கிட்டுச் சொல்லவேண்டும். அப்படிச் செய்வதில் தொகை தவறிற்றென்று யாரும் நினைத்தால் மறுபடியும் சம்மதங்கேட்டுக் கணக்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளலாம். அதற்குச் சபையாரும் இணங்கவேண்டும். ஆனால் அந்தச் சமயத்திலேயே இன்னொன்றிற்காகச் சம்மதங்கேட்கத் தொடங்குமுன் அப்படிக் கேட்கவேண்டும். ஒன்றிற்காகச் சம்மதங்கேட்கத் தொடங்கியபின் அதைப்பற்றி மறுபேச்சு பேசக்கூடாது.

சம்மதங்கேட்கையில் கடைசியாய்த் திருத்தப்பட்ட சங்கதி சபையாரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் முதலில் அதன்பேரில் சம்மதங்கேட்கவேண்டும். அப்பொழுது முதல்தரம் திருத்தப்பட்டதின்மேல் கேட்கவேண்டும். இரண்டாம் திருத்தத்தைத் தீர்மானித்ததினால் முதல் திருத்தம் விலக்கப்பட்டிருக்குமாகில் அதின்பேரில் சம்மதங்கேட்பது அவசியமில்லை. கடைசியில் தூண்டப்பட்ட விஷயத்தைக் குறித்து முடிவான சம்மதம் கேட்கவேண்டும்.

உதாரணமாக, தேவாராதனைக்கு அநேக நாளாக வராமலிருக்கிற ஒரு சபையானைப்பற்றி விசாரணைசெய்யவேண்டுமென்று சபைக்கூட்டத்தில் பேசப்படும்பொழுது தூண்டுகிறவன் காகிதத்தின் மூலமாய் விசாரிக்கவேண்டும் என்று சொல்வதாய் வைத்துக்கொள்வோம். இன்னொருவன் எழுந்து காகிதத்தின் மூலமாயல்ல, போதகர்மூலமாய்ச் செய்யவேண்டும் என்பானானால் அது முதல் திருத்தமாம். மூன்றாவதொருவன் போதகனைமாத்திரம் குறிக்காமல் போதகனையும் சபையார் இரண்டுபேரையும் குறிக்கவேண்டும் என்றால் அது இரண்டாம் திருத்தம் அதாவது திருத்தத்தின் திருத்தமாம்.

பலதேதி, பலதொகையான பணம், இவைகளைப்பற்றிச் சம்மதங்கேட்கவேண்டிய காலத்தில் கடைசியான தேதிக்கும் பெருந்தொகையான பணத்திற்கும் முந்திச் சம்மதங்கேட்கவேண்டும். தூண்டப்பட்ட விஷயத்தில் பல கேள்விகள் அடங்கியிருந்தால் அதைப் பிரித்து ஒவ்வொரு கேள்விக்கும் சம்மதங்கேட்டு அறியவேண்டும்.

சம்மதங்கேட்டுத் தீர்மானிக்கப்பட்டபிறகும் அத்தீர்மானத்திற்குச் சம்மதங்கொடுத்த ஒருவன் அந்தச் சங்கதி முழுவதையும் திரும்ப எடுத்துப் பேசும்படி கேட்டுக்கொள்ளலாம். அப்பொழுது தலைவர் பேச்சுக்கு இடங்கொடாமல் அதைத் திரும்ப எடுத்துப் பேசுவதற்கு உடனே சபையார் சம்மதத்தைக் கேட்கவேண்டும். சபையார் சம்மதித்தால் அதைப் புதுச் சங்கதிபோல் எண்ணிக்கொண்டு மறுபடியும் பேசி சபையார் உத்தமம் என்று நினைக்கிற பிரகாரம் சம்மதத்தின் மூலமாய்த் தீர்மானம் செய்யலாம்.

(6.) காரியஸ்தரில் இரண்டு வகை உண்டு.

முதலாவது, நிலையான காரியஸ்தர்: இவர்கள் ஒரு விசேஷித்த காரியத்தின் முழு அலுவல்களையும் தாங்களே பார்த்து வருகிறவர்கள்; உதாரணமாக, சபையினுடைய தர்மவிஷயம் முழுவதையும் ஒருவர் பொறுப்பில் விட அவர் பார்த்து வருவதுபோல்.

இரண்டாவது விசேஷ காரியஸ்தர்: இவர்கள் சபையார் தீர்மானிக்கவேண்டிய விஷயங்களைப் பார்த்தறிந்து இன்னின்ன விஷயங்களை இன்னின்ன விதமாய்த் தீர்மானிப்பது நல்லது என்று சபையாருக்கு யோசனைசொல்லும்படி அந்தந்த விஷயத்திற்கும் காலத்திற்கும் மாத்திரம் தெரிந்து ஏற்படுத்தப்படுகிறவர்கள். இவர்களை நியமிக்கவேண்டிய காலத்தில் சபையாருக்குப் பிரியமானால் தலைவரே காரியஸ்தரைத் தெரிந்து ஏற்படுத்தலாம். அல்லது சபையாரே தெரிந்துகொள்ளலாம். விசாரிக்கவேண்டிய சங்கதி மிகவும் விசேஷித்ததானால் சீட்டின் மூலமாய்க் காரியஸ்தரைத் தெரிந்துகொள்வது உத்த

மம். அவர்களில் முதலாவதாகத் தெரிந்துகொள்ளப் பட்டவரே அவர்களுக்குள் எப்போதும் தலைவராக இருந்து வருவார். தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லா விஷயங்களின் விபரத்தையும் சபையார் தங்களுக்குச் சொல்லாத பட்சத்தில் அவர்கள் தாங்களே கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.

தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கதி ஒரு ஒழுங்கிற்கு வந்ததின்பின் அதை எழுதித் தலைவர் மூலமாய்ச் சபையின் இராயசக்காரருக்குக் கொடுக்கவேண்டும். அல்லது தங்கள் தலைவரைக்கொண்டே சபையார்முன் வாசிக்கவாவது வாய்மொழியாய்ச் சொல்லவாவது செய்ய வேண்டும். சபையார் இந்த அறிக்கையைக் கேட்டவுடன் அதை ஏற்றுக்கொள்வதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டும். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டால் அதில் தாங்கள் தீர்மானிக்கவேண்டிய காரியங்களை எடுத்துப் பேசி ஒழுங்குப்படித் தீர்மானம் பண்ணலாம்.

இப்படி அவர்கள் ஆலோசித்துச் செய்த ஒரு விஷயத்தில் பின்னும் அவர்கள் யோசனை சொல்ல அவசியமில்லையாகில் அவர்களை நிறுத்திவிடலாம். ஆனால் அவசியம் காணும்போது அவர்கள் திரும்பவும் ஒரு முறை கூடி இன்னும் அதிகமாய் ஆலோசித்துச் சொல்ல அவர்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது."

II. ஆலயப் பிரதிஷ்டை.

1. ஆலயத்திற்கு மூலைக்கல் வைப்பது.

மூலைக்கல் வைப்பதற்கு முந்தியே அஸ்திபாரம் சரியான தளமாய் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்க வேண்டும். பின்னால் சொல்லுகிறபடி மூலைக்கல்லுக்குள் வைக்கும் பொருள்கள் பத்திரமாயிருக்கும்

படி பூமியின் தளத்திற்குத் தாழ்வில் அது வைக்கப் படவேண்டும். சாதாரணமாய் அதை வடகிழக்கு மூலையில் வைக்கிறார்கள். சாசனங்கள், நாணயங் கள், முதலானவை அடங்கிய தகரப்பெட்டியாவது பாத்திரமாவது வைக்கவேண்டுமானால் அவைகள் எக்காலத்திலும் கெட்டுப்போகாமல் பதனமா யிருக்கும்படி அவைகளை மூடி முத்திரிக்க ஏற்ற குழி ஒன்று அந்தக் கல்லில் வெட்டியிருக்கவேண் டும். தண்ணீர் எவ்வளவும் அந்தக் குழிக்குள் இறங்காதபடிக்கு அதை இறுக்கி மூடுகிறதற்கு ஒரு மூடியும் ஆயத்தஞ்செய்திருக்க வேண்டும். வெகு காலத்திற்குப்பின்பு எடுத்துப் பார்த்தாலும் வாசிப்போர்க்குச் சபையைப்பற்றியும் ஆலயம் கட்டப்பட்ட காலத்தைப்பற்றியும் இன்பம் கொ டுக்கத்தக்கதாக அச்சபையின் சரித்திரம், அந்தக் காலத்தில் வழங்கின நாணயம், சமாசாரப் பத்தி ரம், முதலியன யாவும் அந்தக் குழிக்குள் ஸ்தா பிக்கப்படலாம்.

அந்த நேரத்தில் சமயோசிதமான பிரசங்கம் பண்ணி அந்தச் சபையைப்பற்றிய சுருக்கச் சரித் திரத்தையும் அவ்வாலயம் கட்டும்படி உண்டாயி ருந்த அவசியம், முதலான வரலாறுகளையும் விவர மாய்த் தெரிவிப்பது ஏற்றதாகும். அந்தக் கல்ல ருகே போதகர் நின்று அதில் வைக்கப்போகிற பெட்டியைக் கூடிவந்திருக்கிறவர்களுக்குக் காண் பித்து இன்னின்னது அதில் இருக்கிறது என்று குறித்திருக்கிற ஜாப்தாவை வாசிக்கவேண்டும்.

போதகரும் கட்டடத் தலைவரும் கூடிக் கல்லை அதின் ஸ்தானத்தில் இலகுவாய் வைக்கும்படி இயந்திரம் அல்லது வேறே சூக்ஷவகை முந்தியே ஆயத்தப்படுத்தியிருக்கவேண்டும். ஆராதனை முடிந்தபின் போதகர் அந்தப் பெட்டியைக் குழிக்குள்ளாக வைத்து மூடிவிட, பிறகு அவரும் அவருக்கு உதவியாக ஆலயத்தைக் கட்டுகிறவரும் கல்லை அதின் ஸ்தானத்தில் வைத்து ஒழுங்குபடுத்த வேண்டும்.

2. தேவாலயப் பிரதிஷ்டைக்கிரமம்.

தேவாலயப் பிரதிஷ்டை ஆராதனையில் செபம், வேதவாசிப்பு, முதலியவை முடிந்தானபின் அந்தச் சபையைப் பற்றிய பொழிப்பான சரித்திரமாகிலும் கோவில் கட்டடம், அதின் அகலம், நீளம், முதலிய விவரங்களாகிலும் எழுதி வாசிக்கவேண்டும்.

தேவாலயத்தைப் பிரதிஷ்டைசெய்வது செபத்தினலேதான். இந்தச் செபத்தில் போதகர் கட்டடத்தை தேவனுடைய ஆராதனைக்கென்று ஒப்புக்கொடுத்து அது கட்டப்பட்ட நோக்கமும் அதில் வந்து கூடுகிறவர்களும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட மன்றுடுவார். இந்தப் பிரதிஷ்டை செபம் செய்யுமுன் மெய்யான தேவனை வணங்கும் ஆராதனைக்காக இவ்வீட்டைப் பிரதிஷ்டை செய்ய யாவரும் கூடி வந்திருக்கிறார்கள் என்று சொல்லி அதற்காகச் செய்யப்படும் செபத்தில் எல்லாரும் ஐக்கியப்

படும்படி போதகர் அவர்களைத் தூண்டுவது ஏற்ற தாயிருக்கும்.

III. ஆட்களைப் புதிதாய்ச் சபையில் சேர்த்தல்.

இரட்சிப்புக்கு அவசியமான சுவிசேஷ போதனைகளை அறிந்து அவைகளை ஏற்றுக்கொண்டு அவைகளின்படி தேவபத்தியாய் நடந்துவருகிறவர்களென்று தகுந்த அத்தாட்சியுடையவர்களையே கர்த்தருடைய சபையில் சேர்க்கலாம்.

ஒருவனைச் சபையில் சேர்த்துக்கொள்ளுமுன் சபையின் அங்கங்களானவர்கள் மேற்கண்ட விஷயங்களில் அவனைப்பற்றிப் பூர்த்தியாய் அறிந்திருக்கவேண்டியது. மேலும் அப்படிச் சேர விரும்புகிறவனைச் சபையார் பரீட்சிக்கவும் வேண்டியது. இது தொன்றுதொட்டு வழக்கமானதும் மிகவும் முக்கியமானதுமாயிருக்கிறது.

சபையில் சேர விரும்புகிறவனுடைய பெயரை இரண்டொரு வாரத்திற்கு முந்தியே பிரசித்தப்படுத்துகிறது சபையின் வழக்கம், ஒழுங்கு, இவைகளுக்கு ஏற்றதாயிருக்கிறது. ஆராதனை நேரத்தில் தானே அப்படிப்பட்டவனைப்பற்றித் தீர்மானிப்பது நல்லது.

அப்படிப்பட்டவனைப் பரீட்சிக்கும் வகை இரண்டு. சபையார் எல்லாரும் இருக்கையில் போதகரும் கேள்விகேட்க விரும்பும் பிறரும் அவனை தங்கள்முன் நிறுத்திப் பரீட்சிக்கலாம். அல்லது,

போதகனையும் சபையின் உத்தியோகஸ்தனையும் அவசியமானல் இன்னும் இரண்டொருவனையும் பரீட்சிக்கும் காரியஸ்தராக நியமித்து அவர்களைக் கொண்டு முடிவைத் தெரிந்துகொள்ளலாம்.

சபையில் சேர விரும்புகிறவர்கள் மறுமொழி சொல்லும்படி பரீட்சிக்கிறவர்கள் அவர்களைக் கேள்விகள் கேட்கலாம்; அல்லது, தங்கள் பக்திக்குரிய அனுபவம், விசுவாசம், சபையில் சேர உண்டான விருப்பம், முதலியவைகளைப்பற்றி அவர்களே நெடுகச் சொல்லிக்கொண்டுபோகும்படி செய்து கேட்டுக்கொண்டிருக்கலாம்.

இவ்விரண்டு வகைகளும் சமையத்திற்குத் தக்கதாகத்தான் பயன்படும். ஆதலால் அந்தந்த ஆளுடைய நிலைமை, பிரியம், முதலானவைகளைக் கவனித்து அவைகளில் ஏற்றதை அனுசரிக்கவேண்டும். ஆனாலும் சபையார் முன்னிலையிலேயே எப்போதும் பரீட்சை நடத்திவருவது நல்லது. இவ்விதமான பரீட்சைக் கூட்டங்களுக்கு வரும்படி போதகர் சபையாரைத் தூண்டுவது நல்லது; ஏனென்ருல் குணப்பட்ட ஒருவனுடைய சொந்த அறிவையும் கிறிஸ்துவைப்பற்றிய அவனுடைய சொந்த கிறிஸ்த அனுபவத்தையும் பற்றிய கேள்விகளைக் கேட்கும்போது சபையாருக்குப் பிரயோசனமான படிப்பினைகள் உண்டாகும். மேலும் சபையார் அவனைத் தங்களோடே சேர்த்துக்கொள்ளப் போகிறபடியால் அவனுடைய வேதஅறிவு, முதலானவைகளைப்பற்றி அறிந்திருப்பது மிக அவசியமே.

பரீட்சையின் நோக்கமாவது. சபை நம்முடைய நியமிப்பாயிராமல் கிறிஸ்தேசுவினுடையதாயிருக்கிறபடியால் மெய்க்கிறிஸ்தவனென்று காணப்படும் எவனையும் சேர்த்துக்கொள்ளமாட்டோமென்று சொல்ல எந்தச் சபைக்கும் அதிகாரமில்லை. மேலும் கர்த்தரும் ஆவியின் ஏவுதல் அடைந்த அப்போஸ்தலரும் கற்பியாத எந்த நிபந்தனைக்கும் உட்படவேண்டுமென்று சேர விரும்புகிறவர்களிடத்தில் கேட்பதும் நியாயமில்லை. ஆகையால் சபையில் சேரப்போகிறவன் மெய்க் கிறிஸ்தவனோ அல்லவோவென்று அவனுடைய அறிவு, விசுவாசம், இவைகளைக் கொண்டும் விசேஷமாய் அவனுடைய நடக்கையைக் கொண்டும் அறிவதே பரீட்சையின் நோக்கமாம்.

சபையிலே சேரப்போகிறவர்கள் வேதமார்க்க சத்தியங்களை அறிந்தவர்களாயிருக்கும்படி சபையின் போதகராவது உபதேசியாராவது கிறிஸ்துவின் ஜீவிய விருத்தாந்தத்தையும் மற்ற வேத சரித்திரங்களையும் படிப்பித்திருக்கவேண்டியதுமல்லாமல் மெய்ப்பத்தியாய் நடப்பதற்கான மனந்திரும்புதலையும் பாவம், மறுஜனனம், பரிசுத்தஆவியின் நடத்துதல், முதலானவைகளையும் பற்றிப் போதித்துணர்த்தி சபையின் விசுவாசம், உடன்படிக்கை, பத்துக்கற்பனை, கர்த்தருடைய செபம், வேதவாக்கியங்கள், கிறிஸ்தவனுடைய கடமைகள், முதலானவைகளையும் அவர்களுக்குப் படிப்பித்திருக்கவேண்டியது.

இராப்போசன காலங்களில் வழக்கமாய் இவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறுர்கள். இது ஒரு காரியத்திற்கு அனுகூலமானதாயிருந்தாலும் எப்போதும் இந்தக்காலத்திலேயே இது நடக்கவேண்டுமென்று அவசியமில்லை. மற்றச் சபைகளிலிருந்து கடிதம் கொண்டுவருகிற பேர்களை இதுவரைக்கும் காத்திருக்கச் செய்யாமல் உடனேதானே ஏற்றுக்கொள்ளலாம்.

சபையில் சேரவிரும்புகிறவர்களின் பெயரைப் பிரசித்தப்படுத்துகிறதற்குமுன் போதகர், அல்லது சபையால் நியமிக்கப்பட்ட காரியஸ்தர், சபையில் சேருமுன் அவர்கள் செய்யவேண்டியவைகளை அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

"மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்குமுன்பாகச் சந்தோஷம் உண்டாயிருக்கிறது" என்று நினைத்துக்கொண்டு மனந்திரும்புகிற ஒவ்வொருவனையும் தேடித் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளும்படி சபையார் அனைவரும் சாக்கிரதையாயும் கவலையாயும் இருக்கவேண்டும்.

IV. சபையில் சேர்ந்தவர்களைப் பிறசபைகளுக்கு அனுப்புதல்.

1. சபையார் இடமாறுதல்.

சபையிலுள்ள ஒருவன் ஒரு இடத்தை விட்டு இன்னொரு இடத்திற்கு அலுவல் முகாந்தரமாயா

வது வேறு முகாந்தரமாயாவது இடம்பெயர்ந்து போக நேரிடும்போது அப்படிப் போகிற சபை யான் தான் போகிற மற்ற இடத்திலுள்ள சபை யோடு சேர்ந்துகொள்வது நல்லது. ஆகையால் இன்னொரு சபையோடு சேர்ந்துகொள்ளப்போ கிற சபையான் தன்னுடைய போதகருக்காவது சபை உத்தியோகஸ்தருக்காவது தனக்கு இன்ன சபையோடு சேர்ந்துகொள்ள விருப்பமென்று தெரியப்படுத்தவேண்டும். அவர்கள் அதைச் சபைக் குத் தெரியப்படுத்தி சபையின் சம்மதம் கேட்டு அந்தச் சபை அவனை ஏற்றுக்கொள்ளும்படிக்குச் சபைப்பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும்.

இப்படி பிற சபைகளுக்கு அனுப்பும்போது கவனிக்கவேண்டிய சில விதிகளாவன:—

ஒழுங்குப்படி சபையில் சேராத எவர்களையும் சபையின் அங்கங்களாய் எண்ணக்கூடாது.

இடம்பெயர்ந்து போகிறவன் சபை விசாரணையி லாவது சிட்சையிலாவது வைக்கப்பட்டவனாயிரு ந்தால் அந்த விசாரணையாவது சிட்சையாவது தீரும்வரையில் அவனுக்குச் சபைப்பத்திரம் கொ டுக்கக்கூடாது.

சபையில் அங்கமாயிருக்கத்தக்கவன் எவனோ அவன் சபைப்பத்திரம் பெறவும் தக்கவன். ஒரு வன் சபைப்பத்திரம் கேட்கையில் சபையானது கொடாதிருக்கத் தீர்மானிக்குமானால் அப்போதே அவனைச் சிட்சிக்கத் துவங்கியிருக்கிறதாய் எண்

ணப்படும். ஆகையினாலே சபையால் சிட்சை பெறாத எந்தச் சபையானுக்கும் சபைப்பத்திரம் கொடுப்பது சபைக்கு அவசியமான கடமை.

இப்படிப் போகிற சபையான் ஒரு வருஷத்திற்குள் தான் விட்டுவந்த சபையினிடத்தில் சபைப் பத்திரம் பெற்றுக்கொண்டு தான் சஞ்சரிக்கிற சபையில் சேரப்பார்க்கவேண்டும். நெடுங்காலம் சென்றால் சபையானது அவன் நடக்கையை அறியாமற்போக ஏதுவாயிருக்கும். கடைசியில் அவனைச் சபையிலிருந்து நீக்கினாலும் நீக்கலாம்.

ஒரு சபை பிற சபைகளுக்குத் தன் அங்கங்களை அனுப்பிவைக்கும்போது தன் அங்கங்களுக்குத் தான் அதுவரைக்கும் செய்துவந்த உதவிகளை இனிமேல் அந்தச் சபைகளே செய்யவேண்டுமென்று அனுப்புகின்றது.

கிறிஸ்து சபை என்று தான் அங்கீகரித்துக்கொள்ளுகிற எந்தச் சபைக்கும் ஒரு சபையானது சபைப்பத்திரம் கொடுத்து தன் அங்கங்களை அனுப்பிவைக்கலாம்.

அந்த ஆட்கள் சபைப்பத்திரத்தைத் தாங்கள் சேரப்போகிற சபைகளுக்குக் கொடுக்கும்வரைக்கும் முன்னிருந்த சபையோடேயே சேர்ந்திருக்கிறதாய் எண்ணப்படுவார்கள்.

ஒரு சபையானுக்கு எந்தக் காலத்திலாவது எந்த இடத்திலாவது சேர்ந்துகொள்ளும்படி பொதுச் சபைப்பத்திரம் கொடுக்கக்கூடாது. சபை நம்பு

கிற ஓர் குறித்த சபையோடு சேர்ந்துகொள்ளும் படிமாத்திரம் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்றொரு சபைக்கு இந்தச் சபை தன் கடமையை நிறைவேற்றுகிறது விளங்கும். அந்த ஆளும் சபைச்சிட்சைக்கு இலகுவாய்த் தப்பித்துக்கொள்ள இடமிராது.

போதகர் விலகல்.

ஒரு போதகனை ஏற்படுத்துவதற்கு எந்தச் சபைக்கும் உரிமை இருக்கிறதுபோல போதகனை விலக்கிக்கொள்வது, அனுப்பிக்கொள்வதற்கும் எந்தச் சபைக்கும் உரிமை உண்டு. ஆகிலும் போதகனை நியமிப்பதில் ஒரு சபை மற்றச் சபைகள், போதகன்மார்களுடைய ஆலோசனையைக் கேட்பது எப்படி முக்கியமோ அப்படியே ஒரு போதகனை அனுப்பிக்கொள்வதிலும் அடுத்த சபைகள், போதகன்மார்களுடைய ஆலோசனையைக் கேட்பது முக்கியமானதாயிருக்கிறது. இவ்விரண்டு விஷயங்களிலும் எந்தச் சபையும் போதகரும் சங்கத்தை அழைக்கவே வேண்டும்.

போதகர் நீங்குவது அவருக்கும் சபைக்கும் பிரியமாயிருந்தால் சங்கத்தை அழைத்துத் தங்கள் விருப்பங்களையும் அவைகளின் முகாந்தரங்களையும் தெரிவித்துச் சங்கத்தின் ஆலோசனையை ஆராய்ந்து தீர்மானம்பண்ணவேண்டும்.

போதகர், சபையாராகிய இவ்விருபட்சத்தாரில் ஒரு பட்சத்தாருக்கு ஏதாவது ஒரு காரணத்தால்

மனமிருக்குமாகில் மறுபட்சத்தாருக்கு மனமில்லாதிருந்தாலும் இருபட்சத்தாரும் சேர்ந்தே சங்கத்தை அழைத்து அதன் யோசனையைக் கேட்பது உத்தமம். சங்கத்தை அழைக்க ஒரு பட்சத்தார் உடன்படாதிருந்தால் மறுபட்சத்தாரும் இணங்கிக்கொள்ளவேண்டும்; அல்லது தாங்களே சங்கத்தை அழைக்கவேண்டும்.

ஆகிலும் இருபட்சத்தாரும் அன்னியோன்னியமாய்ச் சங்கத்தை அழைக்க உடன்படாதிருந்தால் தான் ஒரு பட்சமாய்ச் சங்கத்தை அழைக்கிறது தகும்.

சங்கமானது சபையையும் போதகரையும் பிரிக்கக் கூடினதாயிராமல் தன்னை அழைத்தவர்களுடைய தீர்மானம் சரி என்று மற்றச் சபைகளும் ஒப்பத்தக்க நியாயங்கள் உண்டோவென்று பார்க்கவும் விவரத்தின் மொத்தத்தையும் அதின் முடிவு நியாயங்களையும் சொல்லவும் குற்றமிருக்குமாகில் குற்றமுள்ள கட்சியார் இன்னார் என்றும் அவர்கள் செய்த குற்றம் இன்னது என்றும் சபைக்கும் போதகருக்கும் தெரியப்படுத்தவும் போதகர், சபைகளின் நம்பிக்கைக்குப் பாத்திரராயிருந்தால் அவர் உண்மையுள்ள போதகர் என்று சாட்சியிடவும் வேண்டுமானால் சபையின் சம்மதப்பத்திரமும் பிறப்பித்துக்கொடுக்கவும் சமயத்துக்கேற்ற நல்லாலோசனைகளைச் சொல்லவும் கூடினதாயிருக்கிறது.

தருந்த முகாந்தரத்தின்பேரில் போதகரும் சபையாரும் பிரிந்துபோவது தோஷம் இல்லையாகையால் அவ்விஷயத்தைப்பற்றி யோசித்துப் பேசித் தீர்மானிக்கையில் போதகரும் சபையாரும் அன்பும் நீதியும் பரிசுத்தமுமற்றவர்களாய்க் காணப்படாதபடிக்கு யாதாமொரு அநியாயத்தையாவது பட்சபாதத்தையாவது பொருமையையாவது பழிதூற்றலையாவது செய்தலும் பேசுதலும் காட்டுதலும் இராதபடிக்கு மிகவும் சாவதானமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

V. சபைச் சிட்சை.

1. சபையாரைச் சிட்சை செய்வது.

சபையாராக ஒருமித்துக் கூடிவருவோம் என்று உடன்பாடு செய்யும் எந்தச் சபையாரும் தாங்கள் ஒருவரையொருவர் கண்டித்துப் புத்திசொல்லிக் காபந்துசெய்துவருவோம் என்றும் வாக்குக்கொடுக்கிறார்கள். ஆகையால் சபையினுடைய நன்மைக்கும் பத்திவளர்ச்சிக்கும் ஏதுவாக சபையிலுள்ள பேர்கள் ஒருவருக்கொருவர் இக்கடமையை நிறைவேற்றிவருவது மகா முக்கியமாயிருக்கிறது. இப்படிச் செய்வது சில சமயங்களில் சபைச் சிட்சையைப் பிரயோகிக்கும்படி ஏவிவிடும்.

சபைச் சிட்சை என்பது கர்த்தராகிய கிறிஸ்தேசு தமது சபையில் நியமித்த சட்டவிதிப்படிக்

கும் அதிகாரத்தின்படிக்கும் செய்யும் விசாரணையும் இடும் தண்டனையுமேயாம்.

இந்த எத்தனத்தை வழங்காத சபை மற்றச் சபைகளாலே ஒழுங்கீனமான சபை என்று சொல்லப்படவும் அதற்கு முகாந்தரம் சொல்ல அழைக்கப்படவும் ஏற்றதாகிறது.

இந்தச் சிட்சையானது சபையின் தோஷங்களை நிவிர்த்திக்கிறதற்கும் குற்றம் செய்கிறவனைச் சீர்திருத்துகிறதற்குமான நோக்கமுள்ளதாயிருப்பதால் இது அதிக முக்கியமும் அவசியமுமாயிருக்கிறது.

சபையானது தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுடைய கூட்டமாயிருப்பதினால் ஒருவன் மெய்ப்பத்தியும் நல்நடக்கையுமுள்ளவன் என்று நம்புவதற்கு வேண்டிய அத்தாட்சிகளை அவமாக்குகிறது எதுவோ அது சபைக்கு விரோதமான குற்றம். இவ்விதக் குற்றத்திற்குள்ளானவன் சபையின் அங்கமாயிருக்கிறதற்கு அபாத்திரன் என்று எண்ணப்படுவான்.

வேதத்தைக்கொண்டாவது வேதத்திற்கு இசைய இயற்றப்பட்ட சபைச் சட்டதிட்டங்களைக்கொண்டாவது குற்றமென்று ரூபிக்கத்தகாதவைகளைக் குற்றமென்னப்படாது.

சபை செய்யக்கூடிய சிட்சை யாதென்றால் ஒருவன் கிறிஸ்தவனல்லாதவனாக நடக்கிற குற்றம்

விளங்கினதின்பேரில் அவன் குணப்பட்டுத் திரும்புவரையில் அவனைப் புறம்பாக்குகிறதேயாம். சோதனையாலும் அறிவீனத்தாலும் உண்மையுள்ளவர்களுக்கு நேரிடுகிற குற்றங்களையும் குறைகளையும் போதகரும் சபையாரும் வேதவசனத்தைக் கொண்டு தடுக்கும்படி பார்க்கவேண்டும். ஒருவன் கிறிஸ்தவன் அல்லாதவனாகக் காணப்பட்டால் அவனைக் குறிக்கப்படும் ஒரு காலம்வரையில் தள்ளிவைக்கிறதும் உண்டு; காலத்தைக் குறிக்காமல் தள்ளிவைக்கிறதும் உண்டு.

ஆகிலும் குற்றம் செய்தவன் எப்போது மெய் மனஸ்தாபப்பட்டுத் தான் கிறிஸ்தவன் என்பதைப் போதிய அளவாய் உறுதிப்படுத்துகிறானோ அப்போதே சபையில் சேர்க்கப்பட வேண்டியவன். ஆகையால் அவனுடைய மனந்திரும்புதல் வெளியாகும்பொருட்டு இவ்வளவு காலம் காத்திருப்போமென்று தீர்மானிக்கிறது நியாயமேயல்லாமல் தண்டனையாக ஒரு காலத்தைக் குறிப்பது தகாது.

சபைச்சிட்சை செய்வதற்கு மெய்ப்பத்தியின் ஆவியும் நல்ல ஞானமும் ஆலோசனையும் வேண்டும். ஆதலால் சபையும் அதின் உத்தியோகஸ்தரும் குற்றம் செய்தவர்களுடைய நடக்கைத்தவறுதல்கள் இன்னின்னவையென்று ஆராய்ந்தறிவதுடன் கூடியமட்டும் அவர்கள் குற்றமற்றவர்களாகும்படிக்கே பிரயாசப்படவேண்டும்.

இரண்டொருவருக்கு மாத்திரம் விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களும் இரகசியமான சில குற்றங்களும் சபைக்கு விரோதமான குற்றங்கள் என்னலாகாது. வேறே எவ்விதமாகவாவது யாதொரு தொந்தரவும் உண்டாகாதபடிக்கு ஒழுங்கு செய்துபோடக்கூடிய குற்றத்தைச் சபைக்குக் கொண்டுவரப்படாது. ஏனென்றால் அப்படி அதைப் பகிரங்கத்துக்குக் கொண்டுவருவதினால் அனுவசியமாய் அது எல்லோருக்கும் தெரிவிக்கப் படுகிறதும்தவிர ஒருவர்பேரில் ஒருவருக்குக் கோபதாபமும் குற்றம் செய்தவருக்குக் குற்றவிரட்டிப்பும் மனக்கடினமும் உண்டாக ஏதுவாயும் இருப்பதினால் தீமையையே விளைவித்தது ஆகும்.

இக்குற்றங்களை அறிந்தவர்களில் எவனும் ஆண்டவர் விதித்த பிரமாணத்தின்படி முதலாவது குற்றவாளியைத் தனிமையாய்க் கண்டு பேசிக் குற்றத்தை உணர்த்தவேண்டும்: அதற்கு அவன் செவிகொடுத்துக் குணப்படாவிட்டால் இன்னும் சிலரைச் சேர்த்துக்கொண்டு அவனிடம் போய் எச்சரிக்கவேண்டும்: இவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால்தான் அவன் செய்த குற்றம் சபைக்கு விரோதமான குற்றமென்று சபைக்குமுன் பேசப்படவேண்டியதாகும்.

ஒரு குற்றம் மிகவும் பெரிதும் சிலர் அறிந்தது மாயிருந்தாலும் அதை ரூபித்துக் குற்றவாளிக்கு மெய்ப்பிக்கக் கூடாதபடிக்குச் சில சமயங்களில்

இருக்கும். அதைப் பத்தியுள்ளவர்கள் கண்டு விசனமடைந்தாலும் தகுந்த அத்தாட்சியில்லாமல் ஒரு குற்றத்தைப் பாரிப்பது சச்சரவுக்கும் வீண் சங்கடத்திற்கும் உள்ளாக்குவிக்கிறதினால் கர்த்தர் தம்முடைய திருச்செயலால் அந்தக் குற்றத்தை வெளியாக்குகிறவரையில் பொறுமையோடே அவர்கள் காத்திருப்பது நல்லது.

ஒருவரும் வந்து பிராது செய்யாதிருக்க ஊருக்குள்ளே பிரஸ்தாபிக்கப்படுகிற ஒரு பேச்சைக் கேட்டதினாலேயே ஒருவன்பேரில் குற்றம் சுமத்தலாகாது. அப்படிக் குற்றஞ்சுமத்தினாலும் கர்த்தராகிய கிறிஸ்து கற்பித்திருக்கிறபடி முதலிலே ஒழுங்குபண்ணப்பார்த்துப் பின்புதான் சபையாருக்கு அதைத் தெரியப்படுத்தவேண்டும். மேலும் ஊருக்குள்ளே அந்த ஆளின்மேல் பேசப்படுகிற குற்றம் என்ன, அது எங்குமா பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது, அந்தப் பிரஸ்தாபம் நாளுக்கு நாள் குறைகிறதா அதிகரிக்கிறதா, என்கிற இவை முதலான காரியங்களையும் நன்றாய் அறிந்துவைத்திருக்கவேண்டும். இப்படிக் கேள்விப்பேச்சைக் கொண்டு ஒரு குற்றத்தை விசாரிக்கப்போவதற்கு மிகுந்த புத்தியும் யோசனையும் வேண்டியிருக்கிறது.

வீணாய் அவதூறுபடுத்தப்பட்ட ஒருவன் தனக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்று முறையிட்டுக்கொண்டால் சபையார் உடனே அதை

அங்கீகரித்துக்கொண்டு நியாயவாதிகளை ஏற்படுத்தவேண்டும்.

ஒரு குற்றத்தை நிவிர்த்திக்கும்படி செய்த முயற்சியாவும் பலிக்காதேபோனால்தான் சபையார்முன் அது தீர்க்கப்படவேண்டும். தீர்ப்பதற்கு சபையார் யாவரும் கூடி விசாரணையை நடத்தலாம், அல்லது சபை உத்தியோகஸ்தர் முதல் விசாரணை செய்து சபைக்குத் தங்கள் யோசனையைத் தெரிவித்ததின்பேரில் சபையானது சமயத்திற்கேற்றபடி விசாரணைசெய்தாவது விசாரணைசெய்யாமலாவது தீர்மானம்பண்ணலாம். சபை உத்தியோகஸ்தர் முதலாவது குற்றவாளியை வைத்துக்கொண்டு விவரணமாய் விசாரணைசெய்வதே நீதிக்குப் பொருந்தியது.

விசாரணை செய்கிற ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய நியாயங்களாவன:—

(1.) சபையார்முன் வரலாகும் குற்றம் ஒருவர், அல்லது பலர், நேராய் வந்து சொன்னதாகவாவது கேள்விப்பேச்சாய் வந்ததாகவாவது இருக்கும். ஆள் நேரே வந்து சொல்லும்போது அவனையாவது அவன் நியமிக்கிற ஆளையாவது வாதியாக வைத்துக்கொள்ளவேண்டும். கேள்விப்பேச்சுக்கு அது வேண்டியதில்லை. ஆனால் இந்தப் பேச்சில் பொல்லாத மனுஷர் வேண்டுமென்றே கட்டுப்பாடு செய்ததென்று கண்டால் அவர்களைக் கடிந்துகொண்டு குற்றத்தின் தன்மைக்கேற்க அவர்களுக்குத் தண்டனை விதிக்கவேண்டியது.

(2.) குற்றத்தைக் கொண்டுவருபவனிடத்தில் அதை ஏற்றுக்கொள்ளுமுன் இவனுக்கும் குற்றம் சாட்டப்படு

கிறவனுக்கும் முன்னுல் பகை உண்டா, இவன் நன்னடக்கையுள்ளவனு, முன்னுல் வழக்குவம்புகளில் அகப்பட்டவனு, அழிவழக்கெடுக்கிறவனும் அற்பத்தனமுள்ளவனுமா, அல்லது இவன் அவனுடைய சுகக்ஷேமத்தில் பிரியமற்றவனு, என்று இவை, முதலானவைகளைப் பார்க்கவேண்டும்.

(3.) வாதியும் பிரதிவாதியும் சம்மதிக்கிற பட்சத்தில் நியாயசபையார் உடனே விசாரிக்கத் துவக்கவேண்டும். அவர்கள் சம்மதியாத பட்சத்தில் பிரதிவாதி கையில் அவன்பேரில் சாட்டப்பட்ட குற்றங்கள் இவையென்றும் அதற்குச் சாட்சிகள் இன்னின்னுரென்றும் எழுதிக்கொடுத்து அதைக்குறித்து விசாரிக்கும் அடுத்த கூட்டத்தில் அதனுடன் சம்பந்தப்பட்ட யாவரும் ஆசராகும்படி அவர்களுக்கு அறிக்கை அனுப்பவேண்டும். மேற்படி மறு கூட்டம் துவங்க ஏறக்குறையப் பத்து நாளுக்கு முந்தி மறுபடியும் இவர்கள் அந்தக் கெடுவில் வந்து ஆசராகவேண்டுமென்று அறிக்கை செய்யவேண்டும். இப்படி அனுப்பப்படும் இந்தப் பத்திரத்திற்குச் சபைப் போதகராவது இராயசக்காரராவது நியாயசபைபேரால் கையொப்பம் வைக்கவேண்டியது.

(4.) வாதி பட்சத்துச் சாட்சிகளைப் பிரதிவாதிக்கு நியாய்சபையார் சபை கூடும் பத்து நாளுக்குமுன்னுடியே தெரியப்படுத்தவேண்டும்; ஆனுலும் பிரதிவாதி தன் சாட்சிகளைப்பற்றி நியாயசபைக்கு இப்படித் தெரியப்படுத்தவேண்டியதில்லை.

(5.) குற்றத்தைச் சொல்லும்போது அது நடந்த இடம், காலம், சம்பந்தம், முதலானவைகளை அறிந்து தெரியப்படுத்தவேண்டியது. இவைகளில் ஏதாவது பிசகென்று ரூபிக்கப்பட்டால் அதனுல் சாட்டப்பட்ட குற்றம் இல்லாமல்போகும், அல்லது பலவீனப்படும்.

(6.) சபையார் குற்றவாளியினிடம் தனிப்பட ஆட்களை அனுப்பி அவனைத் திருத்துவது அவனுடைய குற்றத்தை வெளிப்படையாய் வாசித்தல், அல்லது சொல்

லுதலைவிட அநேக விஷயங்களில் சபைவளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கும்.

(7.) குற்றவாளி அழைக்கப்படும்பொழுது வரமாட்டேன் என்றாவது வந்து எழுத்துமூலமாய் அல்லது வேறு வகையாய்ச் சபையார் சொல்லுக்கு இணங்காமலாவது கீழ்ப்படியாமை காட்டினுல் சபையார் அதைப் பொருட்டாய் எண்ணுமல் அவர்கள் செய்யவேண்டியதை எல்லாம் செய்தே முடிக்கவேண்டும். ஒருவேளை அவன் தனது நிர்ணயத்தை எப்போதாவது மாற்றினுல் இது பிரயோசனப்படும்.

(8.) நியாயசபையார் சபை கூடிவர பத்து நாளுக்கு முந்தி குற்றவாளிக்கு முதல் அழைப்புப்பத்திரம் அனுப்பவேண்டியது. இரண்டாம் அழைப்புப்பத்திரம் அனுப்பவேண்டிய காலத்தைக்குறித்தோ சபையாரே தீர்மானிக்கவேண்டியது. இது அவன் சம்மதிக்கும்படிபோதிய அளவு நீண்ட காலமுள்ளதாயிருக்கவேண்டியது. அவன் அப்படி ஆசராகாதிருந்தால் சபையாருக்குக் கீழ்ப்படியாதவன் என்கிற குற்றத்திற்கு அவனை உள்ளாக்குகிறதோடுகூட அவன் வந்ததுபோல் பாவித்து அவனுக்காகப் பேசும்படி ஒரு ஆளை நியமித்து குற்றத்தை விசாரித்துத் தீர்ப்புச் செய்துபோடும்படி நேரிடும்.

(9.) நியாயசபையார் விசாரணை செய்யுமுன் தாங்கள் அனுப்பிய அழைப்புப்பத்திரங்கள் குறிப்பிட்டவர்களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்று விசாரிக்கவேண்டும். இந்த விசாரிப்பு வராத பேர்களைக் குற்றப்படுத்துவதற்கு விசேஷமாக வேண்டியதாக இருக்கிறது.

(10.) விசாரணை செவ்வையாயும் பாரபட்சமில்லாததாயும் நடத்தப்படும்படியாகச் சாட்சிகளைப் பரீட்சிக்கையில் குற்றவாளியையும் கூப்பிட்டு வைத்துக்கொள்ளவேண்டியது. குற்றவாளி தன்னை நிரபராதியாக்கிக்கொள்ளச் சாட்சிகளைக் குறுக்குக்கேள்வி கேட்டுக்கொள்ளவும் இடம் தரவேண்டியது.

(11.) தீர்ப்புகளையெல்லாம் வகைவிபரமாய்ப் பதிந்து வைத்துப் பத்திரப்படுத்தவேண்டியது. சங்கதியில் சம்பந்தப்பட்டவர்கள் நகல் கேட்டுச் செலவுகொடுத்தால் தயார்செய்து கொடுக்கவேண்டியது. மற்றவர்கள் யாராவது பார்வையிடக் கேட்டுக்கொண்டால் இடம் கொடுக்கவேண்டியது.

(12.) நியாயவாதிகள் இந்தச் சபைவிசாரணையில் பேச இடம்பெறுவார்கள். குற்றவாளி தன் காரியத்தைச் செவ்வையாய்ப் பேசிக்கொள்ளத் திறமற்றவனாய் ஒரு போதகனையாவது வேறொருவனையாவது தன் வழக்கை எடுத்துப் பேசக் கேட்டுக்கொண்டால் அவர்கள் பேச இடம் தரவேண்டியது. ஆனாலும் அப்படிப் பேசுகிறவர்களை நியாயாதிபதிகளாகவும் வைத்துக்கொள்ளப்படாது.

(13.) விசாரணை நடக்கும்போது உண்டாகும் ஒழுங்கீனங்களைச் சபைத்தலைவரே தடுக்கவேண்டியது. சபையாரும் அவருடைய பேச்சுக்கு எதிர் நியாயம் சொல்லாமல் அதை ஒப்புக்கொள்ளவேண்டியது.

(14.) ஒரு குற்றம் விசாரிக்கப்பட்டானபின் சபையின் தீர்மானத்தை மாற்றுவதற்கு பலத்த நியாயம் காணப்பட்டால் குற்றஞ்சாட்டப்பட்டவன் சபையாரை மறு விசாரணைவைத்து ஒழுங்குபண்ணக் கேட்பதும் சபையாரும் அதற்கு இணங்குவதும் கிரமம். மறு விசாரணையைக் கேட்கிறவன் தன் விண்ணப்பத்தை எழுதித் தருவதுடன் அவ்விண்ணப்பத்தில் புது நியாயத்தையும் அதைக் கொண்டு தான் ரூபிக்கப்போகிற காரியத்தையும் முதல் விசாரணையில் அந்த நியாயத்தைச் சொல்லாததற்கு முகாந்தரமும் இன்னின்னதென்றும் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும். அவன் சொல்லுகிற நியாயங்கள் அற்பமானவையாய் இருந்தால் மறு விசாரணை செய்வது ஏலாது.

(15.) சபையால் தீர்க்கக்கூடாத வழக்கு உண்டானால் சபையும் குற்றஞ்சாட்டப்பட்ட பட்சத்தாரும் சேர்ந்து தங்களுக்கு ஆலோசனை சொல்லும்படி சங்கத்தை அழை

க்கவேண்டும். ஒரு பட்சத்தார் அவ்வழக்கில் பிடிவாதம் செய்தும் சங்கத்தை அழைக்கச் சம்மதிக்காமலும் நீதிக்கு விரோதமாய் நடந்துவந்தால் மறு பட்சத்தார் சங்கத்தை அழைக்கலாம். ஆகிலும் சங்கத்தார் செய்யக்கூடியதெல்லாம் நீதிக்கும் சமாதானத்திற்கும் ஏற்ற ஆலோசனை சொல்வது மாத்திரமே.

சாட்சிகளைப்பற்றிய நியாயங்கள்.

(1.) எல்லாரும் நல்ல சாட்சிகள் ஆகமாட்டார்கள். தகுந்த வயதில்லாதவர்களும் காரியத்தை நேராய் அறியாதவர்களும் பேதமைப்புத்தியுள்ளவர்களும் கெட்டபேர் பெற்றவர்களும் பொய் ஆணை, சத்தியம், இவைகளினிமித்தம் சபைச் சிட்சை பெற்றவர்களும் நெருங்கின இனத்தாரும் இவர்களுக்கு ஒப்பான மற்றவர்களும் தகுந்த சாட்சிகளல்ல. இப்படிப்பட்டவர்களைக்குறித்துச் சங்கதியில் சேர்ந்தவர்களில் ஒருவர் முறையிடுவாரானால் நியாய சபையார் அப்படிப்பட்டவர்களுடைய சாட்சியத்தைக்குறித்து நிதானித்துத் தீர்மானிக்கவேண்டும்.

(2.) கட்சிக்காரருக்கு இனபந்துவாயிருப்பது, தீர்ப்பைப்பற்றிய கலக்கம், பதஷ்டம், தீர்க்கமாய் அறியத் திறமில்லாமை, விவேகமின்மை, குரூரகுணம், ஞாபகக் குறைவு, முதலியவைகளினால் சாட்சிகளின்பேரில் வைக்கத்தகும் நம்பிக்கை பேதப்படும். இவைகளை நியாய சபையார் சீர்தூக்கிப் பார்த்துத் தக்கவைகளைமாத்திரம் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(3.) புருஷன் செய்த குற்றத்திற்கும் பெண்சாதியையும் பெண்சாதி குற்றத்திற்குப் புருஷனையும் சாட்சியாக ஏற்றுக்கொள்வது எந்த நியாயசபைக்கும் தகாது.

(4.) ஒரு குற்றத்தை ஒருவன்மேல் சுமத்த ஒரு சாட்சிக்கு அதிகம் வேண்டும். ஒரு குற்றத்தில் அடங்கிய பல விஷயங்களை முழுதும் ஒருவரே சொல்லாமல் நம்பத்தக்க பலபேரும் ஆளுக்கொரு சங்கதி சொன்னாலும் அந்தக் குற்றம் ரூபிக்கப்பட்டதென்று எண்ணப்படும்.

(5.) ஒரு சாட்சியை விசாரிக்கும்போது இருபட்சத் தாருடைய சம்மதியின்றி அடுத்து விசாரிக்கப்படப் போகிறவர்கள் வந்திருக்கப்படாது.

(6.) சபைத் தலைவரே சாட்சிகளிடம் சத்தியம் வாங்க வேண்டும். மேலும் அவருடைய அனுமதியின்றி ஒருவனும் ஒரு கேள்வியும் போடப்படாது.

(7.) குழப்பம் உண்டாகாதபடிக்கு ஒரு பட்சத்தாரை விசாரிக்கும்பொழுது அவர்களைச் சேர்ந்த சாட்சிக் காரர்களையும் விசாரிக்கவேண்டும். எதிர்ப்பட்சத்தார் அதற்குப் பிறகுதான் குறுக்குக்கேள்வி கேட்கலாம். கடைசியாக நியாயசபையாரில் ஒருவராவது இருபட் சத்தாரிலும் எவராவது அவர்களுக்கு இன்னும் கேள்வி போடலாம்.

(8.) சாட்சிக்குப் போடும் கேள்விகளை எழுதித்தரக் கேட்கும்போது அப்படியே செய்யவேண்டும். அதற்கு அவன் மறுமொழி சொல்லும்போது இரு கட்சியாரா லும் அது விசேஷித்ததென்று எண்ணப்பட்டால் அதை யும் அந்தக் கேள்வியையும் பதிவுசெய்து வைக்கவேண் டியது.

(9.) நியாயசபையார் சில விஷயங்களிலே சாட்சி யங்கள் முழுவதையும் சில விஷயங்களிலே சாட்சியத் தின் ஒரு பாகத்தையும் தங்கள் முன்னிலையில் கேட்கக் கூடாதபடி நேரிடும். அப்போது நியாயசபையார் தங்க ளில் இரண்டுபேரை நியமித்து அந்தச் சாட்சியத்தை வாங்கிவர அனுப்பவேண்டியது. அவர்கள் கொண்டு வந்த சாட்சியத்தைத் தங்கள் முன்னிலையில் வாங்கினது போல மதிக்கவேண்டியது. இப்படி அவர்களை அனுப் புமுன் எதிர்ப்பட்சத்தார் அந்த இடத்தில் வந்து கூடும் படி முன்னடியே அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண் டும். குற்றஞ் சாட்டப்பட்டவனும் நியாயசபையார் எல்லாருக்குமுன் விசாரிக்கப்படுவதற்குப் பதிலாகத் தூரத்திலே விசாரிக்கப்பட விரும்பினால் அந்த இடத்தை யும் காலத்தையும் பற்றியே நியாயசபையாருக்குத் தெரி

யப்படுத்தியிருக்கவேண்டும். அவர்களும் முன் அந்தச் சாட்சி விஷயத்தில் செய்ததுபோலவே சிலரை அனுப்பி இதையும் விசாரித்துத் தீர்ப்புச்செய்யலாம்.

(10.) நியாயசபையாரில் ஒருவர் பிராதில் சாட்சியாகக் குறிக்கப்பட்டிருந்தால் மற்றச் சாட்சிகளுக்கு இருக்கவேண்டிய குணங்கள் இவருக்கும் இருக்கவேண்டும். இவர் சாட்சியம் சொன்னதற்குப்பின் நியாயசபையாரில் ஒருவராகப் போய் உட்கார்ந்துகொள்ளலாம்.

(11.) சாட்சியாகக் கூறப்பட்ட ஒருவர் தகுந்த முகாந்தரமில்லாமல் வராமலிருந்தாலாவது வந்து சாட்சியம் சொல்ல மறுத்தாலாவது சபையார் அவனை நியாயசபைக்குக் கீழமையாதவன் என்று கூறுவது நியாயம்.

(12.) சாட்சிகளையெல்லாம் விசாரித்தானபின் வாதியும் பிரதிவாதியும் வேண்டியமட்டும் தன்தன் சாட்சியங்களின்பேரில் விவரித்துப் பேசலாம்.

(13.) சாட்சிகள் கொடுத்த சாட்சியத்தை உண்மையாய்ப் பதிவுசெய்து வைப்பதோடு அதை அவர்களுக்கு வாசித்துக் காண்பித்து அவர்களுடைய சம்மதமும் கையெழுத்தும் வாங்கிவைக்கவேண்டும்.

கடைசியில் நியாயசபையார் வாதி, பிரதிவாதி, சாட்சிகள், இவர்கள் சொல்வதெல்லாவற்றையும் கேட்டு நன்றாய் ஆலோசித்து நிதானித்தறிந்து தீர்ப்புச்சொல்ல எல்லாரும் அதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

VI. சபை ஐக்கிய சங்கங்கள்.

எல்லாச் சபைகளுக்குள்ளும் ஐக்கியமும் சகோதரசிநேகமும் பழக்கமும் தேவபக்தியும் வளர்ந்தேறும்படி ஒவ்வொரு சபையும் அடுத்திருக்கிற மற்றெல்லாக் கிறிஸ்து சபைகளிடத்திலும் சம்பந்தம்பண்ணி அன்னியோன்னியம் பாராட்ட நினைவுள்ளவர்களாயிருக்கவேண்டும். இதற்காக ஒவ்

வொரு சபையிலிருந்தும் போதகன்மாரும் சபையால் நியமிக்கப்படுகிற பிரதிகாரியஸ்தரும் வருஷத்திற்கு இரண்டு விசை கூட்டங்கூடும்படி சபை ஐக்கிய சங்கத்தை ஏற்படுத்தவேண்டும். செபம், பிரசங்கம், வியாக்கியானம், கீர்த்தனம், சம்பாஷணை, இவைகளைக்கொண்டு தேவபக்தியிலும் நன்முயற்சியிலும் முன்னேறச் சபைகளைத் தூண்டுவதும் தங்களுக்கேற்ற கடமைகள் யாவிலும் உண்மையாய் உழைக்கப் போதகன்மார்களை ஏவுவதும் இவ்விதச் சங்கத்தின் நோக்கமாம்.

மேலும் ஒரே சபையால் கூடாதபடி மிகவும் பெரிதாயிருக்கிற ஜனோபகாரமான வேலைகளை நடத்தவும் சபைகளில்லாத நாடுகளில் சுவிசேஷம் பிரசங்கிக்கவும் பலவீனமான சபைகளை ஸ்திரப்படுத்தவும் குடிவெறிமுதலிய தீமைகளை நிறுத்தவும் அநேக சபைகள் சேர்ந்து பிரபலமான சங்கங்களை உண்டாக்கினால்தான் தேவமகிமைக்கான பல முயற்சிகள் நடக்கக் கூடும். தற்காலத்தில் சுவிசேஷப் பிரபல சங்கம், போதகர் உதவிச் சங்கம், கிறிஸ்து சகோதர விழிப்புச் சங்கம், முதலிய பற்பல சங்கங்களினால் இப்படிப்பட்ட வேலைகள் நடந்தேறிவருகின்றன.

இவ்விதச் சங்கங்களில் ஒழுங்கீனங்களும் பிரிவினைகளும் எழும்பாதபடிக்குச் சங்கத்தார் எல்லாரும் கவனித்து வரவேண்டிய சில விசேஷங்கள் உண்டு.

1. சங்கம் ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு வித்தியாசமான யோசனை உண்டாக இடங்கொடுக்கலாகாது. அந்த நோக்கம் நிறைவேறுதபடி நீக்கக்கூடாத தடை நேரிட்டால் சங்கத்தின் பொக்கிஷத்தைப் பத்திரப்படுத்தி ஒன்றும் செய்யாமல் இருக்கவேண்டும். அல்லது சங்கத்தார் எல்லாருக்கும் தெரியப்படுத்தி அவர்களை வரவழைத்து அவர்கள் தீர்மானத்தின்படி செய்யவேண்டும்.

2. சங்கத்தின் வரவு, செலவு, முதலிய கணக்கெல்லாம் யாவரும் அறியத்தக்கதாய்ப் பிரசித்தப்படுத்தவேண்டும்.

3. தருமத்திற்காகக் கொடுத்த பணங்களைப் பொக்கிஷமாக வைத்துக்கொள்ளாமல் சாக்கிரதையாய்ச் செலவழித்துவிடவேண்டும்.

4. சத்தியத்திற்கு விரோதமில்லாமலும் கூடியமட்டும் எல்லாச் சபைகளும் சந்தோஷம் அடையத்தக்கதாகவும் சங்கத்தின் காரியங்களை நடத்தவேண்டும்.

இப்படிச் செய்தால் இந்த ஐக்கியக்கட்டு பலமானதும் அநேகரைக் கர்த்தரிடத்தில் இழுத்துக்கொள்ளத்தக்கதுமாய் இருக்கும்.

THE PASTORAL OFFICE.

போதகர் தொழில்.

கிறிஸ்து சபையிலுள்ளவர்கள் யாவரும் சகோதராயும் ஒரே தலையாகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டவர்களாயும் இருப்பதினால் சபை வழக்காசாரத்தினாலும் துரைத்தனத்தாரின் சட்டத்தினாலும் போதகரே சாதாரணமாய் நடத்துகிறவைகளாகிய கண்காணிப்பு, ஞானஸ்நானம், இராப்போசனம், விவாகம், அடக்கம்பண்ணுதல், யோக்கிய தாபத்திரம் கொடுத்தல், இவைகளையன்றி மற்றெவ்வொரு காரியத்தையும் சபையின் விருப்பப்படியே நடத்த போதகர் எந்நாளும் கடமைப்பட்டிருக்கிறார். போதகர் தொழில் செய்யும் யாவரும் "தேவனுடைய மந்தையை மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்ய" மிகவும் கவலையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

நடக்கும் யாவும் சபையின் மேலான பிரயோசனத்திற்கேற்ற விதமாய் நடத்தப்படும்படியாகப் போதகரானவர் தாம் மேற்பார்வையிடுகிற சபையைச் சேர்ந்த ஒவ்வொருவருடைய ஆத்மசரீர நிலைமைகளையும் விசாரித்தறிந்துவருவது அவசியம்.

I. கண்காணிப்பு.

நல்ல மேய்ப்பனானவர் ஆடுகளைப் "புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில்" அவைகளைக் கொண்டுபோய் விடுகிறது போல, போதகர் சபையை மேய்த்துப் போஷிக்கும்படியாகவே கண்காணிப்புச் செய்கிறவராயிருக்கவேண்டும். "மேய்ப்பனாயிராதவனும் ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனானபடியால் ஓடிப்போகிறான். ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்." நல்ல மேய்ப்பனோ ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான். இவ்வித மனமுள்ள போதகர் "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணி எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணிக் கடிந்துகொண்டு" புத்திசொல்லி வருவார்.

1. சபையார் ஒருமித்துத் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்வதற்கேற்ற ஆராதனைகளைப் போதகர் நடத்தவேண்டும். சபையார் சும்மா இருக்கத்தக்கதாய் அவர்களுக்குப் பதிலாகப் போதகரே எல்லாவற்றையும் செய்யாமல் செபம்பண்ணும்போது அவர்களும் செபம்பண்ண

வும் போற்றிப் பாடும்போது யாவரும் சங்கீர்த்தனம் பண்ணவும் வணங்கும்போது யாவரும் வணங்கவும் தக்கதாய் அவற்றை நடப்பித்து வேதத்தை வாசிக்கையில் எஸ்றா செய்ததுபோல "நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து அர்த்தம் சொல்லி" அவர்களுக்கு விளங்கப் பண்ணவும் பிரசங்கிக்கையில் கேட்டறிந்த எல்லாச் சத்தியங்களின்படியும் அவர்கள் நடந்து இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிவர அவர்களைத் தூண்டிவிடவும் கருத்தாயிருக்கவேண்டும்.

கீர்த்தனம் பண்ணுகையிலும் சங்கீதம், பத்துக் கற்பனை, இவைகளை வாசிக்கையிலும் கர்த்தருடைய செபத்தைக்கொண்டு செபம்பண்ணுகையிலும் சபையார் எல்லாரும் சேர்ந்து ஏகசத்தமாய்ச் சொல்வதினால் எழுப்புதலும் ஊக்கமும் விழிப்பும் உண்டாகும்; சபையார் செவிகொடுக்க போதகர் செபத்தைப் பயபத்தியாய் நடத்தி வேதவாக்கியத்தைத் தெளிவான உச்சரிப்போடே வாசித்து சத்தியம் யாவருக்கும் விளங்கத்தக்கதாய் விவரித்துக் காட்டிப் பிரசங்கிப்பதினால் விசுவாசமும் நம்பிக்கையும் அன்பும் அதிகம் உண்டாகும்.

போதகர் செபத்தை நடத்துவதில் எப்போதும் ஒரேவிதமாயும் ஒரே முறைப்படியும் செபிக்கிறதிலும் சமயத்திற்கும் கூடிவந்திருக்கும் கூட்டத்தின் நிலைமைக்கும் செபிக்கும் நேரத்தில் தேவன் அருளுகிற ஆவியின் ஏவுதலுக்கும் தக்கபடி வெவ்

வேறு விதமாய் செபிக்கிறது நல்லது. சாதுரியமும் சிறந்த தேவபக்தியுமுள்ள ஞானிகள் எழுதின வாக்கலங்காரமான செபங்களைச் சொல்வதினால் பல வேளைகளில் சந்தோஷம், எழுப்புதல் உண்டாயினும் ஒவ்வொருவரும் தம் இருதயத்திலும் வாயிலும் பிறக்கிற மொழிகளைக்கொண்டு தேவனைப் பிரார்த்திக்காமல் மற்றவர்கள் சொல்லிக்கொடுத்திருக்கிற மொழிகளை வழங்குவதினால் வீண்வார்த்தைகளை அலப்புகிற மாயக்காரனைப் போலாக அநேகருக்கு ஏதுவிருக்கும்.

பயபத்தியுள்ள, தேவனுடைய பிள்ளைகளின் ஆத்துமாவுக்குப் பிரியங்கொடுக்கத்தக்க ஏற்ற மொழிகளைச் சொல்லி செபிக்கும்படி போதகர் பழகவேண்டுமாயினும், அதிக வசனிப்பினால் வாக்கலங்காரமாய்ச் செபிக்கிறவருடைய வேண்டுதல் அல்ல, "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதலே மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்று நினைவுகூர்ந்து நியாயாதிபதியினிடத்தில் போன விதவையைப்போலவும் தூரத்தில் இருந்துகொண்ட ஆயக்காரனைப்போலவும் கருத்தாய்ச் செபித்துவந்த எலியாவைப்போலவும் அந்தந்தச் சமயத்திற்கேற்றபடி தமக்காகவும் பிரசங்கத்துக்கு நியமிக்கப்பட்டவர்களுக்காகவும் இழவுவீட்டாருக்காகவும் சீஷருக்காகவும் பகைஞருக்காகவும் செபம்பண்ணின நம்முடைய அருமையான இரட்சகனைப் போலவும் ஊக்கத்தோடும் தாழ்மையோடும் கருத்

தோடும் சகல மனிதர்பேரிலும் அன்புகூருகிற அன்போடும் செபிக்கிற வரம் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொள்வது போதகருடைய ஆவிக்குரிய தொழிலுக்கு மிகவும் விசேஷித்ததாயிருக்கின்றது.

பாட்டுகளைக்கொண்டு போதகர் அநேக நன்மைகளைச் செய்யக்கூடும். தமிழ்ச் சபையார் தமிழ் இராகங்களைத்தான் அதிகமாய் விரும்புவார்கள்; மேலும் அந்நிய பாஷைகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பாட்டுகளைப்பார்க்கிலும் தமிழிலே தமிழரால் கட்டப்பட்டவை பிரியங்கொடுக்கும்.

ஆயினும் தமிழ் இராகமானாலும் அந்நிய இராகமானாலும் ஞானப்பாட்டுகளானாலும் கீர்த்தனைகளானாலும் பாட்டுகளெல்லாம் சந்தோஷத்துக்கும் ஆறுதலுக்கும் போற்றுதலுக்கும் தேவபக்திக்கும் ஏற்றவைகளாயிருக்கவேண்டும்.

(1.) விசேஷித்த ஆராதனை சாதாரணமாய் ஓய்வுநாள் காலையில்தான் நடத்தப்படும்.

இதில் துவக்கத்திலே கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கெஞ்சிக் கேட்கவும் மத்தியில் சபைக்காகவும் துரைத்தனத்தாருக்காகவும் தேவனுடைய இராச்சியத்திற்காகவும் மன்றாடவும் கடைசியில் வேதசத்தியம், தேவாவி, இவை முதலியவைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்தவும் மூன்று தரம் செபம்பண்ணுகிறது எப்பொழுதும் தகும்; விசேஷித்த காலங்களிலோ இன்னும் சிலதரம் செபிக்கவேண்டியதாயிருக்கும்.

பாட்டுப்பாடுவதில் முதல்பாட்டு பொதுவான ஸ்தோத்திரமும் மற்றவை வாசிக்கப்படும் வேதவாக்கியத்திற்கும் பிரசங்கிக்கப்படும் சத்தியத்திற்கும் இசைவானதுமாயிருப்பது உத்தமம்.

வேதத்தைப் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வாசிப்பது நல்லது. அந்தந்தக் கிழமைகளுக்குத் தொடர்ச்சியான பாகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிரசங்கிக்கப்படும் பொருளுக்கு ஏற்ற வாக்கியங்களையும் வாசிக்கவேண்டும்.

பிரசங்கம் எப்பொழுதும் போதகருடைய கண்காணிப்புக்கு ஏற்றதாயிருக்கும்படி அவர் உபதேசிக்கப் பட்டுத் தேறின வேதபாரகனுக்கொப்பாய்த் "தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும்" எடுத்துக்கொடுக்கவேண்டும்.

சபையார் எல்லாரும் இந்த ஆராதனையில் கர்த்தருக்கு நன்றியறிதலைக் காட்டும்படி காணிக்கைகளைக் கொண்டு வந்து கொடுக்கவேண்டும்.

(2.) ஓய்வுநாளில் சபையார் வேதத்தை விசேஷமாய்ப் படித்துக்கொள்வதற்கேற்ற ஒரு ஆராதனை இருக்க வேண்டும்.

இந்த ஆராதனையில் வேதத்தைப் போதிக்கக்கூடியவர்கள் ஒவ்வொரு வகுப்பை வைத்துக்கொண்டு குறிக்கப் பட்ட வேதபாடத்தை நன்றாய் விளக்கிக் காட்டக் கூடும். இதற்குப் புருஷர்கள், ஸ்திரீகள், பிள்ளைகள், படித்தவர்கள், படியாதவர்கள் ஆகிய பல பிரிவுகளும் பலவகுப்புகளுமாகச் சபையாரைப் பிரித்து உட்காருவிக்கலாம்.

முதலிலும் கடைசியிலும் போதகர் எல்லாரோடும் செபத்தையும் போற்றுதலையும் வேதவாசிப்பையும் நடத்தி இடையில் சபையார் வகுப்புவகுப்பாகப் படிக்கும்படி வேண்டிய நேரம் குறித்துவிடவேண்டும்.

எல்லாரும் வேதவாக்கியங்களை மனப்பாடமாகப் படித்துச் சொல்லவும் படித்த பாடத்தைப்பற்றிக் கேள்விகளைக் கேட்கவும் போதகர் சபையாருக்கு இடங்கொடுத்து அவர்களை ஏவவேண்டும்.

(3.) யூதர்கள் வாரத்தின் இரண்டாம் நாளிலும் ஐந்தாம் நாளிலும் செபம்பண்ணவும் வேதத்தை வாசிக்கக் கேட்கவும் கூடிவந்ததுபோல் கிறிஸ்தவர்களும் ஞாயிறல்லாத மற்ற நாட்களில் செபக்கூட்டம் வைக்காமல் இருக்கப்படாது.

பாட்டுப் படிப்பதற்குப் பாட்டுக்கூட்டமும் சபையார் பலரும் தங்கள் உற்சாகத்தின்படி ஒருவருக்கொருவர் புத்திசொல்லி செபம்பண்ணுவதற்குச் செபக்கூட்டமும் சபைப்பெண்களுக்காகப் பெண்பிள்ளைக்கூட்டமும் ஓய்வுநாள் பாடத்தைப் படிப்பிக்கிறவர்களுக்குப் போதகர் விளக்கிக்காட்டும்படி வேதபாடக்கூட்டமும் ஆக நாலு கூட்டங்கள் வாரந்தோறும் வைத்துச் சில சபைகளில் மிகுந்த பிரயோசனம் அடைகிறார்கள்.

(4.) விசேஷித்த கூட்டங்களில் சபையார் யாவரையும் கூட்டி நன்மைசெய்யும்படி போதகருக்கு எப்போதும் விழிப்பு இருக்கவேண்டும். சபையில் சேர விரும்புவோரை விசாரித்துப் போதித்து ஆயத்தப்படுத்துகிற ஆராய்ச்சிக்கூட்டம்; இராப்போசனத்திற்கு முன்னுன ஆயத்தக்கூட்டம்; கர்த்தருடைய இராச்சியம் உலகமெங்கும் பிரபலமாகி வருகிற சங்கதிகளைத் தெரிவிக்கவும் அதற்காகக் கர்த்தரை மன்றாடவும் மாசாந்தரக்கூட்டம்; கலயக்காணிக்கை, தவசக்காணிக்கை, முதலிய விசேஷ காணிக்கைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கும் அறுப்புக் காலத்துக் கூட்டம்; கர்த்தர் துன்பம், மரணம், முதலிய ஆபத்துகளை நீக்கும்படி சபை தன்னைக் கர்த்தரிடத்தில் தாழ்த்துகிற உபவாசக்கூட்டம்; தேவன் விசேஷித்த நன்மையை அருளிச்செய்ததற்கு நன்றியறிதலான ஸ்தோத்திரக்கூட்டம்;கர்த்தர் பிறந்தநாள்,வருஷப்பிறப்பின்நாள், முதலிய விசேஷ நாட்களின் சந்தோஷக்கூட்டம்; இவைமுதலிய அநேக கூட்டங்களை வைப்பதினுல் சபைக்கு இகபர நன்மைகள் பெருகும்.

2. சபையாரிடத்தில் சிநேகமுள்ளவராயிருக்கவும் அவர்களுடைய வாழ்வுதாழ்வுகளில் ஐக்கி

யம் பாராட்டுகிறவராகவும் தக்கதாகப் போதகர் சபையாரிடத்தில் பலமுறையும் போய்ப் பழகிவரு கிறவராயிருக்கவேண்டும்.

(1.) ஒழுங்காய்ப் போய்ப் பார்க்கிற சாமானிய சம யங்கள் எப்பொழுதும் இருக்கும். நெடுநாள் வியாதிப் பட்டும் விருத்தாப்பியத்தில் பலவீனப்பட்டும் வெளி யேறுதிருக்கிறவர்களைக் கண்டு சம்பாஷித்து வேதம் வாசித்து செபம்பண்ணவும் வேதம் வாசிக்கவாவது ஆத் தும விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை பண்ணவாவது அடிக்கடி வரவேண்டுமென்று கேட்போரிடத்திற்குப் போகவும் பிள்ளைகளைக் கண்டு நல்ல போதனை செய் யவும் தரித்திரருக்குச் சகாயம் செய்யவும் போதகர் ஓயாமல் சபையாரிடத்தில் போக்குவரத்தாய் இருக்க வேண்டும்.

(2.) விசேஷமான சமயங்களும் இடைக்கிடையே வாய்க்கும். சபையார் சடிதியில் துயரத்திற்கும் துக்கத் திற்கும் வியாதிக்கும் உள்ளாவார்கள், சடிதியில் மரணத் தருவாயில் இருப்பார்கள், பாவத்தில் அகப்படுவார் கள், பின்வாங்கிப்போவார்கள், இடைக்கிடையே இருக் கிற சபையார் சிலர் போகிறதும் புதிய சபையார் சிலர் வருகிறதும் இருக்கும், இப்படிப்பட்ட எல்லாச் சமயங் களிலும் நல்ல போதகர் அவர்களைப் போய்ப் பார்த்து ஆற்றித்தேற்றி நடத்தும்படி சந்தோஷமாய்க் காத்திருப் பார்.

II. ஞானஸ்நானம்.

ஞானஸ்நானமானது மாமிசத்தைச் சுத்திகரிக் கிற சலத்தைக்கொண்டு ஆவியைச் சுத்திகரிக்கிற தேவனுடைய பரிசுத்த ஆவியின் கிரியையைக் காண்பிக்கிறதினால் தேவாவி ஈந்தருளுகிற புது இருதயத்திற்குரியவர்களாகிய மெய்க்கிறிஸ்தவர்க

ளும் அவர்களுடைய பிள்ளைகளும் மாத்திரமே ஞானஸ்நானம் பெறத் தக்கவர்கள்.

ஞானஸ்நானத்தில் அதைப் பெறுகிறவன் தான் தேவாவியினால் புது இருதயம் அடைந்தவனாய்த் தன்னைத் தேவனுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்தவன் என்று அறிக்கையிடுகிறதினால் அதை ஒரேயொருவிசை பெறுகிறது போதும். எவனாவது ஞானஸ்நானம் பெறும்போது தப்பெண்ணமுடையவனாயிருந்து புத்திதெளிந்ததின்பேரில் அதை உணர்ந்து மறுபடியும் பெறவேண்டுமென்று விரும்பினால் பெறலாம். யோவான்ஸ்நானனுடைய சீஷர்களாகிய அந்திரேயா, முதலிய அப்போஸ்தலர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைவிட வேறு ஞானஸ்நானம் பெறவில்லை யென்றும் எபேசு பட்டணத்திலிருந்த யோவானுடைய மற்றச் சீஷர்களோ மறுபடியும் பெற்றார்கள் என்றும் வேதத்தில் காணப்படுகிறது.

குழந்தைகளைத்தவிர மற்றவர்கள் ஞானஸ்நானத்தைப் பெறும்போதே இராப்போசனத்தையும் புசிக்கத் தக்கவர்களாயிருப்பதினால் எந்த ஆளுக்கும் சீக்கிரத்தில் ஞானஸ்நானம் கொடுத்துத் தாமதத்தில் இராப்போசனத்தில் சேர்ப்பது தகாது. அப்படிச் செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்கள் காரியத்தை அறியாததால்தான் விரும்புகிறார்கள்.

ஆகையினால் எவனும் இராப்போசன காலத்தில் தான் புதிதாய்ச் சபையில் சேர்வதும் ஞானஸ்நா

னத்தைப் பெறுவதும் நம்முடைய சபையின் வழக்கம். சில விசேஷமான சமயங்களிலோ, பிலிப்பு என்பவர் எத்தியோப்பிய பிரதானிக்கு வழிப் பிரயாணத்தில் ஞானஸ்நானம் கொடுத்ததுபோல, இராப்போசனமில்லாமலும் சபையில் சேர்தலில்லாமலும் ஞானஸ்நானம் கொடுப்பது வேதத்திற்கு விரோதமாயிராது.

பூர்வகாலத்தில் சுத்திகரிப்புக்கு அடையாளமாகிய விருத்தசேதனம் ஆண்டவருடைய உத்தரவின்படி பிள்ளைகளுக்கும் விதிக்கப்பட்டிருந்ததினாலும் கிறிஸ்து சபையில் புருஷன், மனைவி, பிள்ளைகள், இவர்கள் ஒரே குடும்பமாக ஒன்றாய் எண்ணப்படுவதினாலும் பெற்றோர்கள் விசுவாசிக்கும் பொழுது கர்த்தரால் சுத்த ஆவியைப் பெற்றவர்களாகக் காண்பிக்கும்பொருட்டுத் தாங்கள் ஞானஸ்நானம் பெறுகிறதுபோல் தங்கள் பிள்ளைகளுக்கும் அந்தச் சுத்த ஆவி கிடைக்கவேண்டுமென்று விரும்பி அவர்களைக் கர்த்தருக்கு ஒப்புவிக்கிறதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெறுவிக்கிறார்கள்.

பெற்றோரில் ஒருவர் அவிசுவாசியாய் இருந்தும் மற்றவரின் விசுவாசத்தினால் பிள்ளைகள் பரிசுத்தமாயிருக்கிறார்கள் என்று பவுல் அப்போஸ்தலர் போதித்ததால் அவ்விதப் பெற்றோருள்ள பிள்ளைகள் விசுவாசிக்கிற தகப்பனாலாவது தாயினாலாவது ஞானஸ்நானம் பெறுவிக்கப்படலாம்.

ஒருவன் தன்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்துப் பரிசுத்த ஆவியைப் பெற்றான் என்பதற்கு அடையாளமாகிய ஞானஸ்நானத்தைத் தான் பெறாத விஷயத்தில் தன் பிள்ளைகளைக் கர்த்தருக்கு ஒப்புவிக்கிறது எப்படி! அப்படிப்பட்ட ஞானஸ்நானம் பொய்ச் சடங்காயாவது வீண் சடங்காயாவது இருக்குமாகையால் உட்சபையில் சேர்ந்து தங்கள் விசுவாசத்தை வெளியரங்கமாக்காத பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம்பண்ணுவிக்கலாகாது.

ஞானஸ்நானம் பண்ணுகிற விதம் விசேஷம் என்று எண்ணலாகாது. சேருகிறவன் ஒரு விதத்தைக் குறிப்பிட்டு அவ்விதமாய்ச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டால் அப்படியே செய்யலாம். சலம் தலையில் தெளிக்கிறது உத்தமம் என்று எண்ணுகிறோம். ஆயினும் தெளித்தாலும் ஊற்றினாலும் அமிழ்த்தினாலும் அந்தச் சலமானது இருதயத்தைப் பரிசுத்தப்படுத்துகிற பரிசுத்த ஆவிக்கு ஒப்பாயிருக்கிறதென்று உணர்ந்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே எவ்விடத்திலுமுள்ள சகல மனிதருக்கும் கொடுக்கவேண்டும்.

III. இராப்போசனம்.

ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியினால் உண்டாகிற சுத்திகரிப்பைக் காட்டுகிறதுபோல் கர்த்தர் ஏற்படுத்திய இராப்போசனம் நம்முடைய பாவங்களை

மன்னித்து நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கும் பொருட்டு நமக்காக இயேசு கிறிஸ்துவாகிய அவர் அடைந்த மரணத்தை அறிவிக்கிறது.

ஆண்டவர் அப்பத்தைக் கொடுத்ததுபோலவே பாத்திரத்தையும் கொடுத்ததினாலும் எவ்விடத்திலும் பாத்திரத்தில் பானம்பண்ணுதபடி அப்பத்தை மாத்திரம் புசிப்பதற்கு உத்தரவாவது திருட்டாந்தமாவது இராததினாலும் இரண்டையும் கொடுக்கிறதே நமது கடமை.

"இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம்" என்பதில் "எல்லாம்" என்னும் பதத்தால் இந்த ஆசாரம் ஒவ்வொரு வேளையில் கொண்டாடப்படும் என்று கர்த்தர் வெளியிட்டதினாலும் பூர்வகாலத்துக் கிறிஸ்தவர்களில் சிலர் தினமும் சிலர் வாரத்தின் முதல் நாளிலும் அதைக் கொண்டாடினதினாலும் நாமும் திரும்பத்திரும்ப அதைச்செய்கிறோம். இரண்டு மாதத்திற்கு ஒரு விசை இராப்போசனம் புசிக்கிறது நம்முடைய வழக்காசாரங்களுக்கு ஏற்றதாய்த் தோன்றுகிறது. ஆயினும் ஒவ்வொரு சபையும் தனக்கு வசதி எப்படியோ அப்படியே செய்யலாம்.

"தேவனுடைய இராச்சியம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாய் இருக்கிறதினாலே" இராப்போசனத்தில் புசித்துக்குடிப்பதினாலேயே ஒருவனுக்கு இரட்சிப்புக் கிடையாது.

இயேசுநாதருடைய திரு இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள்தான் தங்களை இரட்சித்த ஆண்டவரை நினைவுகூரும்படி பிட்கப்பட்ட அப்பத்தைப் புசித்து ஊற்றப்பட்ட இரசத்தைப் பானம்பண்ணி வருகிறார்கள்.

மேலும் இயேசு ஆசாரியர்களைப்போல இடைக்கிடையே பலியிடவேண்டுவதில்லை; "ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினால் இதை ஒரே தரம் செய்து முடித்தார்." ஆகையால் ஒவ்வொரு இராப்போசனத்திலும் அவர் திரும்பத்திரும்பத் தம்மைப் பலியிடாமல் பரிசுத்த ஆவியாய் வந்து தம்மை நினைவுகூருகிறவர்களைத் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டவர்களாகத் தம்மோடு கூட்டியிணைக்கிறார்.

நம்முடைய இரட்சகர் இராப்போசனத்தை ஏற்படுத்தினபொழுது அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்ததினாலும் பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணினதினாலும் நாமும் அவருடைய ஆசீர்வாதத்தைக் கெஞ்சி அப்பத்தையும் அவருக்கு ஸ்தோத்திரம்பண்ணிப் பாத்திரத்தையும் கொடுத்துவரவேண்டும். இதோடு பிரசங்கம் பண்ணுவது அவசியமில்லை; ஆண்டவரை நினைப்பூட்டத்தக்க வேதவாக்கியங்களை வாசித்து சுருக்கமாய் விளக்கிக்காட்டுவதுபோதும். இச்சடங்கில் வழங்கும் அமைதியே எல்லா இருதயங்களையும் உணர்த்தக்கூடிய அமர்ந்த மெல்லிய சத்தம்போலிருக்கிறது.

IV. விவாகம்.

விவாகமானது மதாசாரப் பிரமாணங்களைச் சார்ந்திராமல் தேசப் பிரமாணத்தைச் சார்ந்திருப்பதினுல் அதைச் சர்க்கார் ஒழுங்குப்படி எப்போதும் நடத்தவேண்டும். கிறிஸ்தவர்களுக்குள் விவாகத்தை நடத்தும்படி சர்க்காரால் உத்தரவு பெற்றவர்கள் ஒழுங்குச் சட்டங்கள் இன்னின்னவையென்று கவனித்து அவைகளின்படி நடத்தவேண்டும்.

சர்க்கார் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் செய்கிற விவாகமும் தகுதியான விவாகந்தான் என்று அங்கீகரிக்கிறதினுல் கிறிஸ்தவர்களாகிய நாமும் அதை அங்கீகரிக்கிறது நியாயம். அஞ்ஞானத்தில் விவாகஞ்செய்து பிற்பாடு கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்தவனே கிறிஸ்து மார்க்க ஒழுங்குப் பிரகாரம் மறுபடி விவாகச் சடங்கு செய்யும்படி கேட்டுக்கொண்டால் தடையில்லை. "வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும்."

விவாகத்தில் இணைக்கப்பட்டவர்கள் வேசித்தன முகாந்தரத்தினுலொழியப் பிரிந்துபோகிறது வேதத்திலுள்ள போதனைகளுக்கு விரோதம். "சகோதரன் ஒருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும் அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளி

விடாதிருக்கக்கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும் அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால் அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள்.”

கிறிஸ்தவர்கள் வேறு மதஸ்தருடன் கொள்வனை கொடுப்பனை செய்கிறதும் விவாகத்துக்காகக் கடன் படுகிறதும் மாப்பிள்ளை, பெண், இவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமும் பிரியமும் இல்லாமலும் இருவருக்கும் தகுந்த பிராயம், குணம், அறிவு, இவைமுதலியவையில்லாமலும் இருக்க விவாகம் செய்வதும் வேசித்தனத்துக்கும் சஞ்சலத்துக்கும் சோதனைக்கும் ஏதுவாயிருக்குமாதலால் இவ்வித ஏற்பாடுகளுக்கு இடங்கொடாதபடிக்குப் போதகன்மார்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

V. அடக்கம்பண்ணுதல்.

இழவு வீட்டில் போய்த்துக்கிக்கிறவர்களுக்குத் தேவனுடைய ஆறுதலான வசனங்களைத் தெரிவித்துத் துயரமடைந்த ஆத்துமாக்களை ஆற்றித்தேற்றுவது போதகருடைய விசேஷித்த கடமைகளில் அருமையான ஒரு கடமை.

அச்சமயத்தில் பேச்சுக்கு அதிக இடம் கொடுக்கப்படாது. விசேஷமான சடங்குகளை வீட்டிலே செய்து சுருக்கமானதைமாத்திரம் கல்லறையில்

செய்வது யோக்கியம். வீட்டிலே செபம்பண்ணு மல் கோவிலில் பண்ணிஞலும் பண்ணலாம். கல் லறைக்குப் போகும் வழியில் பெண்கள் நெடுங்கு ரல் விட்டழுகிறது அயோக்கியமாதலால் எல்லா ரும் சேர்ந்து மரணத்துக்கேற்ற ஒரு கீதம்பாடுவது எவ்விதத்திலும் நன்மையாயிருக்கும். சிலுவையை உயர்த்திக்கொண்டுபோவது தகாது.

இறந்துபோனவர்களைப் பற்றிப் போதகர் உள்ள படியே பிரசங்கிக்கவேண்டும். உயிரோடிருக்கை யில் நற்கீர்த்தி பெருதவர்கள் மரித்தபின் புகழ்ச்சி யையும் கனத்தையும் பெறுவது தகாது. பொய்ப் புகழ்ச்சியான வாக்கியம் ஒன்றையாவது பேசுவ திலும் முற்றிலும் பேசாமலிருப்பது நல்லது. ஆகி லும் மரணத்தில் எல்லாருக்கும் வருகிற எச்சரிப் பையும் படிப்பினையையும் இருக்கிறவர்களுடைய பிரயோசனத்தையிட்டு எப்பொழுதும் போதிக்கக் கூடும். இறந்தவர்களை இகழ்ந்து பேசாதபடிக்கு எப்போதும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

போதகரில்லாத வேளையில் எந்தக் கிறிஸ்த சகோதரனும் செபம்பண்ணி அடக்கம்பண்ணலாம்.

VI. பிரசங்கிகளுக்கு யோக்கியதாபத்திரம் கொடுத் தல்.

சுயாதீனமான சபைகளுக்குள் இன்னின்ஞர் பிரசங்கம்பண்ணத் தக்கவர்கள் என்றும் தகாதவர் களென்றும் அறிந்துகொள்ளும்படி ஓர் வகை இரு

ப்பது அவசியம். குருப்பட்டம் பெருமல் பிர சங்கம்பண்ணவருகிற எல்லாருக்கும் இடங்கொ டுக்கலாகாது. அப்படிச் செய்கிற சபை ஒவ்வொரு வேளையில் மோசப்பட்டுப்போகும்.

ஆகையால் இவ்விஷயத்தில் போதகரானவர்கள் சபைகளுக்குத் துணையாயிருந்து பிரசங்கம்பண்ண விருப்பமுள்ளவர்களை வேதத்தைப் போதித்து வியாக்கியானம் பண்ணுவதிலும் வேதசாஸ்திரக் கல்வியிலும் ஆவிக்குரிய அனுபவத்திலும் பொது வான திறமையிலும் பரீட்சிக்கவேண்டும்.

பரீட்சிக்கப்பட்டவர் பிரசங்கிக்கத் தக்கவர் என் று தோன்றினுல் அவருக்கு யோக்கியதாபத்திரம் கொடுக்கவேண்டும். அல்லவென்றுல் அவருக்குப் புத்திசொல்லி அவரைப் பிரசங்கிக்கப் போகாதபடி தடுக்கவேண்டும்.

போதகர் ஒருவரே இப்பத்திரம் கொடுப்பதைப் பார்க்கிலும் சங்கத்தில் ஐக்கியப்பட்டவர்கள் எல் லாரும் சேர்ந்து காரியத்தை நடத்துவது பரீட்சிக் கப்படுபவர்களுக்குப் பிரயோசனமாயும் சபைக ளுக்குப் பலமாயும் இருக்கும். இத்தனை வருஷத் திற்கென்று ஒரு காலத்தைக்குறித்தும் குறிக்காம லும் பத்திரம் கொடுக்கலாம்.

வாசல் வழியாய்ப் பிரவேசியாமல் வேறுவழி யாய் ஏறுகிற கள்ளரும் கொள்ளைக்காரரும் தொழு வத்துக்குள் வந்து கர்த்தருடைய ஆடுகளைச் சிதற

டிக்காதபடிக்கு பத்திரம் பெற்றுப் போதகர் சங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களுக்கேயொழிய மற்ற எவருக்கும் சபையில் பிரசங்கித்துவரவும் போதனைசெய்யவும் இடங்கொடுக்கப்படாது.

தம்முடைய எல்லா வேலைகளையும் உண்மையாய் நடத்துகிற போதகருக்கு மிகுதியான பாக்கியம் விதிக்கப்பட்டிருக்கிறது. "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும் அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."

PART SECOND.

FORMS AND SCRIPTURES.

இரண்டாம் பிரிவு.

ஒழுங்கும் வேதவாக்கியமும்.

I.

ORGANIZATION OF A CHURCH.

சபை.

I. சபை அமைப்பு.

1. சங்கம் கூடுதல்.

2. தலைவர் செபம்பண்ணுதல்.

3. இராயசக்காரர் சங்கத்தில் கூடினவர்களுடைய பேர்களைக் குறிப்பிட்டெழுதுதல்.

4. சங்கத்தை அழைத்த கிறிஸ்தவர்களின் நிலைமையும் அவர்கள் முன்செய்த தீர்மானங்களும் எழுதியனுப்பிய பத்திரங்களும் முன்சேர்ந்திருந்த சபைகளிலிருந்து கொண்டுவந்த சாட்சிபத்திரங்களும் அழைத்தவர்களில் ஒருவரால் தெரிவிக்கப்பட சங்கம் இவைகளைக் குறித்து ஆலோசனைபண்ணுதல்.

5. "எங்களை அழைத்த கிறிஸ்தவர்களுடைய விருப்பத்தின்படி இவ்விடத்தில் ஒரு சபை அமைப்பது எங்களுக்குச் சம்மதம்" என்று தீர்மானித்தல்.

6. முன் ஒரு சபையிலும் சேராதவர்களைப் பரீட்சித்தலும் அவசியமானல் ஞானஸ்நானம் கொடுத்தலும்.

7. புதிய சபை ஆகப்போகிற எல்லாரும் எழுந்துநின்று விசுவாசப்பிரமாணத்தையும் உடன்படிக்கையையும் வாசிக்கக் கேட்டு இவைகளை ஒப்புக்கொள்ளுதல்.

8. வேதம் வாசித்தல்.

9. தேவனிடத்தில் இச்சபையை ஒப்புவிக்கிற செபம்.

10. கீர்த்தனம்.

11. பிரசங்கம்.

12. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம்.

13. இராப்போசனம்.

14. கீர்த்தனம்.

15. கர்த்தருடைய செபமும் ஆசீர்வாதமும்.

16. சங்கம் இராயசக்காரர் எழுதிய நடபடிக்கையை வாசிக்கக் கேட்டுத் திருத்திக் கூட்டத்தை முடித்தல்.

II. அழைப்புப் பத்திரம்.

[இன்ன] சபை ஐக்கிய சங்கத்திற்கு [அல்லது சபைக்கு] [இன்ன இடத்தில்] இருக்கிற கிறிஸ்தவர்கள் வாழ்த்துதல் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

விசுவாசிகளாகிய நாங்கள் ஒரு சபையாக ஐக்கியப்படுவது சபைக்குப் பரம தலைவருடைய சித்தத்திற்கும் எங்களுடைய நித்திய வாழ்வுக்கும்

ஏற்றதாயிருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறதினால் நீங்கள் போதகர் பிரதிகாரியஸ்தர் அனுப்புவதினால் [இன்ன தேதி, இன்ன நேரத்தில்] இவ்விடத்தில் கூடவும் எங்களுக்கு நல்லாலோசனை சொல்லவும் சபையமைப்பது நல்லதென்று கண்டால் அதற்கு எங்களுக்கு உதவிசெய்து எங்களை ஒரு சபையாக ஏற்றுக்கொள்ளவும் வரும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாலோசனைச் சங்கத்திற்கு வரும்படியாக [இன்னின்ன இடங்களில்] இருக்கிற சபைகளையும் சகோதரராகிய (இன்னின்னாரையும்) அழைத்திருக்கிறோம்.

கிருபையும் இரக்கமும் சமாதானமும் உங்களுக்கு உண்டாக வாழ்த்துகிற

இடம், தேதி.	இன்னார், இன்னார், இன்னார்,	காரியஸ்தர்.

III. சபைக் கோள்கை.

1. விசுவாசப்பிரமாணம்.

கிறிஸ்துமார்க்கமேயல்லாமல் உண்மையான மார்க்கம் வேறொன்றுமில்லை என்று விசுவாசிக்கிறோம்.

இந்த உண்மையான மார்க்கம் பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே உண்டாக்கப்பட்ட பழைய,

புதிய ஏற்பாடுகள் என்னும் சத்திய வேதத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் விசுவாசிக்கிறோம்.

மெய்யான தேவன் ஒருவர் இருக்கிறாரென்றும் அவர் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்னும் மூவராயிருக்கிறார் என்றும் அவர் ஆதியந்தமில்லாமலும் மாறுதலில்லாமலும் இருக்கிறாரென்றும் சர்வவியாபகம், சர்வஞானம், சர்வவல்லமை, பரிசுத்தம், நீதி, இரக்கமுமுள்ளவராய் இருக்கிறாரென்றும் அவர் வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள யாவற்றையும் சிருட்டித்துக் காப்பாற்றி ஆளுகிறாரென்றும் விசுவாசிக்கிறோம்.

இந்த மெய்த்தேவனை மனதிலே தியானித்து வணங்கவேண்டுமென்றும் வேறு தேவர்களையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் அர்ச்சியசிஷ்டர்களையாகிலும் வணங்கப்படாதென்றும் விசுவாசிக்கிறோம்.

ஆதாம், ஏவாள் என்னும் நமது ஆதித்தாய்தகப்பன்மாரைப் பரிசுத்தமுள்ளவர்களாய் தேவன் உண்டாக்கினாரென்றும் அவர்களோ பசாசின் தந்திரத்தில் அகப்பட்டுத் தேவன் கொடுத்த கட்டளையை மீறிப் பாவிகளானார்களென்றும் விசுவாசிக்கிறோம்.

நமது ஆதித்தாய்தகப்பன்மார் செய்த பாவத்தினால் அவர்கள் பின்சந்ததியாராகிய மனிதர் யாவரும் பாவிகளாகி தேவனுடைய சாபத்துக்கும் நித்

திய மரணத்துக்கும் ஏதுவானார்களென்றும் விசுவாசிக்கிறோம்.

மனிதர் யாவரும் தேவ சாபத்துக்கு ஏதுவாயிருந்தும் தேவன் அவர்கள்மேல் இரக்கம் வைத்து அவருடைய குமாரனை இரட்சகராகவும் பாவம் போக்கும் பலியாகவும் அனுப்புவேனென்று வாக்குத்தத்தம் பண்ணினாரென்றும் விசுவாசிக்கிறோம்.

தேவன் நியமித்த காலத்தில் தம்முடைய குமாரனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளுடைய கர்ப்பத்தில் உற்பவித்துப் பிறந்து நமது பாவங்களை நிவிர்த்திபண்ணும்படி தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்துப் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிரோடே எழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக மத்தியஸ்தராய்ப் பரிந்துபேசுகிறாரென்றும் விசுவாசிக்கிறோம்.

கிறிஸ்து பண்ணின பிராயச்சித்தத்தினால் மனிதர் யாவரும் நித்திய ஆக்கினைக்குத் தப்பி மோட்சபாக்கியம் பெறும்படிக்கு வழி உண்டாக்கப்பட்டிருந்தும் சுபாவமாய் எல்லாரும் அவர் செய்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்களாயிருக்கிறபடியால் தேவன் தமது கிருபையினாலே அநேகரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் தமது பரிசுத்த ஆவியை ஈந்தருளி அவர்கள் தங்

கள் பாவங்களை விட்டுவிட்டுக் குணப்படுவதற்கும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறதற்கும் அருள் செய்து தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிருரென்றும் விசுவாசிக்கிறோம்.

தேவன் தமது பிள்ளைகளை மோட்சத்தில் சேர்க்கும்வரைக்கும் அவர்களைத் தம்முடைய வழியில் நடத்திக் காப்பாற்றிவருவாரென்றும் விசுவாசிக்கிறோம்.

தேவன் பாவமுள்ள இந்த லோகத்தில் தம்முடைய திருச்சபையை ஸ்தாபித்திருக்கிருரென்றும் குணப்பட்டுக் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுச் சபையில் சேர்ந்து தங்கள் பிள்ளைகளையும் ஞானஸ்நானம் பெறப்பண்ணித் திவ்விய நற்கருணையை அநுபவித்து வரவேண்டுமென்றும் விசுவாசிக்கிறோம்.

உலகத்தின் முடிவிலே இயேசு கிறிஸ்து மகிமையோடே வந்து மரித்தவர்களை எழுப்பி உயிரோடிருக்கிறவர்களை மறுரூபமாக்கி எல்லாரையுங் கூட்டி நியாயந்தீர்த்து குணப்பட்டவர்களை மோட்சத்தில் சேர்த்துக்கொண்டு குணப்படாதவர்களையோ நரகத்தில் தள்ளிப்போடுவார் என்றும் விசுவாசிக்கிறோம்.

2. உடன்படிக்கை.

விசுவாசிகளாகிய நாங்கள் இங்குள்ள சகல சனங்களுக்குமுன்பாகவும் இந்தத் தேவசந்நிதா

னத்திலும் நின்று இன்றுமுதலாகப் பொய்த்தேவர்களையும் விக்கிரகங்களையும் பேய்களையும் அர்ச்சியசிஷ்டர்களையும் வணங்காமலும் சகல பொய்மத சடங்காசாரங்களையும் அநுசரியாமலும் இருப்போமென்று உடன்பாடுபண்ணுகிறோம்.

நாங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவனை ஏற்றுக்கொண்டு அவரைமாத்திரம் வணங்கி அவருக்கு எங்களையும் எங்களுக்குண்டாகிய எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து கிறிஸ்து மார்க்க முறை தவருமல் நடப்போமென்றும் உடன்பாடு பண்ணுகிறோம்.

நாங்கள் எங்கள் சுய பிரயாசத்தினுலே எங்கள் பாவங்களை நிவிர்த்திபண்ணி எங்கள் இருதயங்களைச் சுத்தமாக்கத் திராணியில்லையென்று எண்ணி இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும் பரிசுத்த ஆவியை எங்களைச் சுத்தமாக்குகிறவராகவும் முழுமனதாய் ஏற்றுக்கொள்ளுவோமென்றும் உடன்பாடு பண்ணுகிறோம்.

சத்தியவேதம் மாத்திரம் மனிதர் நடக்கவேண்டிய முறைமையைக் காட்டுகிறபடியால் அதின்படியே நடந்து சகல பாவத்திற்கும் விலகி நன்மைசெய்யப் பிரயாசப்படுவோமென்றும் உடன்பாடுபண்ணுகிறோம்.

கிறிஸ்து சபையின் முறைமைக்குக் கீழ்ப்படிந்து சாதிவேற்றுமை பாராமல் சபையார் எல்லா

ளையும் சகோதரராக எண்ணிச் சிநேகித்து ஒருவ ரையொருவர் விசாரணைபண்ணி நடப்போமென் றும் உடன்பாடுபண்ணுகிறோம்.

நாங்கள் அந்தரங்கத்திலும் வெளியரங்கத்திலும் வேண்டுதல்பண்ணி வேதவசனத்தைக் கவன மாய்க் கற்று ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரித்து நாங்கள் எங்கள் குடும்பத்தில் சேர்ந்த யாவரையும் தேவ ஆராதனைக்கு அழைத்துவருவோமென்றும் நியமித்த காலங்களில் இராப்போசனம் பெறுவோ மென்றும் நாங்கள் எங்கள் பிள்ளைகளையும் ஞானஸ் நானம் பெறுவித்து அவர்களையும் கிறிஸ்து மார்க்க முறைமையின்படி நடத்துவோமென்றும் உடன் பாடுபண்ணுகிறோம்.

கிறிஸ்து சபையில் தேவ ஆராதனை நடக்கவும் அதற்கான காரியங்கள் பெலப்படவும் தக்கதாக எங்கள் வருமானத்தில் கிரமமாய்க் கொடுத்துவரு வோமென்றும் உடன்பாடுபண்ணுகிறோம்.

எங்கள் தேசத்தாரெல்லாருங் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களாகவேண்டுமென்றும் கிறிஸ்து மார்க் கம் உலகமெங்கும் பரம்பவேண்டுமென்றும் ஆசை ப்பட்டு எவர்களுக்கும் புத்திசொல்லி வேண்டுதல் பண்ணி எவர்களுக்குமுன்பாக நல்ல முன்மாதிரி காட்டி நடக்கப் பிரயாசப்படுவோமென்றும் உடன் பாடுபண்ணுகிறோம்.

IV. வேதவாக்கியங்கள்.

தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு சீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது (1 தீ. 3; 15.). அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் சனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி நீங்கள் சீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியினால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம் (2 கொ. 6; 14—

7; 1.). கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர்முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை, முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபே. 5; 25—27.).

நாம் யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1 கொ. 12; 13.). உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும் ஒரே ஆவியுமுண்டு (எபே. 4; 4.). உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் (கல. 3; 27, 28.).

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார் (எபே. 5; 23.). நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்

கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகரா யிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கி றீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறி ஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் (மத். 23; 8—11.). மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட் டவர்களாகிக் கிறிஸ்துவினுடைய நிறைவான வள ர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொ ருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத் தியடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தல ராகவும் சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும் போத கராகவும் ஏற்படுத்தினார் (எபே. 4; 11—13.).

உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக் களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழி த்திருக்கிறவர்களானபடியால் அவர்கள், துக்கத் தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய் யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங் கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்

தால் அது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்க மாட்டாதே (எபி. 13; 17.).

அக்காலத்திலே நல்ல திராட்சரசத்தைத் தரும் திராட்சத்தோட்டம் உண்டாயிருக்கும்; அதைக் குறித்துப் பாடுங்கள். கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி அடிக்கடி அதற்குத் தண்ணீர் பாய்ச்சி ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன் (ஏ. 27; 2, 3.). பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு இராச்சியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார் (லூ. 12; 32.).

மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம், வாருங்கள், என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி சீயோனுக்குப் போகிற வழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள் (எரே. 50; 5.). பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். தேவனைத் துதித்துச் சனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக்

கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார். திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அ. 2; 38, 41, 47: 5; 14.). கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்குமேலாய் உயர்த்தப்படும்; எல்லாச் சாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் (ஏ. 2; 2.).

கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப்பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார் (சங். 87; 2.).

சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகித் தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் (ரோ. 7; 4.). கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்தவாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் (எபே. 5; 2.). கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக (1 கொ. 15; 58.).

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெ. 2; 29.).

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிற தற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்குச் சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென் (எபே. 3; 20, 21.).

பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்க ளோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டி ருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக்கட்ட விழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்ட விழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்க ளுக்குச் சொல்லுகிறேன் (மத். 18; 18.).

V. சபை வரிசைக்குறிப்பு.

1. சபையில் சேருகிறவர்கள்.

இலக்கம்.	பெயர்.	சம்பந்தம்.	இருப்பிடம்.	விதம்.	தேதி.	வயது.	பொதுக்குறிப்பு.
1	இன்னது.	இன்னது.	இன்னது.	இன்னது.	உ.மீ. வரு.	இன்னது.	
2	,,	,,	,,	,,	,,	,,	
3	,,	,,	,,	,,	,,	,,	
4	,,	,,	,,	,,	,,	,,	
5	,,	,,	,,	,,	,,	,,	
6	,,	,,	,,	,,	,,	,,	
7	,,	,,	,,	,,	,,	,,	
8	,,	,,	,,	,,	,,	,,	

2. ஞானஸ்நானம் பெறுகிற பிள்ளைகள்.

இலக்கம்.	பெயர்.	பெற்றோர்.	இருப்பிடம்.	தேதி.	போதகர்.	பிறந்ததேதி.
1	இன்னது.	இன்னார்.	இன்னது.	௨,௴,௵.	இன்னார்.	இன்னது.
2	”	”	”	”	”	”
3	”	”	”	”	”	”
4	”	”	”	”	”	”
5	”	”	”	”	”	”
6	”	”	”	”	”	”
7	”	”	”	”	”	”
8	”	”	”	”	”	”

3. சபையிலிருந்து பெயருகிறவர்கள்.

இலக்கம்.	தேதி.	அனுப்பப்பட்டவர்கள்.		சிட்சிக்கப்பட்டவர்கள்.		பொதுக்குறிப்பு.
		போகுமிடம்.	சேர்ந்த சபை.	குற்றம்.	திரும்பிச்சேர்க்கப்பட்டது.	
5	௨,௴,௵.	இன்னது.	இன்னது.			
6	”	”	”			
2	”			இன்னது.	இன்னதேதி.	
8	”			”	”	
3	”	”	”			
7	”			”	”	
1	”	”	”			
4	”			”	”	

4. போதகன்மார்.

இலக்கம்.	பெயர்.	நியமித்த தேதி.	வயது.	சம்பளம்.	படித்தபாடசாலை.	நீங்கினது.		பொதுக்குறிப்பு.
						விதம்.	தேதி.	
1	இன்னது.	இன்னது.	இன்னது.	இவ்வளவு.	இன்னது.	இன்னது.	இன்னது.	
2	”	”	”	”	”	”	”	
3	”	”	”	”	”	”	”	
4	”	”	”	”	”	”	”	

5. குடும்பங்கள்.

இலக்கம்.	தொகை.	புருஷன்.	மனைவி.	பிள்ளைகள்.	மற்றவர்.	ஊர்.	சேர்ந்தது. தேதி.	சேர்ந்தது. விட்ட மார்க்கம்.	பெயர்ந்தது. தேதி.	பெயர்ந்தது. விதம்.	வாசிப்போர்.
I	7	இன்னான்.	இன்னாள்.	இன்னான். இன்னான் இன்னாள். இன்னாள்.	இன்னான்.	இன்னது.	இன்னது.	இன்னது.	இன்னது.	இன்னது.	இத்தனை.
II	4		,,	இன்னாள். இன்னாள்.	இன்னாள்.	,,	,,	,,	,,	,,	,,
III	2	,,	,,			,,	,,	,,	,,	,,	,,
IV	8	,,		இன்னாள். இன்னான். இன்னாள்.	இன்னாள். இன்னான். இன்னாள். இன்னான்.	,,	,,	,,			
V	5	,,	,,	இன்னான். இன்னாள். இன்னாள்.		,,	,,	,,			

6. கூட்டங்கள்.

தேதி.	ஒய்வுநாள். காலைவருகிறவர்.	ஒய்வுநாள். சாயந்தரம் வருகிறவர்.	மற்றநாள். செபக் கூட்டம் வருகிறவர்.	மற்றநாள். வேதம்படிக்க செபக் கூட்டம் வருகிறவர்.	இராப்போசனம் பெற்றவர்கள்.
இன்னது.	இத்தனை.	இத்தனை.			
இன்னது.			இத்தனை.		
இன்னது.				இத்தனை.	
இன்னது.	,,	,,			இத்தனை.

7. விவாகம்.

இலக்கம்.	தேதி.	விவாகம் செய்தவர்.	வயது.	நிலைமை.	தொழில்.	இருப்பிடம்.	தகப்பன்பேர்.	செய்த இடம்.	நடத்தினவரின் கையெழுத்து.
1	இன்னது.	இன்னான். இன்னாள்.	இன்னது. ,,	விவாகமில்லாதவன். கன்னி.	இன்னது. ,,	இன்னது. ,,	இன்னது. ,,	இன்னது.	இன்னார்.
		இன்னான். இன்னாள்.		இணைக்கப்பட்டவரின் கையெழுத்து.			இன்னான். இன்னான்.		சாட்சிகளின் கையெழுத்து.
2	இன்னது.	இன்னான். இன்னாள்.	இன்னது. ,,	விவாகமில்லாதவன். கைம்பெண்.	இன்னது. ,,	இன்னது. ,,	இன்னது. ,,	இன்னது.	இன்னார்.
		இன்னான். இன்னாள்.		இணைக்கப்பட்டவரின் கையெழுத்து.			இன்னான். இன்னான்.		சாட்சிகளின் கையெழுத்து.

8. சபைப்பணம்.

வரவு.													செலவு.												
தேதி.	பொதுக் காணிக்கை.			விசேஷித்த காணிக்கை.			மொத்தம்.			பொதுத்தர்மம்.			விசேஷத்தர்மம்.			போதகர் சம்பளம்.			சபைச்செலவு.			மொத்தம்.		
இன்னது.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
”	”						”																	
”	”						”			”												”		
”										”			”						”			”		
”	”						”						”									”		
”				”			”			”			”			”			”			”		
மொத்தம்.	இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.			இவ்வளவு.		

9. மரணம்.

இலக்கம்.	பெயர்.	இனம்.	தேதி.	வயது.	வியாதி.	பொதுக்குறிப்பு.
1	இன்னது.	இன்னது.	உ,மீ,ஸு.	இன்னது.	இன்னது.	சபையில் சேராதவன்.
2	,,	,,	,,	,,	,,	உட்சபையான்.
3	,,	,,	,,	,,	,,	,,
4	,,	,,	,,	,,	,,	சபையில் சேராதவள்.

II.

ORDINATION AND INSTALLATION OF A PASTOR.

போதகரை ஏற்படுத்தல்.

I. அபிஷேகம் பண்ணுதல்.

1. சங்கம் கூடிக் கூட்டத்தை ஆரம்பித்தல்.

2. சபையார் செய்த தீர்மானம், எழுதியனுப்பின அழைப்புப் பத்திரம், அழைக்கப்பட்டவருடைய பிரதியுத்தரம், அவரிருக்கிற சபையினது சாட்சிப்பத்திரம், அவர் பெற்றிருக்கும் யோக்கியதாபத்திரம், முதலியவற்றைக் கேட்டாராய்தல்.

3. அழைக்கப்பட்டவரைப் பரீட்சித்தல்.

4. சங்கம் தனித்து ஆலோசித்துத் தீர்மானித்தல்.

5. பின் ஆராதனையை நடத்த ஆட்களைக் குறித்தல்.

6. நடபடிக்கைகளைத் திருத்தல்.

7. சபையாரையும் அழைக்கப்பட்டவரையும் வரச் செய்து தீர்மானத்தைத் தெரிவித்தல்.

8. விடுதலை.

9. சபையார் கூட்டங்கூடுதல்.

10. கீர்த்தனம்.

11. செபம்.

12. வேதவாசிப்பு.

13. கீர்த்தனம்.

14. பிரசங்கம்.

15. கை வைத்தலும் அபிஷேகச் செபமும்

16. போதகருக்குக் கற்பித்தல்.

17. வலது கை கொடுத்தல்.

18. சபையாரை உணர்த்துதல்.

19. கீர்த்தனம்.

20. செபம்.

21. அபிஷேகம் பண்ணப்பட்டவரால் ஆசீர்வாதம் கூறப்படுதல்.

II. பட்டம் பெற்றவரை நியமித்தல்.

கை வைத்தல், அபிஷேகச் செபம், இவைகளுக்குப் பதிலாக நியமிப்புச் செபம் பண்ணுவதிலேயே இவ்வாராதனைக்கும் அபிஷேகம் பண்ணுகிற ஆராதனைக்கும் வித்தியாசம் உண்டாகும்.

III. அழைப்புப் பத்திரம்.

[இன்ன] சபை ஐக்கிய சங்கத்திற்கு [அல்லது சபைக்கு] [இன்ன இடத்தில்] இருக்கிற கிறிஸ்து சபையாராகிய நாங்கள் வாழ்த்துதல் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

[இன்னுர்] எங்களுக்குப் போதகராயிருப்பது சபைக்கும் பரம தலைவருடைய சித்தத்திற்கும் எங்களுடைய நித்திய வாழ்வுக்கும் ஏற்றதாகுமென்று எண்ணி அவரை வரும்படி அழைத்திருக்க அவர் எங்கள் விருப்பத்திற்கு இசைவாய் வரச் சம்மதித்திருக்கிறதினுல் நீங்கள் போதகர், பிரதிகாரியஸ்தர், இவர்களை அனுப்புவதினுல் [இன்ன தேதி, இன்ன நேரத்தில்] இவ்விடத்தில் கூடவும் எங்களுக்கு நல்லாலோசனை சொல்லவும் அவரை ஏற்படுத்துவது நல்லதென்று கண்டால் எங்களுக்கு உதவி செய்து அவரை அபிஷேகம்பண்ணி நியமிக்கவும் வரும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிருேம்.

இவ்வாலோசனைச் சங்கத்திற்கு வரும்படியாக [இன்னின்ன இடங்களில்] இருக்கிற சபைகளையும் சகோதரராகிய [இன்னின்னுரையும்] அழைத்திருக்கிருேம்.

கிருபையும் இரக்கமும் சமாதானமும் உங்களுக்கு உண்டாக வாழ்த்துகிற

இடம், தேதி.	இன்னுர், இன்னுர், இன்னுர்,	மேற்படி சபைக் காரியஸ்தர்.

IV. வேதவாக்கியங்கள்.

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல சாதிகளையும் சீஷராக்கிப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28; 18–20.). பின்பு அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மா. 16; 15, 16.). அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவனில்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதி

யிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா, கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோ.10; 14-17.). தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில் பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று (1 கொ. 1; 21.). இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில் தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல நாங்கள் கிறிஸ்துவுக்காகஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்பரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தமாய் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம் (2 கொ. 5; 18–20.).

இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை,

பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத். 16; 17–19.). எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார் (யோவா. 20; 23.). ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷனையல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான் (1 தெ. 4; 8.).

இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்துபோகிறதில்லை. வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து தந்திரமாய் நடவாமலும் தேவவசனத்தைப் புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை

உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம் (2 கொ. 4; 1, 2.). இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும் தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக் கடவன். மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் (1 கொ. 4; 1, 2.). கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை, ஆகையால் கண்காணியானவன் குற்றஞ் சாட்டப்படாதவனும் ஒரே மனைவியையுடைய புருஷனும் சாக்கிரதையுள்ளவனும் தெளிந்த புத்தியுள்ளவனும் யோக்கியதையுள்ளவனும் அந்நியரை உபசரிக்கிறவனும் போதக சமர்த்தனுமாயிருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும் அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாய் இராமல் பொறுமையுள்ளவனும் சண்டை பண்ணாதவனும் பணஆசையில்லாதவனுமாயிருந்து தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும்

பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு புறம்பான வர்களால் நற்சாட்சி பெற்றவனுயுமிருக்கவேண்டும் (1 தீ. 3; 1–7.).

ஆகையால் உங்களைக்குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தினுலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அ. 20; 28.). நன்ருய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும் (1 தீ. 5; 17.). நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் சாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்த போது தீர்க்கதரிசனத்தினுல் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு; இப்படிச் செய்வாயானுல் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய் (1 தீ. 4; 13–16.).

மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளி

லும் பகிர்ந்துகொடுக்கக்கடவன் (க. 6; 6.). எவன் தன் சொந்தப் பணம் செலவழித்துத் தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டம் உண்டாக்கி அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தை மேய்த்து அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? இவைகளை மனுஷர் வழக்கத்தின்படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா? போரடிக்கிற மாட்டை வாயைக் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும் போரடிக்கிறவன் தான் நம்புகிறதில், பங்கடைவேன், என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால் அது நமக்காகவே எழுதியிருக்கிறது. நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால் அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாம் அல்லவா? அப்படியிருந்தும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும் படுகிறோம். ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும் பலிபீடத்தை அடுத்

துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்தி லுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்க ளா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர் களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார் (1 கொ. 9; 7–14.).

உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும் கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும் இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால், உங்க ளிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமா யும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிக ளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் (1 பே. 5; 1–4.).

DEDICATION OF A CHURCH.

ஆலயப் பிரதிஷ்டை.

I. மூலக்கல் வைத்தல்.

1. கீர்த்தனம்.
2. வேதவாசிப்பு.
3. செபம்.
4. கல்லில் வைக்கப்படும் பொருள்களை விவரித்துச்சொல்லி ஸ்தாபித்தல்.
5. கல்லைச் சீராக வைத்தல்.
6. சுருக்கப் பிரசங்கங்கள்.
7. கர்த்தருடைய செபமும் ஆசீர்வாதமும்.

II. பிரதிஷ்டை செய்தல்.

1. செபம்.
2. கீர்த்தனம்.
3. வேதவாசிப்பு.
4. செபம்.
5. ஆலயத்தின் வரலாறுகளைத் தெரிவித்தல்.
6. கீர்த்தனம்.
7. பிரசங்கம்.
8. பிரதிஷ்டைச் செபம்.
9. கீர்த்தனம்.
10. கர்த்தருடைய செபமும் ஆசீர்வாதமும்.

III. வேதவாக்கியங்கள்.

அவர்கள், எழுந்து கட்டுவோம் வாருங்கள், என்று சொல்லி அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள் (நெ. 2; 18.). நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும் யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும் என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை, என் கண்களுக்கு நித்திரையையும் என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை (சங். 132; 2-4.). நீங்கள் மலையின்மேல் ஏறிப்போய் மரங்களை வெட்டிக் கொண்டுவந்து ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின்பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும், என்று கர்த்தர் சொல்லுகிறார். பின்பு கர்த்தர் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுடைய ஆவியையும் யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுடைய ஆவியையும் சனத்தில் மீதியான எல்லாருடைய ஆவியையும் எழுப்பினார்; அவர்கள் வந்து தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலைசெய்தார்கள் (ஆகா. 1; 8, 14.). அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது (சங். 87; 1.). ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும் விலை

யேறப்பெற்றதும் திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதருன். நான் நியாயத்தை நூலும் நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன் (ஏ. 28; 16, 17.). போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனும் கூடாது (1 கொ. 3; 11.). ஆகையால் நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள் (எபே. 2; 19–22.).

இராசாவாகிய சாலோமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிந்தது. இராசாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்கள் (1 இரா. 7; 51: 8; 63.).

கர்த்தாவே, பரிசுத்தமானது நித்திய நாளாக உமது ஆலயத்தின் அலங்காரமாயிருக்கிறது. உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்திற்குள்

பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்குநேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன். சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்! என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிராகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் சீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது. உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன். கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும் உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன் (சங். 93; 5: 5; 7: 84; 1, 2, 4, 10: 26; 8.). உமது அடியேன் இவ்விடத்தில் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்க என் நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக. உம்முடைய அடியேனும் இந்த ஸ்தலத்திலே விண்ணப்பம் செய்யப்போகிற உம்முடைய சனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் செபங்களைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே நீர் அதைக் கேட்பீராக. உம்முடைய சனமாகிய

இஸ்ரவேல் சாதியல்லாத அந்நிய சாதியார் உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும் உம்முடைய பலத்த கரத்தினிமித்தமும் ஓங்கிய உம்முடைய புயத்தினிமித்தமும் தூர தேசங்களிலிருந்து வந்து இந்த ஆலயத்திற்கு நேராக நின்று விண்ணப்பம் பண்ணினால் உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டு பூமியின் சனங்களெல்லாரும் உம்முடைய சனமாகிய இஸ்ரவேலைப்போல உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு அந்த அந்நிய சாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக. இப்போதும் என் தேவனே, இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் விண்ணப்பத்திற்கு உம்முடைய கண்கள் திறந்தவைகளும் உம்முடைய செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருப்பதாக (2 நா. 6; 20, 21, 32, 33, 40.).

அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள், என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். எங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தினிமித்தம் உனக்கு நன்மையுண்டாகத் தேடுவேன். கர்த்தரிடத்தில்

ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும் நான் என் சீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன். என் சீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் (*சங்.* 100; 4: 122; 1, 9: 27; 4: 23; 6.).

கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்க யோவாஸ் விருப்பங்கொண்டான். அவன் ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச் செய்து அவர்களை நோக்கி, நீங்கள் யூதா பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய் உங்கள் தேவனுடைய ஆலயத்தை வருஷாவருஷம் பழுதுபார்க்கிறதற்கு இஸ்ரவேலெங்கும் பணம் சேகரியுங்கள், கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்ட வரியைக் கர்த்தருக்குக் கொண்டுவாருங்கள், என்று யூதாவிலும் எருசலேமிலும் பறைசாற்றுவித்தார்கள். அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் எல்லாச் சனங்களும் சந்தோஷமாய்க் கொண்டுவந்து பெட்டி நிறைய அதிலே போட்டார்கள். அதை இராசாவும் யோய்தாவும் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கும் ஊழியக்காரர் கையிலே கொடுத்தார்கள்; அதினால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி

கல் தச்சரையும் தச்சரையும் கர்த்தருடைய ஆல யத்தைப் பழுதுபார்க்கும்படி கொற்றரையும் கன் னரையும் கூலிக்கு அமர்த்திக்கொண்டார்கள். அப் படி வேலையை விசாரிக்கிறவர்கள் தங்கள் கையின லே வேலையை நடந்தேறப்பண்ணித் தேவனுடைய ஆலயத்தை அதின் முந்தின சீருக்குக் கொண்டு வந்து அதைப் பலப்படுத்தினர்கள் (2 நா. 24; 4, 5, 9, 10, 12, 13.). ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து, திடன்கொள், என்று சகோதரனுக்குச் சகோதரன் சொல்லுகிறன். சித்திரவேலைக்காரன் தட்டானையும் சுத்தியாலே மெல்லிய தகடு தட்டுகிறவன் அடை கல்லின்மேல் அடிக்கிறவனையும் உற்சாகப்படுத்தி இசைக்கிறதற்கான பக்குவமென்று சொல்லி அதை அசையாதபடிக்கு ஆணிகளாலே இறுக்குகிறன் (ஏ. 41; 6, 7.).

யூதரின் மூப்பர் கட்டினர்கள். ஆலயம் கட்டி முடிந்தது. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும் ஆசாரியரும் லேவியரும் சிறையிருப்பிலிருந்து வந்த மற்றவர்களும் தேவனுடைய ஆலயப் பிரதிஷ் டையைச் சந்தோஷமாய்க் கொண்டாடினர்கள் (எஸ்ற, 6; 14, 15, 16.).

இந்த ஆலயத்தை மகிமையினல் நிறையப்பண் ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகி ருர். வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என் னுடையது, என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகி ருர். முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க்கி லும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதா

யிருக்கும், என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; இவ்விடத்திலே சமாதானம் கட்டளையிடுவேன், என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார், என்று சொல் என்றார் (ஆகா. 2; 7–9.).

என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு லீபனோனின் மகிமையும் தேவதாருவிருட்சங்களும் பாய்மர விருட்சங்களும் புன்னை மரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டுவரப்படும்; என் பாத ஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன் (ஏ. 60; 13.). இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன், என்று சொல்லுகிறார் (ஆகா. 2; 19.).

ADMISSION OF MEMBERS.

ஆட்களைச் சபையில் சேர்த்தல்.

I. சபையில் சேர்த்துக்கொள்ளுதல்.

இராப்போசனம் பரிமாறுவதற்குமுன் சபையில் சேர விரும்புகிறவர்களை பீடத்துக்குமுன் வரிசையாய் உட்காருவிக்கவேண்டும்.

1. சபையாரிடத்தில் இன்னின்னார் சபையில் சேர வந்திருக்கிறார்களென்று சொல்லி அவர்களைப் பரீட்சிக்கவும் சேர்க்கிறதற்கேற்ற தீர்மானம் பண்ணவும் சொல்லல்.

2. வேதவாசிப்பு.

3. சேருகிறவர்கள் எழுந்து நிற்க, போதகர் அவர்களைப் பார்த்துச் சொல்வது:—

பிரியமானவர்களே, இப்போது நீங்கள் தேவனோடும் அவருடைய சனங்களோடும் பிரசித்தமாய் உடன்படிக்கை பண்ணித் திருச்சபையில் சேரும்படிக்கு வந்திருக்கிறீர்கள். இதுமுதல் நீங்கள் எல்லாவற்றிலும் அதிகமாய்த் தேவனை நேசித்து மனசினாலும் நடக்கையினாலும் செய்த பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்பட்டுக் கர்த்தராகிய கிறிஸ்துவினிடத்தில் உறுதியான விசுவாசம் வைத்துவருகிறதை அறிக்கையிடப்போகிறீர்கள். மேலும் பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய திரியேக தேவனை உங்களை ஆண்டு இரட்சிக்கிறவராக ஏற்றுக்கொண்டு நீங்கள் அவருடைய கட்டளைகளின்படி நடக்கவும் அவர் நியமித்திருக்கிற சடங்காசாரங்களைக் கைக்கொள்ளவும் வாக்குத்தத்தம் பண்ணப் போகிறீர்கள்.

நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டிய விசுவாசப் பிரமாணத்தையும் நீங்கள் செய்யப்போகிற உடன்படிக்கையையும் முன்னே பயபத்தியாக எண்ணிப் பார்த்து இப்போது அவைகளை உறுதிப்படுத்த வந்திருக்கிறீர்களென்று நம்புகிறோம். உங்கள் உடன்படிக்கை, வாக்குத்தத்தம், யாவும் பரலோகத்திலும் எழுதப்பட்டுக் கடைசிநாளிலே வெளியரங்கமாகும். இவைகளின்படி நடந்தால் உங்களுக்கு நித்திய பலன் கிடைக்கும். ஆகையால் நீங்கள்

சர்வவல்லமையுள்ள தேவனிடத்தில் தாழ்மையாய் உங்களை ஒப்புக்கொடுத்து அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவாரென்று நம்புவீர்களாக.

4. விசுவாசப் பிரமாணத்தையும் உடன்படிக்கையையும் வாசித்து நீங்கள் இவைகளை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா, என்று அவர்களிடத்தில் கேட்குதல்.

5. சபையாரும் எழுந்து நிற்க, போதகர் சபைக்காகச் சொல்வது:—

நீங்கள் இப்படியே பண்ணுகிற உடன்படிக்கையைக் கேட்கிற சபையாராகிய நாங்களும் உங்களைப் பிரியமான சகோதரராக ஏற்றுக்கொண்டு நீங்கள் பின்வாங்காமல் அறிவிலும் தெய்வபத்தியிலும் அதிகப்பட்டு மெய்க் கிறிஸ்தவர்களாக நடந்து ஈடேற்றம் பெறுவதற்குக் கிறிஸ்துமார்க்க முறைமையின்படி உங்களை விசாரித்துக்கொள்வோமென்று உடன்பாடு பண்ணுகிறோம்.

இப்படியே நீங்களும் நாங்களும் பண்ணிக்கொண்ட உடன்படிக்கை நிறைவேற சர்வவல்லமையுள்ள தேவன் கிருபைசெய்வாராக. ஆமென்.

6. அவர்கள் முழங்காலில் நிற்க, போதகர் முன் ஞானஸ்நானம் பெறாதவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து மற்றவர்களிடத்தில் கேட்பது:—

உங்கள் சிறு பிராயத்தில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தை நீங்கள் அறி

வோடு பெற்றுக்கொண்டதுபோல் ஏற்றுக்கொள்ளு கிறீர்களா?

7. செபம்.

II. வேதவாக்கியங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத். 11; 28—30.). ஆவியும் மணவாட்டியும், வா, என்கிறார்கள்; கேட்கிறவனும், வா, என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் சீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் (வெளி. 22; 17.). இயேசு அவர்களை நோக்கி, சீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய சீவனை அடைவதும் நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது.

அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல் கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன். ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறுன். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு. சீவ அப்பம் நானே (யோவா. 6; 35, 37, 40, 39, 44, 45, 47.).

ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகிக் கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். ஆனபடியினுலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினுல் நிறைந்து சங்கீதங்களினுலும் கீர்த்தனைகளினுலும் ஞானப்பாட்டுகளினுலும் ஒரு

வருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்துத் தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் (எபே. 5; 1, 2, 15—21.). இடைவிடாமல் செபம் பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆவியை அவித்துப்போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் (1 தெ. 5; 17—21.). உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள் (பிலி. 4; 8.). ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய் உருக்கமான இரக்கத்தையும் தயவையும் மனத் தாழ்மையையும் சாந்தத்தையும் நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்களுக்கு மன்

னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயும் இருங்கள். வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொ. 3; 12—15, 17.). கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டமுண்டு; ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியமென்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்

னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தமென்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே செபம்பண்ணி அதன்பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள் (எபே. 6; 10—18.). அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி. 4; 7.).

சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுக்கிரகம்பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அநுக்கிரகம்பண்ணியிருக்கும் போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்தி

ரம், என்றான். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து, அப்படியானால் சீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறச்சாதியாருக்கும் அருளிச்செய்தார், என்று சொல்லித் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அ. 21; 17: 8; 8: 13; 52: 11; 17, 18.).

DISMISSION OF MEMBERS.

சபையிலிருந்து ஆட்களை அனுப்பிவிடல்.

I. சாட்சிப்பத்திரம்.

[இன்ன இடத்தில்] உள்ள திருச்சபையைச் சேர்ந்த கனம்பொருந்திய போதகருக்கும் மற்றச் சகோதரருக்கும் [இன்ன இடத்தில்] உள்ள போதகரும் சபையாரும் வாழ்த்துதல் செய்து எழுதிய பத்திரம்.

இவ்விடத்தில் உட்சபையைச் சேர்ந்திருக்கிற சகோதரராகிய இப்பத்திரம் கொண்டுவருகிற [இன்னானை] இவருடைய கேட்டுக்கொள்ளுதலின்படி இதுமுதல் [இன்ன இடத்தில்] உள்ள உங்கள் சபைக்குப் பட்சமாய் ஒப்புக்கொடுக்கிறோம்.

உங்கள் சபையில் இவர் சேர்க்கப்படும்போது எங்கள் சபையிலிருந்து நீக்கப்படுவார்.

இந்தப்படிக்கு
————, போதகர்.
[அல்லது சபை இராயசக்காரர்.]

CHURCH DISCIPLINE.
சபைச் சிட்சை.

I. சாட்சி பண்ணும் சத்தியம்.

உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்க்கிற சர்வவல்லமையுள்ள தேவனுக்குமுன்பாக நான் சொல்லுகிறதெல்லாம் மெய், மெய்யேயல்லாமல் வெறொன்றுமல்லவென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன்.

II. வேதவாக்கியங்கள்.

நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போல் இருக்கும். என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை (சங். 141; 5.). வழியைவிட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான். சீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை எற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும். புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்; கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான் (நீ. 15; 10, 31, 32.). மறைவான சிநேகத்தைப்பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது. சிநேகிதன் அடிக்கும்

அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவைகள் (நீ. 27; 5, 6.).

வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்திசொன்னபின்பு அவனை விட்டு விலகு. அப்படிப்பட்டவன் நிலைதவறித் தன்னிலே தானே ஆக்கினைத் தீர்ப்புடையவனாய்ப் பாவஞ் செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே. அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும் சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல் விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள் (தீ. 3; 10, 11: 1; 13, 14.).

உங்களுக்குள்ளே விபசாரம் உண்டென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறதே. இப்படிப்பட்ட காரியம் செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும் இருமாப்படைந்திருக்கிறீர்கள். நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும் ஆவியினாலே உங்களோடே கூட இருக்கிறவனாய் இப்படிச் செய்தவனைக்குறித்து நான் கூட இருக்கிறதுபோல நீங்களும் என்னுடைய ஆவியும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில் அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி மாம்சத்தின் அழிவுக்காக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைச் சாத்தானுக்கு

ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புச் செய்கிறேன். ஆகையால் அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள் (1 கொ. 5; 1—5, 13.).

எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை (மத். 12; 31, 32.). ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும் பரம ஈவை ருசிபார்த்தும் பரிசுத்தஆவியைப் பெற்றும் தேவனுடைய நல்வார்த்தையையும் இனி வரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப்போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத்

தள்ளுகிறவன் இரக்கம்பெறுமல் இரண்டுமூன்று சாட்சிகளின் வாக்கினுலே சாகிருனே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்துத் தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணிக் கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானுயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிருர் என்றும் கர்த்தர் தம்முடைய சனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னுரென்று அறிவோம். சீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே (எபி. 6; 4—6: 10; 26—31.).

மேலும் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி வேசித்தனமும் மற்றெந்த அசுத்தமும் பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது. அப்படியே வம்பும் புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தகாதவைகள்; விபசாரக்காரனுவது அசுத்தனுவது விக்கிரகாராதனைக்காரனுகிய பொருளாசைக்காரனுவது தேவனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாக கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால் ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினுலே மோசம்போக்காதபடிக்கு எச்

சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குப் பங்காளிக ளாகாதிருங்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகார மாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளை களாய் நடந்துகொள்ளுங்கள். ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்குப் பிரியமானது இன்ன தென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவை களைக் கடிந்துகொள்ளுங்கள். (எபே. 5; 3—11.). சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டுவிலகவேண்டு மென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகி றோம் (2 தெ. 3; 6.).

உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால் அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி இரண்டொருபேரை உன்னுட னே கூட்டிக்கொண்டுபோ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால் அதைச் சபைக்குத் தெ

ரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானு னல் அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக (மத். 18; 15, 16, 17.). ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட் டால் ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக்கூடாது; இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும் (உபா. 19; 15.). மூப் பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டுமூன்று சாட்சிகளில்லாமல் நீ ஏற் றுக்கொள்ளக்கூடாது. மற்றவர்களுக்குப் பயமுண் டாகும்படி பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கு முன்பாகக் கடிந்துகொள் (1 தீ. 5; 19, 20.).

எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற் போனால் அவனைக் குறித்துக்கொண்டு அவன் வெ ட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல் சகோ தரனாக எண்ணி அவனுக்குப் புத்திசொல்லுங்கள் (2 தெ. 3; 14, 15.). உன் சகோதரனை உன் உள்ளத் தில் பகையாயாக; பிறன்மேல் பாவஞ்சுமராதபடி க்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும் (லே. 19; 17.). சகோதரரே, உங்களில் ஒருவன் சத் தியத்தை விட்டு விலகி மோசம்போகும்போது மற் றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திர

ளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக். 5; 19, 20.). துக்கமுண்டாக்கினவன் எனக்குமாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்; நான் உங்களெல்லார்மேலும் அதிக பாரம் சுமத்தாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன். அப்படிப்பட்டவனுக்கு அநேகராலுண்டான இந்தத் தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிகத் துக்கத்தில் அமிழ்ந்திப்போகாதபடிக்கு நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும். அந்தப்படி உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் (2 கொ. 2; 5—8.). சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (க. 6; 1, 2.).

CHURCH UNIONS.
சபை ஐக்கிய சங்கம்.

I. சங்கக் கூட்டம்.

முதல் நாள்.

காலை.

1. செபக் கூட்டம்.

முன்னேரம் (பிரசங்கம், முதலானவை.)

2. கூட்டங்கூடுதல்.
3. செபமும் கீர்த்தனமும் வேதவாசிப்பும்.
4. பிரசங்கம்.
5. செபமும் கீர்த்தனமும்.
6. அந்தந்தச் சபையில் நடந்திருக்கும் சங்கதிகளைச் சொல்லக்கேட்டல்.
7. உத்தியோகஸ்தரைத் தெரிந்துகொள்ளுதல்.
8. கீர்த்தனமும் செபமும்.

பின்னேரம் (பிரபந்தம், முதலானவை.)

9. கீர்த்தனமும் செபமும்.
10. பிரபந்தம்.
11. சம்பாஷணை.
12. கீர்த்தனுப்பியாசம்.
13. சுவிசேஷப் பிரபல சங்கம், முதலிய தர்ம சங்கங்களைக்குறித்து அதனதன் உத்தியோகஸ்தர் பேசல்.
14. கீர்த்தனமும் செபமும்.

மாலை.

15. உள்ளூர் சபையாருக்கேற்ற வெவ்வேறு சுருக்கமான பிரசங்கங்கள் அடங்கிய செபக் கூட்டம்.

இரண்டாம் நாள்.

காலை.

16. செபக் கூட்டம்.

முன்னேரம் (வேதம் படித்தல்.)

17. கீர்த்தனமும் செபமும்.

18. வேதோபதேசப் பாடம்.

19. கீர்த்தனம்.

20. வேதப் பாடம்.

21. கீர்த்தனம்.

22. பின் கூட்டத்தில் ஆலோசிக்கவேண்டிய விஷயங்களைச் சங்கத்தாரிடத்தில் கேட்டெழுதுதல்.

23. கீர்த்தனமும் செபமும்.

பின்னேரம் (இராப்போசனம், முதலானவை.)

24. செபமும் கீர்த்தனமும்.

25. முன்குறித்த விஷயங்களை வைத்துப் பேசல்.

26. இராப்போசனம்.

27. சுபமொழியும் முடிவான கீர்த்தனமும் செபமும்.

மாலை.

28. வீதிப்பிரசங்கம்.

II. வேதவாக்கியங்கள்.

ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும் அன்பினாலே யாதொரு தேறுதலும் ஆவியின் யாதொரு ஐக்கியமும் யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால் நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல் மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலி. 2; 1—5.).

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது! அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வடிகிறதும் அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும் எர்மோன்மேலும் சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் சீவனையும் கட்டளையிடுகிறார் (சங். 133.).

வரங்களில் வித்தியாசங்களுண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்களு

ண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோசனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும் வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும் வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும் வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும் வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும் வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்துத் தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள். தேவனானவர் சபையிலே, முதலாவது, அப்போஸ்தலரையும், இரண்டாவது, தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது, போதகர்களையும் பின்பு அற்புதங்களையும் பின்பு குணமாக்கும் வரங்களையும் ஊழியங்களையும் ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லா

ரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம்பண்ணுகிறார்களா? (1 கொ. 12; 4—11, 27—30.). அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும் புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் சாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோ. 12; 5—10.).

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்

கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை (அ. 4; 32—35.).

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது சீவ கிரீடத்தை உனக்குத் தருவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும் (வெ. 2; 10, 11, 23.).

நீங்கள் ஒரு மனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன் கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்க

ளுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக (ரோ. 15; 5, 6.). நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் (எபே. 1; 2, 3.).

SABBATH SERVICES.
ஓய்வுநாள் ஆராதனை.

I. காலை ஆராதனை.

1. தேவ ஆசீர்வாதம் தேடும் செபம்.

2. கீர்த்தனம்.

3. சபையார் உட்கார்ந்திருக்க, பத்துக் கற்பனைகளை ஏகமாய்ச் சொல்லல்.

4. சபையார் எழுந்து நின்று போதகரும் சபையாரும் மாறிமாறிச் சங்கீதத்தை வாசித்தல்.

5. வேத வாசிப்பு.

6. செபம்.

7. கீர்த்தனம்.

8. காணிக்கையும் விளம்பரமும்.

9. பிரசங்கம்.

10. கீர்த்தனம்.

11. செபம்.

12. கர்த்தருடைய செபமும் ஆசீர்வாதமும்.

ஆராதனை முடிய, பிரியமுள்ளவர்கள் இருந்து பிரசங்கித்த விஷயத்தைக்குறித்து எழுப்புதலான சில வார்த்தைகளைச் சொல்லிச் செபம்பண்ணுவதற்கேற்ற சுருக்கமான பின்கூட்டம்.

II. சாயந்தர ஆராதனே.

1. கீர்த்தனம்.

2. சபையார் எழுந்து நின்று கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்திலுள்ள பதின்மூன்ரும் அதிகாரத்தை ஏகமாய்ச் சொல்லல்.

3. செபம்.

4. கீர்த்தனம்.

5. வேத வாசிப்பு.

6. வேத வசனங்களேச் சொல்லல்.

7. செபம்.

8. கீர்த்தனம்.

9. வேத பாடத்தைப் படித்தல்.

10. கேள்வி, மறுமொழி.

11. சுருக்கப் பிரசங்கம்.

12. கீர்த்தனம்.

13. செபமும் ஆசீர்வாதமும்.

III. வேத வாக்கியங்கள்.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும் எல்லாச் சாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்த் தேவரீர் எங்களுக்கு இரங்கி எங்களே ஆசீர்வதித்து உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். தேவனே, சனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல சனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் சனங்களே நிதானமாய் நியாயந்தீர்த்து பூமியிலுள்ள

சாதிகளை நடத்துவீர்; ஆதலால் சாதிகள் சந்தோஷித்து கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள். தேவனே, சனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல சனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. பூமி தன் பலனைத் தரும்; தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும் (சங். 67.). கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம், வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்குமுன்பாக வந்து சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். கர்த்தரே மகா தேவனும் எல்லாத் தேவர்களுக்கும் மகா இராசனுமாயிருக்கிறார். பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள். சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று. நம்மை உண்டாக்கின கர்த்தருக்குமுன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம், வாருங்கள். அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் சனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே (சங். 95; 1—7.). கர்த்தருக்குப் புதுப் பாட்டைப் பாடுங்கள்; பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைப் பாடுங்கள். கர்த்தரைப் பாடி அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து

நாளுக்குநாள் அவருடைய இரட்சிப்பைச் சுவி சேஷமாய் அறிவியுங்கள். சாதிகளுக்குள் அவரு டைய மகிமையையும் சகல சனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல் லுங்கள். கர்த்தர் பெரியவரும் மிகவும் ஸ்தோத்தி ரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறூர்; எல்லாத் தே வர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே. சகல சனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர். மகிமை யும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது, வல்ல மையும் மகத்துவமும் அவர் பரிசுத்த ஸ்தலத்தி லுள்ளது. சனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத் திக் காணிக்கைகளைக் கொண்டுவந்து அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங் காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்குமுன் பாக நடுங்குங்கள். கர்த்தர் இராசரிகம்பண்ணுகி றூர், ஆகையால் பூச்சக்கரம் அசையாதபடி உறு திப்பட்டிருக்கும்; அவர் சனங்களை நிதானமாய் நியாயந்தீர்ப்பார் என்று சாதிகளுக்குள்ளே சொல் லுங்கள். வானங்கள் மகிழ்ந்து பூமி பூரிப்பாகி சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக. நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக; அப்

பொழுது கர்த்தருக்குமுன்பாகக் காட்டு விருட்சங்களெல்லாம் கெம்பீரிக்கும். அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும் சனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் (சங். 96.).

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4; 15, 16.). ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமில்லாததற்காகப் பணத்தையும் திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும். கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்

கள். துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக் காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகு வார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கட வன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக் கிறார். என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வா னங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும் உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுக ளும் உயர்ந்திருக்கிறது. மாரியும் உறைந்த மழை யும் வானத்திலிருந்து இறங்கி அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து அதில் முளைகிளம்பி விளையும்படிச் செய்து விதைக்கிறவனுக்கு விதை யையும் புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கி றது எப்படியோ அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமை யாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும் (ஏ. 55; 1, 2, 6—11.).

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத் தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின்வழியாய்ப் புதிதும் சீவனு மான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடி யால் அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்ப

தற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும் தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும் துன்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும் சுத்த சலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரை ஒருவர் கவனித்துச் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல் நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் (எபி. 10; 19—25.).

எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் செபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள சீவனம் பண்ணும்படிக்கு இராசாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகரா

கிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரிய முமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிருர் (1 தீ. 2; 1-4.). என் நாமம் தரிக்கப்பட்ட என் சனங்கள் தங் களைத் தாழ்த்திச் செபம்பண்ணி என் முகத்தைத் தேடித் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும் பினல் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் (2 நா. 7; 14.). உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானல் என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள் (எரே. 29; 13.).

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண் மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக் கும் கர்த்தர் சமீபமாயிருக்கிருர் (சங். 145; 18.).

புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும், உன் வா சல்களிலிருக்கும் அந்நியர்களும் கேட்டுக் கற்றுக் கொண்டு உங்கள் தேவனுகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல் லாம் செய்யக் கவனமாயிருக்கும்படிக்கும் அதை அறியாத அவர்கள் பிள்ளைகளும் கேட்டு உங்கள் தேவனுகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள் ளும்படிக்கும் சனத்தைக் கூட்டி அதை வாசிக்க வேண்டும் (உபா. 31; 12, 13.). இனிப் பிறக்கும் பிள் ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு

அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும் தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்துத் தேவனுடைய செயல்களை மறவாமல் அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும் இருதயத்தைச் செவ்வைப் படுத்தாமலும் தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும் இவைகளைக் கட்டளையிட்டார் (சங். 78; 6–8.).

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர்முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொ. 3; 16, 17.).

IV. ஆசீர்வாதம்.

1. கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் (எபி. 13; 25.).

2. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென் (பிலே. 25.).

3. தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது (2 பே. 1; 2.).

4. நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (1 கொ. 1; 3.).

5. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் (2 கொ. 13; 14.).

6. சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங் கூட இருப்பாராக. ஆமென் (ரோ. 15; 33.).

7. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக (ரோ. 15; 13.).

8. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்திப் பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக (1 பே. 5; 10.).

9. நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய

கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணின சமாதானத்தின் தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரிய மானதை உங்களில் நடப்பித்து நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரி யையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவ ருக்கு என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் (எபி. 13; 20, 21.).

10. வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சி யோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ள வருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென் (யூ. 24, 25.).

11. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக் கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரகாசிக்கப்பண்ணி உன்மேல் கிருபையா யிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் (எண். 6; 24—26.).

SPECIAL SERVICES.

விசேஷித்த கூட்டங்கள்.

இக்கூட்டங்களுக்கு முறை ஒன்றல்ல. காலத்துக்கும் காரியத்துக்கும் தக்கபடி போதகர் பலவிதமாய் நடத்துவது உத்தமம்.

I. சுவிசேஷப் பிரபலம்.

பூமியின் இருளான இடங்கள் கொடுமையுள்ள குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறதே (சங். 74; 20.). உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம் (1 யோ. 5; 19.). அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவை

களைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும் வேசித்தனத்தினாலும் துரோகத்தினாலும் பொருளாசையினாலும் குரோதத்தினாலும் நிறையப்பட்டுப் பொறாமையினாலும் கொலையினாலும் வாக்குவாதத்தினாலும் வஞ்சகத்தினாலும் வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல் அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோ. 1; 20—23, 28—32.). நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல், இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. அறி

யாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போ லிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டு மென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட் டளையிடுகிறார். (அ. 17; 29, 30.).

எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன் றும் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புத லும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லூ. 24; 46, 47.). ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய்ச் சகல சாதி களையும் சீஷராக்கிப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி யின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்க ளுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத் தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28; 19, 20.).

அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங் கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து அவர்களால் நடந்த அடை யாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் (மா. 16; 20.). பெனிக்கே சமாரியா நாடுகளின் வழி யாய்ப் போய்ப் புறச்சாதியார் மனந்திரும்பின செய்தியை அறிவித்துச் சகோதரர் எல்லாருக்கும்

மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள் (அ. 15; 3.). ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி (சங். 68; 11.). ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன்வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம் (3 யோ. 8.).

ஆதலால் தேவனுடைய இரட்சிப்புப் புறச்சாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது (அ. 28; 28.). நான் சகலச் சாதியாரையும் பாஷைக்காரரையும் கூட்டிச் சேர்க்கும் காலம் வரும்; அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள் (ஏ. 66; 18.). சூரியன் உதிக்கிற திசைதொடங்கி அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும் என் நாமம் சாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் சாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல். 1; 11.). சமுத்திரம் சலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஆப. 2; 14.). சகல இராசாக்களும் அவரைப் பணிந்துகொள்ளுவார்கள்; சகலச் சாதிகளும் அவரைச் சேவிப்பார்கள் (சங். 72; 11.). வானத்தின் கீழெங்குமுள்ள இராச்சியங்களின் இராசரிகமும் ஆளுகையும் மகத்

துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய சனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய இராச்சியம் நித்திய இராச்சியம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் (தா. 7; 27.).

தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராச்சியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏ. 9; 7.).

இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவரிடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகலச் சனங்களும் சாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராசரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய இராச்சியம் அழியாததுமாயிருக்கும் (தா. 7; 13, 14.). ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் இராச்சியங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கு

முரிய இராச்சியங்களாயின; அவர் சதாகாலங்களி லும் இராச்சியபாரம்பண்ணுவார் என்னும் கெம் பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகலச் சாதிக ளுக்கும் கோத்திரத்தாருக்கும் பாஷைக்காருக் கும் சனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தையுடையவனாயிருந்து மிகு ந்த சத்தமிட்டுத் தேவனுக்குப் பயந்து அவரை மகி மைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொ டுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின வரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான் (வெ. 11; 15: 14; 6, 7.).

II. இராப்போசன ஆயத்தம்.

அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து, நீங்கள் உங்கள் குடும் பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டி யைத் தெரிந்தெடுத்துக்கொண்டு பஸ்காவை அடி த்து ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தையெடுத் துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக் கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால் கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டுப் புறப்படவேண்டாம். கர்த்தர் எகிப்தியரை

அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல் வாசற்படியை விலகிக் கடந்துபோவார். இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக்கொள்ளக்கடவீர்கள். கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் போய்ச் சேரும்போது இந்த ஆராதனையைக் கைக்கொள்ளக் கடவீர்கள். அப்பொழுது உங்கள் பிள்ளைகள், இந்த ஆராதனையின் கருத்து என்ன, என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார், என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது சனங்கள் தலை வணங்கிப் பணிந்து கொண்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படியே செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளையிட்டபடியே செய்தார்கள் (யாத். 12; 21—28.). ஆகையால் நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்குப் பழைய புளித்த மாவைப் புறம்பே தள்ளிப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்

கிருரே. ஆதலால் பழைய புளித்த மாவோடே அல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம் (1 கொ. 5; 7, 8.).

நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்திஞலே சுத்திகரிக்கப்படும்; இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்புண்டாகாது. பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்தாஞல் உலகமுண்டானதுமுதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதிஞலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டுத் தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாம் தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி. 9; 22, 25, 26, 28.).

கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படு

கிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள், என்றார். போசனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள், என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை அறிவிக்கிறீர்கள். இப்படியிருக்க எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போசனபானம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போசனபானம்பண்ணுகிறான். இதினிமித்தமாக உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மைநாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது

உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படா தபடிக்குக் கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போசனம் பண்ணக் கூடிவரும்போது ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடி வராதபடிக்கு ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட் டிலே சாப்பிடக்கடவன் (1 கொ. 11; 23–34.).

ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே, விக் கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள். உங்களைப் புத் திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறி ஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடி யால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீர முமாயிருக்கிறோம். மாம்சத்தின்படியான இஸ்ர வேலைப் பாருங்கள். பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா? இப்படியிருக்க விக்கிரகம் ஒரு பொருளென்றும் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொரு ளென்றும் நான் சொல்லுகிறேனே? அஞ்ஞானி கள் பலியிடுகிறவைகளைத் தேவனுக்கு அல்ல, பேய் களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும்

பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போசனபந்திக் கும் பேய்களுடைய போசனபந்திக்கும் பங் குள்ளவர்களாயிருக்கக்கூடாதே (1 கொ. 10; 14–21.). அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப் படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந் தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறி ஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவி சுவாசிகளுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவ னுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம் பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனுயிருப்பேன், அவர்கள் என் சனங்களாயி ருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி நீங்கள் சீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப் பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதி ருங்கள், என்று கர்த்தர் சொல்லுகிறுர். அப்பொ ழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள், என்று சர்வவல்ல மையுள்ள கர்த்தர் சொல்லுகிறுர் (2 கொ. 6; 14–18.).

III. தர்மம்.

கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகி மையைச் செலுத்திக் காணிக்கைகளைக் கொண்டு வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்;

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் (1 நா. 16; 29.). இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5; 16). கர்த்தருடைய சந்நிதியில் வெறுங் கையோடே வராமல் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன் தன்தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக்கடவன் (உபா. 16; 17.). அன்றியும் நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் (எபி. 13; 16.). உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன் (1 கொ. 16; 2.). என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடம் கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள், என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல். 3; 10.).

வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் (லூ. 10; 7.). எவன் தன் சொந்தப் பணம் செலவழித்துத் தண்டிலே சேவகம்பண்ணுவான்?

எவன் திராட்சத் தோட்டம் உண்டாக்கி அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தை மேய்த்து அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும் பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார் (1 கொ. 9; 7, 13, 14.). மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணி அதையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் பலிபீடத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணிப் பரிசுத்தப்படுத்தி முடித்த நாளில் தங்கள் பிதாக்களுடைய வம்சத் தலைவரும் எண்ணப்பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். தங்கள் காணிக்கையாக ஆறு கூண்டு வண்டில்களையும் பன்னிரண்டு மாடுகளையும் இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும் ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடுமாகக் கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்குமுன்பாகக் கொண்டுவந்தார்கள். பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்டபோது இஸ்ரவேல் பிரபுக்களால் செய்யப்பட்ட பிரதிஷ்டையாவது: வெள்ளித் தாலங்கள் பன்னிரண்டு, வெள்ளிக் கலங்கள் பன்னி

ரண்டு, பொன் தூபக் காண்டிகள் பன்னிரண்டு. ஒவ்வொரு வெள்ளித் தாலம் நூற்றுமுப்பது சேக்கல் நிறையும் ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக இந்தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி இரண்டாயிரத்துநானூறு சேக்கல் நிறையாயிருந்தது. தூபவர்க்கம் நிறைந்த பொன் தூபக் கரண்டிகள் பன்னிரண்டு, ஒவ்வொன்று பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி பத்துச் சேக்கல் நிறையாக, தூபக் கரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தது. சர்வாங்க தகன பலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் பன்னிரண்டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த போசன பலிகளும்கூடச் செலுத்தப்பட்டது; பாவ நிவாரண பலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் பன்னிரண்டு; சமாதான பலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் இருபத்துநான்கு, ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளாட்டுக்கடாக்கள் அறுபது, ஒருவயதான ஆட்டுக்குட்டிகள் அறுபது; பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்டபின்பு செய்யப்பட்ட அதின் பிரதிஷ்டை இதுவே (எண். 7; 1—3, 84—88.).

கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்ட வரியைக் கர்த்தருக்குக் கொண்டுவாருங்கள், என்று யூதாவிலும் எருசலேமிலும் பறைசாற்றுவித்தார்கள். அப்பொ

ழுந்து எல்லாப் பிரபுக்களும் எல்லாச் சனங்களும் சந்தோஷமாய்க் கொண்டுவந்து பெட்டி நிறைய அதிலே போட்டார்கள். வெகு பணம் உண்டென்று கண்டு லேவியர் கையால் அந்தப் பெட்டி இராசாவின் விசாரிப்புக்காரரண்டையிலே கொண்டுவரப்படும்போது இராசாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனுடைய விசாரிப்புக்காரனும் வந்து பெட்டியிலிருக்கிறதைக் கொட்டியெடுத்து அதைத் திரும்ப அதின் ஸ்தானத்திலே வைப்பார்கள்; இப்படி நாளுக்குநாள் செய்து மிகுந்த பணத்தைச் சேர்த்தார்கள். அதை இராசாவும் யோய்தாவும் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கும் ஊழியக்காரர் கையிலே கொடுத்தார்கள், அதினால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி கல் தச்சரையும் தச்சரையும் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி கொற்றரையும் கன்னாரையும் கூலிக்கு அமர்த்திக்கொண்டார்கள். அப்படி வேலையை விசாரிக்கிறவர்கள் தங்கள் கையினாலே வேலையை நடந்தேறப்பண்ணித் தேவனுடைய ஆலயத்தை அதின் முந்தின சீருக்குக் கொண்டுவந்து அதைப் பலப்படுத்தினார்கள். அதை முடித்துத் தீர்ந்தபின்பு மீந்த பணத்தை இராசாவுக்கும் யோய்தாவுக்கும்முன்பாகக் கொண்டுவந்தார்கள்; அதினாலே கர்த்தருடைய ஆலயத்தில் செய்யப்படும் பணிமுட்டுகளையும் ஆராதனை, பலி, முதலியவைகளுக்கு வேண்டிய பணிமுட்டுகளையும் கலசங்களையும் பொன் பாத்திரங்களையும் வெள்

ளிப்பாத்திரங்களையும் பண்ணுவித்தான்; யோய்தா வின் நாளெல்லாம் நித்தம் கர்த்தருடைய ஆலயத்தி லே சர்வாங்கதகன பலிகளைச் செலுத்திவந்தார்கள் (2 நா. 24; 9—14.). பின்பு எவர்களை அவர்கள் இரு தயம் எழுப்பி, எவர்களை அவர்கள் ஆவி உச்சாகப் படுத்தினதோ அவர்களெல்லாரும் ஆசரிப்புக் கூடா ரத்தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்துக்கும் பரிசுத்த வஸ்திரங்களுக்கும் ஏற்றவைகளைக் கர்த் தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். மனப்பூர்வமுள்ள ஸ்திரீ, புருஷர், யாவரும் அஸ்த கடகங்கள், காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள், முதலான சகல விதப் பொன் ஆபரணங்களையும் கொண்டுவந்தார்கள்; கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தின ஒவ்வொருவனும் பொன்னைக் காணிக் கையாகச் செலுத்தினன். இளநீல நூலையும் இரத் தாம்பர நூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் வெள்ளாட்டு மயிரையும் சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலையும் தகசுத் தோலையும் தங்க ளிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டுவந்தார்கள். வெள்ளியையும் வெண்கலத் தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த் தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். பற்பல வேலைகளுக்கு உதவும் சீத்திம் மரத்தைத் தங்களிடத்தில் வைத்திருந்த யாவரும் அவைகளைக் கொண்டுவந்தார்கள். ஞான இருதயமுள்ள ஸ்தி ரீகளெல்லாரும் தங்கள் கைகளினல் நூற்றுத் தாங் கள் நூற்ற இளநீல நூலையும் இரத்தாம்பர நூலை

யும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டுவந்தார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ அவர்களெல்லாரும் வெள்ளாட்டுமயிரைத் திரித்தார்கள். பிரபுக்கள் ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகம், முதலிய இரத்தினங்களையும் பரிமளவர்க்கங்களையும் விளக்கெண்ணெயையும் அபிஷேகத் தைலத்துக்கும் சுகந்தவர்க்கத் தூபத்துக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள். செய்யப்படும்படி கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த வேலைக்குரிய யாவையும் கொண்டுவர இஸ்ரவேல் புத்திரருக்குள் தங்கள் இருதயத்தில் உச்சாகமடைந்த ஸ்திரீ, புருஷர், யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள் (யாத். 35; 21—29.).

பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு சீவன் அல்ல என்றார் (லூ. 12; 15.). பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை (மத். 6; 19, 20.). இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான

சிந்தையுள்ளவர்களாயிராமலும் நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்குச் சகல வித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற சீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் நன்மை செய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதார குணமுள்ளவர்களுமாயிருக்கவும் நித்திய சீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு (1 தீ. 6; 17–19.). பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொ. 9; 6, 7.). உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம் (1 தீ. 6; 7.). வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது, என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (ஆகா. 2; 8.). இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து சனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவை

யும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் சீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள், என்றார் (மா. 12; 41–44.).

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத். 5; 7.). சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான் (சங். 41; 2.). ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் (நீ. 19; 17.). சகேயு நின்று கர்த்தரை நோக்கி, ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் (லூ. 19; 8.). ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசி ஆறுங்கள், என்று சொல்லியும்

சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோசனமென்ன? (யாக். 2; 15, 16.). ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனுயிருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோ 3; 17.). சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என்ருர் (மத். 10; 42.). அப்பொழுது இராசா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, வாருங்கள், என் பிதாவினுல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போசனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனுயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள், என்பார். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு

கிறேன், என்பார் (மத். 25; 34–36, 40.). இந்தத் தர்ம காரியத்திலும் பெருகவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே (2 கொ. 8; 7, 9.).

IV. ஸ்தோத்திரம்.

கர்த்தனைக் கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம், வாருங்கள் (சங். 95; 1.). தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய இராசாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள். தேவன் பூமியனைத்திற்கும் இராசா; கருத்துடனே அவனைப் போற்றிப் பாடுங்கள் (சங். 47; 6, 7.). அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்; அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்; அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள்; மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள்; எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்; தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள்; யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்; ஓசையுள்ள கைத்தாளங்களோ

டும் அவரைத் துதியுங்கள்; பேரோசையுள்ள கைத் தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். சுவாச முள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லே லூயா (சங். 150.). கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பரிசுத்தவான்களின் சபையிலே அவரு டைய துதி விளங்குவதாக. அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்துத் தம்புரினாலும் கின்னரத் தினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணக்கடவர்கள் (சங். 149; 1, 3.). கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள்; நம்முடைய தேவனைச் சுரமண் டலத்தால் கீர்த்தனம்பண்ணுங்கள் (சங். 147; 7.). கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிரு பை என்றுமுள்ளது. தேவாதி தேவனைத் துதியுங் கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்று முள்ளது. பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது (சங். 136; 1–3, 26.). பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங் கள் (சங். 66; 1, 2.). பூமியின் குடிகளே, நீங்க ளெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப் பரியுங்கள்; முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங் கள். சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண் ணுங்கள், சுரமண்டலத்தாலும் கீத சத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள் (சங். 98; 4, 5.).

சனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து அவரைத் துதிக்கும் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள் (சங். 66; 8.). சகல சனங்களே, கைகொட்டித் தேவனுக்குமுன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங். 47; 1.). கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவரைக் கீர்த்தனம்பண்ணி அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள் (சங். 30; 4.). நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் (வெ. 19; 5.). சாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள், சனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா (சங். 117.). கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது. அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ரவேல் சொல்வதாக. அவர் கிருபை என்றுமுள்ளதென்று ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக. அவர் கிருபை என்றுமுள்ளதென்று கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக (சங். 118; 1–4.). சமுத்திரத்தில் யாத்திரை பண்ணுகிறவர்களே, அதிலுள்ளவைகளே, தீவுகளே, அவைகளின் குடிகளே, கர்த்தருக்குப் புதுப் பாட்டைப் பாடுங்கள், பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய துதியைப் பாடுங்கள். வனாந்தரமும் அதின் ஊர்களும் கேதாரியர் குடியிருக்கிற கிராமங்களும்

உரத்த சத்தமிடக்கடவது; கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள் கெம்பீரித்துப் பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து ஆர்ப்பரிப்பார்களாக. கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தி அவர் துதியைத் தீவுகளில் அறிவிப்பார்களாக (ஏ. 42; 10–12.). அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தனைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவனைத் துதியுங்கள். அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவனைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவனைத் துதியுங்கள். சூரியசந்திரரே, அவனைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவனைத் துதியுங்கள். வானாதி வானங்களே, அவனைத் துதியுங்கள்; ஆகாயமண்டலத்தின்மேலுள்ள தண்ணீர்களே, அவனைத் துதியுங்கள். அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட, அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. பூமியிலுள்ளவைகளே, கர்த்தனைத் துதியுங்கள்; மகா மச்சங்களே, சகல ஆழங்களே, அக்கினியே, கல் மழையே, உறைந்த மழையே, மூடு பனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே, மலைகளே, சகல மேடுகளே, கனி மரங்களே, சகல கேதுருக்களே, காட்டு மிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே, பூமியின் இராசாக்களே, சகல சனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே, வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ள

வர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது (*சங்.* 148; 1–5, 7–13.).

கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்; அவருடைய செய்கைகளைச் சனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். அவரைப் பாடி அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள் (*சங்.* 105; 1, 2.). எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே (*சங்.* 68; 19.). மாம்ச தேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக்கடவது (*சங்.* 145; 21.). அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள்; கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள். இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது. சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக (*சங்.* 113; 1–3.).

V. மதுபானம், முதலியவற்றை விலக்கல்.

திராட்சரசம் பரியாசம் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவ

னும் ஞானவானல்ல. மதுபானம் இரத்த வருண மாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன் றும்போது நீ அதைப் பாராதே; அது மெது வாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும் பாய்மரத் தட்டி லே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப் போது விழிப்பேன் என்பாய். மதுபானப் பிரிய ரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. குடியனும் போசனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும் (நீ. 20; 1: 23; 31-35, 20, 21.).

ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும் கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே (நீ. 23; 29, 30.). சாராயத்தைக் குடிக்க வீரரும் மதுவைக் கலந்துவைக்கப் பராக்கிரமசாலிகளுமாயிருந்து பரி தானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர் த்து நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோ

தமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ! சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து மதுபானம் தங்களை சூடாக்கும்படி தரித்திருந்து இருட்டிப்போமளவும் குடித்துக்கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ! அவர்கள் சுரமண்டலத்தையும் தம்புருவையும் மேளத்தையும் நாகசுரத்தையும் மதுபானத்தையும் வைத்து விருந்து கொண்டாடுகிறார்கள். ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதுமில்லை, அவர் கரத்தின் செய்கையை சிந்திக்கிறதுமில்லை. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ! மதுபானத்தால் மயக்கமடைந்தவர்களின் செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின்மேலுள்ள அலங்கார சோடிப்பு வாடிப்போகும் புஷ்பமே (ஏ. 5; 22, 23, 11, 12: 28; 1.). தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு அவர்களை வெறிக்கப் பண்ணுகிறவனுக்கு ஐயோ! (ஆப. 2; 15.). மாம்சம் புசிக்கிறதும் மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும் உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும் (ரோ. 14; 21.).

ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி மதுபானத்தால் வழி தப்பிப்போகிறார்கள். ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்

கித் திராட்சரசத்தால் விழுங்கப்பட்டுச் சாராயத்தினுல் வழிதப்பி தீர்க்கதரிசனத்தில் மோசம்போய் நியாயந்தீர்க்கிறதில் இடறுகிருர்கள். போசன பீடங்களெல்லாம் வாந்தியினுலும் அசுத்தத்தினுலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை. அவர்களெல்லாரும் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள்; தூக்க மயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக்கொள்ளுகிறவர்கள், நித்திரைப் பிரியர், திருப்தி அடையாமலிருக்கும் பெரு வயிற்று நாய்கள், பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும் தன்தன் வழியையும் அவனவன் தன்தன் மூலையிலிருந்து தன்தன் பொழிவையும் நோக்கிக்கொண்டிருக்கிருன். வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம்போலவும் இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள் (ஏ. 28; 7, 8: 56; 10–12.). பெரிய பாத்திரங்களில் மதுபானத்தைக் குடித்துச் சிறந்த பரிமளதைலங்களைப் பூசிக்கொள்ளுகிருர்கள்; ஆனுலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிருர்கள். ஆகையால் அவர்கள் சிறையிருப்புக்குப் போகிறவர்களின் முன்னணியிலே போவார்கள்; இப்படியே செல்வமாய்ச் சயனித்தவர்களின் விருந்து கொண்டாடல் நின்றுபோகும் (ஆமோ. 6; 6, 7.). பெல்ஷாத்சார் என்னும் இராசா தன் பிரபுக்களில் ஆயிரம்பேருக்கு ஒரு பெரிய விருந்து செய்து அந்த ஆயிரம்பேருக்கு

முன்பாகத் திராட்சரசம் குடித்தான். பெல்ஷாத்சார் திராட்சரசத்தை ருசித்துக்கொண்டிருக்கையில் அவன் தன் தகப்பனுகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவந்த பொன், வெள்ளிப் பாத்திரங்களில் இராசாவாகிய தானும் தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற் பாத்திரங்களைக் கொண்டுவந்தார்கள்; அவைகளில் இராசாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும் அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்தார்கள். அவர்கள் திராட்சரசம் குடித்து பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள் (தா. 5; 1–4.).

வெறியரே, விழித்து அழுங்கள்; திராட்சரசம் குடிக்கிற சகல சனங்களே, புதுத் திராட்சரசத்தினிமித்தம் அலறுங்கள்; அது உங்கள் வாயினின்று விலக்கப்பட்டது (யோவே. 1; 5.). வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினுலும் வெறியினுலும் லவுகீககவலைகளினுலும் பாரமடையாதபடிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வாராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் (லூ. 21; 33, 34.).

வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும் விக்கிரகாராதனைக்காரரும் விபசாரக்காரரும் சுய புணர்ச்சிக்காரரும் ஆண் புணர்ச்சிக்காரரும் திருடரும் பொருளாசைக்காரரும் வெறியரும் உதாசினரும் கொள்ளைக்காரரும் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை (1 கொ. 6; 9, 10.). மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன, விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், பொருமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை (க. 5; 19, 21.).

பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் (1 கொ. 9; 25.). நீ ஒரு அதிபதியோடே போசனம்பண்ண உட்கார்ந்தால் உனக்குமுன்பாக இருக்கிறதை நன்றாய்க் கவனித்துப் பார். நீ போசனப் பிரியனாயிருந்தால் உன் தொண்டையிலே கத்தியை வை. அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே; அவைகள் கள்ளப் போசனமாமே (நீ. 23; 1–3.). தானியேல் இராசாவின் போசனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்

படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான் (தா. 1; 8.).

கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிட்சையே சீவ வழி. அது உன்னைத் துன்மார்க்க ஸ்திரீக்கும் இச்சகம் பேசும் நாவையுடைய பரஸ்திரீக்கும் விலக்கிக் காக்கும். உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்க விடாதே. வேசியினிமித்தம் ஒரு அப்பத் துணிக்கையையும் இரக்கவேண்டியதாகும்; விபசாரியானவள் அருமையான உயிரை வேட்டையாடுகிறாள். தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடுமோ? தன் கால் சுடாமல் எவனாவது தழலின்மேல் நடக்கக் கூடுமோ? பிறனுடைய மனைவியினிடத்தில் பிரவேசிப்பவனும் அப்படியே அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்பான். திருடன் தன் பசியை ஆற்றத் திருடினால் சனங்கள் அவனை இகழமாட்டார்கள்; அவன் கண்டுபிடிக்கப்பட்டால் ஏழு மடங்கு கொடுத்துத் தீரவேண்டும்; தன் வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் கொடுக்கவேண்டியதாகும். ஸ்திரீயுடனே விபசாரம் பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிறான்; வாதையையும் இலச்சையையும் அடைவான்; அவன் நிந்தை ஒழியாது.

ஸ்திரீயைப் பற்றிய எரிச்சல் புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டுபண்ணும்; அவன் பழி வாங்கும் நாளில் தப்ப விடான். அவன் எந்த ஈட்டையும் பாரான்; அநேகம் வெகுமதிகளைக் கொடுத்தாலும் அமர்ந்திருக்கமாட்டான். நான் என் வீட்டின் சன்னலருகே நின்று பலகணிவழியாய்ப் பார்த்தபோது பேதையர்களாகிய வாலிபருக்குள்ளே ஒரு புத்தியீன வாலிபனைக் கண்டு அவனைக் கவனித்தேன். அவன் மாலை மயங்கும் அஸ்தமன நேரத்திலும் இரவின் இருண்ட அந்தகாரத்திலும் அவள் இருக்கும் சந்துக்கடுத்த தெருவில் சென்று அவள் வீட்டு வழியாய் நடந்துபோனான். அப்பொழுது, இதோ, வேசியின் ஆடையாபரணம் தரித்த தந்திர மனமுள்ள ஒரு ஸ்திரீ அவனுக்கு எதிர்ப்பட்டாள். அவள் வாயாடியும் அடங்காதவளுமானவள்; அவள் கால்கள் வீட்டிலே தரிக்கிறதில்லை. சிலவேளை வெளியிலிருப்பாள், சிலவேளை வீதியிலிருப்பாள், சந்துகள்தோறும் பதிவிருப்பாள். அவள் அவனைப் பிடித்து முத்தஞ்செய்து முகம் நாணாமல் அவனைப் பார்த்து, சமாதான பலிகள் என்மேல் சுமந்திருந்தது, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்; ஆதலால் நான் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு உன் முகத்தை ஆவலோடு தேடினேன்; இப்பொழுது உன்னைக் கண்டுபிடித்தேன். என் மஞ்சத்தை இரத்தின கம்பளங்களாலும் எகிப்து தேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன். என்

படுக்கையை வெள்ளைப் போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப் பட்டையாலும் வாசனை கட்டினேன். வா, விடியற்காலம் வரைக்கும் சம்போகமாயிருப்போம், இன்பங்களினால் பூரிப்போம். புருஷன் வீட்டிலே இல்லை; தூரப் பிரயாணம் போனான், பணப் பையைத் தன் கையிலே கொண்டு போனான், குறிக்கப்பட்ட நாளிலே வீட்டுக்கு வருவான், என்று சொல்லித் தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தித் தன் உதடுகளின் மதுர வாக்கினால் அவனை இணங்கப்பண்ணினாள். உடனே அவன் அவள் பின்னே சென்றான்; ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுபோலும் ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலும் ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறதுபோலும் அவளுக்குப்பின்னே போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது. ஆதலால், பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள்; உன் இருதயம் அவள் வழியிலே சாயவேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே. அவள் அநேகரைக் காயப்படுத்தி விழப்பண்ணினாள்; பலவான்கள் அநேகரைக் கொலைசெய்தாள். அவள் வீடு பாதாளத்துக்குப் போம் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டுபோய்விடும். சிற்றின்பப் பிரியன் தரித்திரனாவான்; மதுபானத்தையும் எண்ணெயையும் விரும்புகிறவன் ஐசுவரியவா

னுவதில்லை (நீ. 6. 23–35: 7; 6–27: 21; 17.). வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும் (ஓ. 4; 11.).

களியாட்டும் வெறியும் வேசித்தனமும் காமவிகாரமும் வாக்குவாதமும் பொருமையும் உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணுமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் (ரோ. 13; 13, 14.). வெறிகொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள். பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் நம்பிக்கை என்னும் தலைச் சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம் (1 தெ. 5; 7, 8.).

VI. உபவாசம்.

யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம் பண்ணிவந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து, யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறுர்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்ன, என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும்வரைக்கும் உபவாசிக்கமாட்டார்களே. மணவாளன் அவர்களை விட்டு எடுபடும்

நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள் (மா. 2; 18–20.). நீங்கள் உபவாசிக்கும்போது மாயக்காரரைப்போல முக வாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாகத் தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல் அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலன் அளிப்பார் (மத். 6; 16–18.).

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல சனங்களும் புறப்பட்டுத் தேவனுடைய வீட்டிற்குப் போய் அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது தரித்திருந்து அன்று சாயங்காலமட்டும் உபவாசித்துக் கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி அந்நாட்களில் அங்கே இருந்தது (நியா. 20; 26, 27.). அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த சகல மனுஷரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் கர்த்தருடைய சனங்களும் இஸ்ரவேல் குடும்பத்தாரும் பட்டயத்தா

லே விழுந்தபடியினுல் புலம்பி அழுது சாயங்கால மட்டும் உபவாசமாயிருந்தார்கள். அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண்பிள்ளையை அடித்தார்; அது வியாதிப்பட்டுக் கேவலமாயிருந்தது. அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனைபண்ணி உபவாசித்து உள்ளே போய் இராமுழுதும் தரையிலே கிடந்தான் (2 சா. 1; 11, 12: 12; 15, 16.). அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது, நீர் போய்ச் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் இவ்விதமாகச் சட்டத்தை மீறி இராசாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன், என்று சொல்லச் சொன்னுள் (எஸ்த. 4; 15, 16.). அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் எங்கள் சகல பொருள்களுக்காகவும் செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும் நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன். அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினேம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினுர் (எஸ்ரு. 8; 21, 23.). அப்பொழுது நினிவேயிலுள்ள சனங்கள் தேவனை விசுவா

சித்து உபவாசம் செய்யும்படி கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் இராசாவுக்கு எட்டினபோது அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான் (யோனா. 3; 5, 6.). அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும் நீகர் என்னப்பட்ட சிமியோனும் சிரேனே ஊரானாகிய லூகியும் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும் சவுலும் தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயுமிருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள், என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்துச் செபம்பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினார்கள். அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து, உபவாசித்துச் செபம்பண்ணி அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (அ. 13; 1–3: 14; 23.). பிரயாசத்திலும் வருத்தத்திலும் அநேகமுறை கண்விழிப்புகளிலும் பசியிலும் தாகத்திலும் அநேகமுறை உபவாசங்களிலும் குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன் (2 கொ. 11; 27.). அப்பொழுது

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாய் இருந்தபின்பு அவருக்குப் பசி உண்டாயிற்று (மத். 4; 1, 2.).

பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள், என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார் (யோவே. 1, 14: 2; 12, 13.). நாங்கள் உபவாசம் பண்ணும்போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன, என்கிறார்கள்; இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள். இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும்

உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய் இந்நாளில் உபவாசிக்கிறதுபோல உபவாசியாதிருங்கள். மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும் தலை வணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும் எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்? அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும் நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும் நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும் சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும் பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும் துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும் வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும் உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் (ஏ. 58; 3–7.).

இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. உங்களைக்

கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டுத் தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்துத் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். வழக்காடுவோம், வாருங்கள், என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் (ஏ. 59; 1, 2: 1; 16–18.).

VII. துக்கம்.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள் (மத். 5; 4.). நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் (சங். 34; 19.). கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நா. 1; 7.). தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் நாம் பயப்படோம் (சங். 46; 1, 2, 3.). நீர் ஏழைக்குப் பெலனும் நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும் பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர் (ஏ. 25; 4.).

இரக்கங்களின் பிதாவும் சகல விதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் (2 கொ. 1; 3, 4.). அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும் தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டுப் பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார் (ஏ. 63; 9.). உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தைச் செயித்தேன் என்றார் (யோவா. 16; 33.). உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டுத் தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன் (ஏ. 50; 10.). வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்

கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார் (மத். 11; 28-30.).

ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய். எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் அவர் செவிகளில் ஏறிற்று. கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும்; உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும். உம்முடைய அம்புகள் எனக்குள்ளே தைத்திருக்கிறது; உமது கை என்னை இருத்துகிறது. நான் பெலனற்றுப்போய் மிகவும் நொறுக்கப்பட்டேன்; என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்குமுன்பாக இருக்கிறது; என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது; என் பெலன் என்னைவிட்டு விலகி என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற்போயிற்று. கர்த்தாவே, என்னைக் கைவிடாதேயும்; என் தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும். என் இரட்சிப்பாகிய ஆண்டவரே, எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும். என்மேல் நோக்கமாகி எனக்கு இரங்கும்; நான் தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன். என் இரு

தயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கிறது; என் இடுக்கண்களுக்கு என்னை நீங்கலாக்கிவிடும். என் துன்பத்தையும் என் வருத்தத்தையும் பார்த்து என் பாவங்களையெல்லாம் மன்னித்தருளும். கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால் அவரில் அன்புகூருகிறேன். நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார். உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் (சங். 50; 15: 18; 6: 38; 1, 2, 8–10, 21, 22: 25; 16–18: 116; 1, 6: 22; 24.). அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் (1 பே. 5; 7.).

நான் உபத்திரவப்படுவதற்குமுன் வழி தப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன் (சங். 119; 67, 71.). என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்

சிக்கிறுர் (நீ. 3; 11, 12.). ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவனுகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறுரென்று நீ உன் இருதயத்தில் அறிந்துகொள்வாயாக (உபா. 8; 5.). தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை; வருத்தம் மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை. அக்கினிப் பொறிகள் மேலே பறக்கிறதுபோல மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறுன். இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான்; ஆகையால் சர்வவல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணுதிரும் (யோபு 5; 6, 7, 17.). நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்; முகத் துக்கத்திஞலே இருதயம் சீர்ப்படும். ஞானிகளின் இருதயம் துக்கவீட்டிலே இருக்கும் (பிர. 7; 3, 4.). ஆண்டவர் உங்களுக்குத் துன்பத்தின் அப்பத்தையும் உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும் உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும். நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும், வழி இதுவே, இதிலே நடவுங்கள், என்று உங்களுக்குப் பின்னுலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும் (ஏ. 30; 20, 21.). வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கிப் பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்ளுவார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என்

சனம், என்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன், என்று அவர்கள் சொல்லுவார்கள் (சக. 13; 9.). நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத் தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (1 கொ. 11; 32.). துன்பப்படவேண்டியது அவசியமானதால் இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் (1 பே. 1; 6, 7.). உபத்திரவம் பொறுமையையும் பொறுமை பரீட்சையையும் பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம் (ரோ. 5; 3, 4.). அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார். அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை (பு. 3; 32, 33.).

கர்த்தரிடத்தில் திரும்புவோம், வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார் (ஓ. 6; 1.). நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர்

கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றுன் (யோபு 1; 21.). அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும் நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக சரிக்கட்டாமலும் இருக்கிருர் (சங். 103; 10.). அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13; 15.). படுக்கையின்மேல் வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவீர் (சங். 41; 3.). கர்த்தர் தம்முடைய சனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார் (ஏ. 49; 13.). பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கிஞர்: அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார், என்று ஏசாயா தீர்க்கதரிசியினுல் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது (மத். 8; 16, 17.).

அவர், என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும், என்றுர் (2 கொ. 12; 9.). உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும் என்றுன். அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம் (உபா. 33; 25, 27.). நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனுலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவா. 16; 20.). சாயங்

காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். கண்ணீரோடே விதைக்கிற வர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித் தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வரு வான் (சங். 30; 5: 126; 5, 6.). இக்காலத்துப் பாடு கள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகி றேன் (ரோ. 8; 18.). ஆனபடியினாலே நாங்கள் சோர் ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷ னது அழிந்தும் உள்ளான மனுஷனது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படு கிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கி யிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலே சான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிக மான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமான வைகள், காணப்படாதவைகளோ நித்தியமான வைகள் (2 கொ. 4; 16–18.).

BAPTISM.

ஞானஸ்நானம்.

I. ஆராதனை.

ஓய்வுநாள் காலை ஆராதனையில் இரண்டாம் கீர்த்தனையின்பின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கொண்டுவந்து பிரசங்க பீடத்திற்குமுன் வந்து வரிசையாய் நிற்கவேண்டும். ஞானஸ்நானம் கொடுக்கையில் குழந்தையானது போதகர் கையிலாவது தகப்பன் கையிலாவது தகப்பன் கிறிஸ்தவனல்லவென்றால் தாய் கையிலாவது இருக்கலாம்.

1. வேத வாசிப்பு.

2. போதகர் முன்னிற்கும் பெற்றோரிடத்தில் கேட்டுக்கொள்வது:—

பெற்றோராகிய நீங்கள் இந்தக் குழந்தையைத் தேவனுக்கென்று உண்மையான மனதோடே ஒப்புக்கொடுக்கிறீர்களா?

இந்தக் குழந்தையைத் தன் சொந்த இஷ்டத்தையாவது உலக செல்வத்தையாவது உலக சந்தோஷத்தையாவது முக்கியமாய்த் தேடவொட்டாமல் இவன் கர்த்தரைச் சேவிக்கவும் எந்த நிலையிலிருந்தாலும் உண்மையும் பிரயோசனமுமுள்ளவனும் பிறருக்கு நன்மை செய்ய ஆவலுடையவனுமாயி

ருக்கவும் வளர்ப்போம், என்று உடன்பாடுபண்ணுகிறீர்களா?

போதகரும் உபாத்திமார்களும்மாத்திரம் இவனைப் படிப்பிக்கக் கடமைப்பட்டவர்களென்று நாங்கள் எண்ணிக் கவலையற்றிராமல் இளம் பிராயத்தில் தானே நல்ல போதனைகளை இவனுக்குப் படிப்பித்தும் பொல்லாங்கும் கேடுமானவைகளை இவன் வெறுக்கவும் ஊரிலே பேசப்படும் கேடும் அசுத்தமுமான பேச்சுகளை வெறுத்து நன்மையும் பரிசுத்தமுமான பேச்சுகளில் பிரியப்படவும் கற்பித்து வருவோம், என்றும் உடன்பாடுபண்ணுகிறீர்களா?

அப்போதைக்கப்போது இந்தப் பிள்ளையினிடத்தில் காணும் குற்றங்களையும் கீழ்ப்படியாமையையும் கண்டித்தும் தண்டித்தும் வருவோம், என்றும், விசேஷமாகப் பிள்ளைகளோடேயும் பிள்ளைகளுக்காகவும் செபம்பண்ணி இப்படி நன்மாதிரி காட்டிவருவோம், என்றும் உடன்பாடுபண்ணுகிறீர்களா?

3. சபையார் எழுந்துநிற்க, அவர்கள் பேரால் போதகர் சொல்வது:—

இப்போது உங்களுடைய உடன்படிக்கையை இச்சபையைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் கேட்டோம்; உங்களுடைய பிள்ளையை இந்தச் சபைப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டோம்; இதை உங்களைப்போல நாங்களும் பாதுகாத்து இதற்காகச் செபம்பண்ணிவருவோமென்றும் இது அநாதப்

பிள்ளையாய்ப்போனால் எங்களால் கூடினமட்டும் தாய்தந்தைக்குரிய ஆதரவை இதற்குச் செய்வது எங்கள் கடமையென்று உணர்ந்து அப்படிச் செய்யப் பிரயாசப்படுவோமென்றும் உடன்படிக்கை பண்ணுகிறோம்.

ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய யெகோவா உங்களையும் உங்கள் சந்ததியாரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

4. போதகரானவர் தண்ணீரில் கையை நனைத்து பிள்ளையின் தலையில் வைத்துச் சொல்வது:—

[இன்னான்], பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

5. செபம்.

II. வேத வாக்கியங்கள்.

நான் உங்கள்மேல் சுத்தமான சலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள் (எசே. 36; 25.). விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மா. 16; 16.). ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்

(யோவா. 3; 5.). துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும் சுத்த சலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (எபி. 10; 22.).

இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால் நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போசனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக் கல்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கல்மலை கிறிஸ்துவே (1 கொ. 10; 1–4.). நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுசென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீ. 3; 5.). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும்

புதிதான சீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோ. 6; 3, 4.). உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (க. 3; 27.).

கர்த்தருடைய கிருபை அவருக்குப் பயந்தவர்கள்மேலும் அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது (சங். 103; 17, 18.). எல்கானா என்பவன் கர்த்தருக்கு வருஷாந்தரம் செலுத்தும் பலியையும் தன் பொருத்தனையையும் செலுத்தும்படியாகத் தன் வீட்டார் அனைவரோடுங்கூடப் போனான். அன்னாள் கூடப்போகவில்லை; அவள் பிள்ளை பால் மறந்த பின்பு அவன் கர்த்தரின் சந்நிதியிலே காணப்படவும் அங்கே எப்பொழுதும் இருக்கவும் நான் அவனைக் கொண்டுபோய்விடுவேன் என்று தன் புருஷனிடத்தில் சொன்னாள். அவள் அவனைப் பால் மறக்கப் பண்ணினபின்பு மூன்று காளைகளையும் ஒரு மரக்கால் மாவையும் ஒரு துருத்தி திராட்சரசத்தையும் எடுத்துக்கொண்டு அவனையும் கூட்டிக்கொண்டு சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனாள்; பிள்ளை இன்னும் குழந்

தையாயிருந்தது. அப்பொழுது அவள், என் ஆண்டவனே, இங்கே உம்மண்டையிலே நின்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணின ஸ்திரீ நான் தான் என்று என் ஆண்டவனாகிய உம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறேன். இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம்பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள் (1 சா. 1; 21, 22, 24, 26–28.). பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே அது கர்ப்பத்திலே உற்பவிக்கிறதற்குமுன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள். அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள் (லூ. 2; 21, 23, 24, 39.).

ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும், என்றான். அதற்கு அவர்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள், என்று சொல்லி அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வச

னத்தைப் போதித்தார்கள். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 16; 30, 33.).

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக இராச்சியத்தில் பெரியவனாயிருப்பான். இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும் (மத். 18; 3—6.). அப்பொழுது சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு விசனமடைந்து சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு

கிறேன், என்று சொல்லி அவர்களை அணைத்துக் கொண்டு அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார் (மா. 10; 13–16.).

THE LORD'S SUPPER.

கர்த்தருடைய இராப்போசனம்.

I. ஆராதனை.

1. கீர்த்தனம்.
2. வேத வாசிப்பு.
3. சுருக்கப் பிரசங்கம்.
4. தேவ ஆசீர்வாதம் தேடும் செபம்.
5. அப்பத்தைப் பரிமாறுதல்
6. ஸ்தோத்திர செபம்.
7. ரசத்தைப் பரிமாறுதல்.
8. பெற்றுக்கொள்ளாதவர்கள் உண்டாவென்று விசாரித்தல்.
9. கீர்த்தனம்.
10. கர்த்தருடைய செபமும் ஆசீர்வாதமும்.

II. வேதவாக்கியங்கள்.

எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங் கிளையைப்போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போ

லவும் அவனுக்குமுன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத் தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக் கணிக்கப்பட்டவரும் துக்கம் நிறைந்தவரும் பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டுச் சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழி தப்பித் திரிந்து அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும் தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற

ஆட்டைப்போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பி லுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்? சீவனுள்ளோ ருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனுர்; என் சனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக் கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனுலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானேடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ் சனை இருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக் கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தி னுர்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவா ரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருப்பார்; கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினுல் வாய்க் கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனுகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினுல் அநேகரை நீதிமான் களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத் தைத் தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வே ண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக் குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (ஏ. 53.).

வேளை வந்தபோது அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நான் பாடுபடுகிறதற்குமுன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய இராச்சியத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், என்று சொல்லி அவர் பாத்திரத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய இராச்சியம் வருமளவும் நான் திராட்சப்பழ ரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், என்றார் (லூ. 22; 14–18.). கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள், என்றார். போசனம் பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள், என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப்

பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள் (1 கொ. 11; 23–26.). அவர்கள் போசனம்பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப் பிட்டுச் சிஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது, என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப் பழ ரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் இராச்சியத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், என்றார். அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள் (மத். 26; 26–30.).

MARRIAGE.

விவாகம்.

I. சடங்கு.

1. மாப்பிள்ளையும் பெண்ணும் போதகருக்கு முன்பாக வந்து மாப்பிள்ளை பெண்ணுக்கு வலது புறமாக இருக்க, போதகர் ஏற்ற வேத வாக்கியங்களை வாசித்தல்.

2. செபம்:—

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனே, எங்கள் ஆதித்தாய்தகப்பன்மாரைச் சிருஷ்டித்தவரும் எல்லா மனிதருக்கும் பிதாவுமாகிய ஆண்டவரே, விவாகம் நடக்கிற இவ்வேளையில் எங்களோடிருந்து அநுக்கிரகம் செய்து இங்கே கூடியிருக்கிறவர்களையும் முகம் மலர்ந்து நோக்கியருளும். இப்போது பரிசுத்த விவாகத்தினுல் ஐக்கியப்படப்போகிற இவ்விருவர்பேரிலும் உமது ஆசீர்வாதம் இறங்க உம்மை மன்றுடுகிறும். உமக்கும் இங்கே கூடியிருக்கிறவர்களுக்கும் முன்பாக இவ்விருவரும் ஒருவருக்கொருவர் செய்யப்போகிற வாக்குத்தத்தங்களைக் கேட்டு மனமும் வாக்கும் ஒத்துச்செய்யும் வார்த்தைப்பாடுகளாயிருக்கும்படி தயவுசெய்தருளும். அவ்வாக்குத்தத்தங்களின்படி செய்வதற்கு இவர்கள் தங்கள் பெலனையே நம்பியிராமல் தாழ்

மையுடன் உம்மை மன்றாடி தினந்தோறும் உம்மிடத்தில் ஒத்தாசை பெற்றுக்கொள்ளும்படி இவர்களுக்கு ஞானத்தைத் தந்தருளும். இவர்கள் பெருமையில்லாமல் ஐக்கியமாயும் பிரியமாயும் தங்கள் கடமைகளை ஒருவருக்கொருவர் செய்து தங்கள் சீவ காலம் முழுவதும் மெய்யாகவே ஒருவரை ஒருவர் சார்ந்துகொள்ளும்படி ஒருவர்பேரில் ஒருவருக்கு வேண்டிய அன்பையும் நம்பிக்கையையும் இவர்களுக்கு நிறைவாய் ஈந்தருளும். ஆமென்.

3. போதகர் சனங்களைப் பார்த்துச் சொல்வது:—

பிரியமானவர்களே, தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாக இந்த மாப்பிள்ளை, பெண், இருவரையும் மெய் விவாகத்தில் சம்பந்தப்படுத்தும்படி நாம் இங்கே கூடிவந்திருக்கிறோம். விவாகமானது மனிதன் பரிசுத்தனாயிருந்த காலத்தில் அவனுக்காக தேவனால் ஸ்தாபிக்கப்பட்டது. அது கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமுள்ள இரகசிய ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது. மேலும் இயேசு கிறிஸ்து காணாவூரிலே நடந்த கலியாணத்திற்குப் போனதினாலும் அங்கே தமது முதலாம் அற்புதத்தைச் செய்ததினாலும் விவாகமானது கனமுள்ளதென்று காட்டியிருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலும் விவாகமானது யாவருக்குள்ளும் கனம் பொருந்தியதென்று விவாக நிலைமையைக் குறித்து மேன்மையாய்ச் சொல்லுகிறார். விவாகத்தை அற்பமாய் எண்ணி யோசனையில்லாமல் இதில் உட்படக்கூடாது. விவாகம் செய்யும் நோக்கம்

இன்னதென்று ஆலோசித்து விவேகத்தோடும் பயத்தோடும் இந்தப் பரிசுத்த நிலைமையில் உட்படவேண்டும். இப்படி மேன்மையுள்ளதாயிருக்கிற சம்பந்தத்தில் இவ்விரண்டுபேரும் இணைக்கப்படும்படி இப்பொழுது இங்கே நிற்கிறபடியால் இவர்களை ஒருமைப்படுத்துவதற்குத் தடையான நியாயம் உங்களில் யாருக்காவது தெரியுமானால் அதை இப்பொழுதே தெரியப்படுத்தவேண்டும்; இல்லாவிட்டால் இனி ஒருபோதும் சொல்லக்கூடாது.

4. மாப்பிள்ளையினிடம் கேட்பது:—

இந்த ஸ்திரீயை விவாகம்பண்ணக்கூடாதபடி உமக்கு யாதொரு தடை உண்டா? இவளை நேசித்து ஆதரித்து உயிரோடிருக்குமளவும் விட்டுவிடாமல் தேவனுடைய கட்டளைப்படி இவளோடு ஒருமித்து வாழும்படிக்கு இவளை உமக்கு மனைவியாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீரா?

5. பெண்ணினிடம் கேட்பது:—

இந்த மனிதனை விவாகம்பண்ணக்கூடாதபடி உமக்கு யாதொரு தடையுண்டா? இவருக்குக் கீழ்ப்படிந்து இவரை நேசித்து ஆதரித்து நீங்களிருவரும் உயிரோடிருக்குமளவும் தேவனுடைய கட்டளைப்படி இவரோடு ஒருமித்து வாழும்படிக்கு இவரை உமக்குப் புருஷனாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீரா?

6. மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவருடைய வலது கையை ஒருவர் பிடித்திருக்க, மாப்பிள்ளை

போதகர் சொல்லுகிற பிரகாரம் சொல்லவேண்டிய உடன்படிக்கை:—

[இன்னான்] ஆகிய நான் [இன்னாள்] ஆகிய உம்மை இன்றுமுதல் எப்பொழுதும் நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும் மரணம் நம்மைப் பிரிக்குமளவும் விடாமல் தேவன் நியமித்தபடியே உம்மை நேசிக்கவும் ஆதரிக்கவும் உம்மைக் கனம்பண்ணவும் உம்மை என் மனைவியாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று வாக்குக்கொடுக்கிறேன்.

7. பெண் சொல்லவேண்டிய உடன்படிக்கை:—

[இன்னாள்] ஆகிய நான் [இன்னான்] ஆகிய உம்மை இன்றுமுதல் எப்பொழுதும் நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும் மரணம் நம்மைப் பிரிக்குமளவும் விடாமல் தேவன் நியமித்தபடி உம்மை நேசிக்கவும் ஆதரிக்கவும் உமக்குக் கீழ்ப்படியவும் உம்மைமாத்திரம் என் புருஷனாக ஏற்றுக் கொள்ளுகிறேனென்று வாக்குக்கொடுக்கிறேன்.

8. மாப்பிள்ளை தாலியைப் போதகரிடத்தில் பெற்றுப் பெண்ணின் கழுத்தில் கட்டிப் போதகர் சொல்லுகிற பிரகாரம் சொல்வது:—

இப்பொழுது எனக்கும் உமக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமும் உறுதியுமாக நான் இந்தத் தாலியை உமக்குக் கட்டி உம்மை விவாகம் செய்துகொண்டேன்.

9. போதகர் சனங்களுக்குக் கூறி அறிவிப்பது:-

[இன்னான்] உம் [இன்னாள்] உம் மெய் விவாக சம்பந்தத்தில் ஒருமைப்படச் சம்மதித்து தேவன் சந்நிதியிலும் மனிதருக்குமுன்பாகவும் அதற்குச் சாட்சியிட்டு ஒருவருக்கொருவர் வாக்குத்தத்தம் செய்தும் ஒருவருக்கொருவர் கைகொடுத்தும் தாலியைக் கட்டியும் ஏற்றுக்கொண்டும் தெரியப்படுத்தினபடியினாலே இவர்கள் இப்போது புருஷனும் மனைவியுமாயிருக்கிறார்களென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பிரசித்தப்படுத்துகிறேன். தேவன் இணைத்தவர்களை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.

10. செபம்:—

எங்கள் மீட்பரும் பெலனுமான தேவனே, உமக்குப் பயந்து உம்முடைய வழிகளில் நடக்கிறவன் பாக்கியவான். பரிசுத்த மெய் விவாகத்தில் ஒருமையாக்கப்பட்ட இவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தருளும். இங்கே இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட வாக்குப்பிரகாரம் உண்மையோடும் சந்தோஷத்தோடும் வாழ இவர்களுக்கு உதவி செய்தருளும். இவர்கள் உம்மை நேசித்து உமக்குப் பயந்து உமது வழிகளில் நடப்பதையே எல்லாவற்றிற்கும் மேலாக விரும்பும்படி தகுந்த இருதயத்தை இவர்களுக்கு ஈந்தருளும். நீர் அருளும் உள்ளான கிருபையும் நீதியின் கனிகளும் இவர்களிடத்தில் பூரணமாகும்படி செய்தருளும். இவர்கள் தினந்தோறும் தேவபத்தியுள்ளவர்

களாய் நடப்பதால் இவர்கள் வீடு உம்முடைய ஆலயத்தைப்போல பரிசுத்தமாயிருக்கும்படி தயை செய்தருளும். இவர்கள் தங்கள் விசாரணைக்குக் கீழ்ப்பட்ட யாவரையும் உமக்குப் பயப்படுகிற பயத்தில் விவேகமாய் நடத்தும்படிக்கு இவர்களுக்கு உதவி செய்தருளும். இந்தப் பெண்ணை வேறொரு வீட்டாரிடத்திற்குப் போகும்படி ஒப்புக்கொடுக்கிற பெற்றோர் மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்கவும் இம்மனிதனுடைய வீட்டிலுள்ளவர்களோ இப்பெண்ணை மகள்போலவும் சகோதரிபோலவும் பட்சத்தோடு ஏற்றுக்கொள்ளவும் கிருபை செய்தருளும். இவ்விருவரையும் சந்தோஷ காலத்திலும் துக்க காலத்திலும் ஆசீர்வதித்தருளும். இவர்கள் மரணகாலபரியந்தம் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தை சரிவரச் செய்து நிறைவேற்றவும் கடைசியாய் நித்திய சந்தோஷமுள்ள உமது இராச்சியத்தில் பிரவேசித்து ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் தங்களைச் சேர்ந்த யாவரோடுங்கூட இவர்கள் மகிழ்ச்சி அனுபவித்திருக்கவும் தேவரீர் கிருபை செய்யவேண்டுமென்று இயேசுவின்மூலமாய் மன்றாடுகிறோம். ஆமென்.

11. ஆசீர்வாதம்:—

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை

உங்கள்மேல் ஏறெடுத்து உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.

12. கீர்த்தனம்.

13. போதகரும் மாப்பிள்ளைபெண்ணும் சாட்சிகள் இரண்டுபேரும் சர்க்காரர் உறுதிப்பத்திரத்தில் தங்கள் கையெழுத்து வைத்தல்.

14. கீர்த்தனம்.

II. வேத வாக்கியங்கள்.

பின்பு தேவனாகிய கர்த்தர், மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன், என்றார்; அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரை அடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள், என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். அவர் ஸ்திரீயை நோக்கி, நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்

பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளைபெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான், என்றார் (ஆதி. 2; 18, 21-24: 3; 16.). மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான், கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான் (நீ. 18; 22.). கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சக் கொடியைப்போலிருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக் கன்றுகளைப் போலிருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ சீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் (சங். 128.). விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளாயும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபி. 13; 4.). ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும் பிள்ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும் விரோதியானவன்

நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன் (1 தீ. 5; 14.).

ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு அவளை நேசித்தான். யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு, உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழுவருஷம் வேலை செய்கிறேன், என்றான். அதற்கு லாபான், நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப்பார்க்கிலும் அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்தில் தரித்திரு, என்றான். அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள்பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்ச நாளாகத் தோன்றினது (ஆதி. 24; 67: 29; 18–20.). கலிலேயாவிலுள்ள கானாவூரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கே இருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள் (யோவா. 2; 1, 2.). ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெ. 19; 7, 8.).

ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும் அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால் தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் (1 கொ. 7; 2–4: 11; 7–9.).

புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள் (கொ. 3; 19.). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப்

போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (எபே. 5; 25, 28–31.). புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால் உங்கள் செபங்களுக்குத் தடை வராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து உங்களுடனேகூட அவர்களும் நித்திய சீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியால் அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (1 பே. 3; 7.). அன்றியும் புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் செபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன் (1 தீ. 2; 8.).

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்

டும் (எபே. 5; 22–24.). ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாவது பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும் தெளிந்த புத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும். ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்கவேண்டும் (1 தீ. 2; 9–12.). மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திரு வசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்துப் போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னிப் பொன் ஆபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல் அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலை

யேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1 பே. 3; 1–6.). குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது, அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேலிருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறதென்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து, அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்களெல்லாருக்கும் மேற்பட்டவள், என்று அவளைப் புகழுகிறான். சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்; கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் (நீ. 31; 10–12, 26–30.).

III. ஒருவரோடு ஒருவர் விவாகம் செய்யக்கூடாதென்று வேதத்தினாலும் தேசப்பிரமாணத்தினாலும் விலக்கப்பட்டிருக்கிற இனத்தாரையும் சம்பந்தத்தாரையும் காட்டிய அட்டவணை.

புருஷன்.	ஸ்திரீ.
தன்னுடைய பாட்டியையும்	தன்னுடைய பாட்டனையும்
பாட்டனின் மனைவியையும்	பாட்டியின் புருஷனையும்
மனைவியின் பாட்டியையும்	புருஷனின் பாட்டனையும்
தகப்பனின் சகோதரியையும்	தகப்பனின் சகோதரனையும்
தாயின் சகோதரியையும்	தாயின் சகோதரனையும்
தகப்பனின் சகோதரனின் மனைவியையும்	தகப்பனின் சகோதரியின் புருஷனையும்
தாயின் சகோதரனின் மனைவியையும்	தாயின் சகோதரியின் புருஷனையும்
மனைவியின் தகப்பனின் சகோதரியையும்	புருஷனின் தகப்பனின் சகோதரனையும்
மனைவியின் தாயின் சகோதரியையும்	புருஷனின் தாயின் சகோதரனையும்
தாயையும்	தகப்பனையும்
மாற்றாந்தாயையும்	மாற்றாந்தகப்பனையும்
மனைவியின் தாயையும்	புருஷனின் தகப்பனையும்
மகளையும்	மகனையும்
மனைவியின் மகளையும்	புருஷனின் மகனையும்
மகனின் மனைவியையும்	மகளின் புருஷனையும்
சகோதரியையும்	சகோதரனையும்
சகோதரனின் மனைவியையும்	சகோதரியின் புருஷனையும்
மகனின் மகளையும்	மகனின் மகனையும்
மகளின் மகளையும்	மகளின் மகனையும்
மகனின் மகனின் மனைவியையும்	மகனின் மகளின் புருஷனையும்
மகளின் மகனின் மனைவியையும்	மகளின் மகளின் புருஷனையும்
மனைவியின் மகனின் மகளையும்	புருஷனின் மகனின் மகனையும்
மனைவியின் மகளின் மகளையும்	புருஷனின் மகளின் மகனையும்
சகோதரனின் மகளையும்	சகோதரனின் மகனையும்
சகோதரியின் மகளையும்	சகோதரியின் மகனையும்
சகோதரனின் மகனின் மனைவியையும்	சகோதரனின் மகளின் புருஷனையும்
சகோதரியின் மகனின் மனைவியையும்	சகோதரியின் மகளின் புருஷனையும்
மனைவியின் சகோதரனின் மகளையும்	புருஷனின் சகோதரனின் மகனையும்
மனைவியின் சகோதரியின் மகளையும்.	புருஷனின் சகோதரியின் மகனையும்.

BURIAL.

அடக்கம் பண்ணுதல்.

I. வீட்டாராதனை.

1. வேத வாசிப்பு.
2. பிரசங்கம்.
3. ஞானப்பாட்டு.
4. செபம்.

II. கல்லறைக்கேற்ற ஆராதனை.

1. வேத வாசிப்பு.
2. பிரேதக்குழியில் இறக்கி வைத்தல்.
3. போதகர் சொல்வது:—

நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்கே திரும்புவாய்: இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது.

4. போதகர், முதலானவர்கள் குழியில் மண் போடுதல்.
5. செபம்.

III. வேத வாக்கியங்கள்.

என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது. என் நாட்கள் அஞ்சற்காரர் ஓட்டத்திலும் தீவிரமாயிருக்கிறது; அவைகள் நன்

மையைக் காணுமல் பறந்துபோம். அவைகள் வேகமாய் ஓடுகிற கப்பல்களைப்போலவும் இரை யின்மேல் பாய்கிற கழுகைப்போலவும் கடந்து போகிறது. பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ. அவன் நாட்கள் ஒரு கூலிக்காரன் நாட்களைப்போலிருக் கிறதல்லவோ (யோபு 7; 6: 9; 25, 26: 7, 1.). நீர் மனு ஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே, திரும்புங் கள், என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வரு ஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும் இராச்சாமம் போலவும் இருக்கிறது. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர்; நித்திரைக்கு ஒத்திருக் கிருர்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப் பாயிருக்கிருர்கள். அது காலையிலே முளைத்துப் பூத்து மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக் கிறது; வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிருன். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லா மற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது (சங். 90; 3–6: 103; 15, 16.). மாம்சமெல் லாம் புல்லைப்போலவும் அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது. கர்த் தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது புல் உலர்ந்து பூ உதிரும்; சனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும் (ஏ. 40; 6–8.). சகல சீவாத்துமாக்களுக்கும் குறிக் கப்பட்ட தாவரமாகிய மரணத்துக்கு என்னை ஒப் புக்கொடுப்பீர் என்று அறிவேன். மனுஷனேவெ

ன்ருல் செத்தபின் ஒழிந்துபோகிருன், மனுபுத்தி ரன் சிவித்துப்போனபின் அவன் எங்கே? மனுஷன் செத்தபின் பிழைப்பானே? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப் பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். அவனுக்கு முன்னுக எண்ணிறந்த சனங்கள் போனதுபோல அவனுக்குப் பின்னுக ஒவ்வொருவரும் அவ்விடத்துக்குச் செல்லுவார்கள். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது. துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது; பெலனற்று விடாய்த்துப்போனவர்கள் அங்கே இளைப்பாறுகிருர்கள் (யோபு. 30; 23; 14; 10, 14: 21; 33: 17; 1: 3; 17.). உங்கள் சீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலம் தோன்றிப் பின்பு தோன்ருமற்போகிற புகையைப்போலிருக்கிறதே (யாக். 4; 14.). மரணத்தைக் காணுமல் உயிரோடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு விலக்கிவிடுகிறவன் யார் (சங். 89; 48.)? ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரண நாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை; அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை. துன்மார்க்கனைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது. (பிர. 8; 8.). இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும் அவனை உன்

19

வாலிபப் பிராயத்திலே நினை (பிர. 12; 7.). உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது; நிலைத்திருப்போம், என்னும் நம்பிக்கையில்லை (1 நாளா. 29; 15.). நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடை அளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம் (சங். 90; 12: 39; 4, 5.).

கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம், என்றான் (யோபு. 1; 21.). ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள், என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள், என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31; 15, 16.). பிள்ளை வளர்ந்தான்; ஒரு நாள் அவன் அறுப்பறுக்

கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும்போது தன் தகப்பனைப் பார்த்து, என் தலை நோகிறது, என் தலை நோகிறது, என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில், இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக் கொண்டுபோய் விடு என்றான். அவனை எடுத்து அவன் தாயினிடத்தில் கொண்டுபோனபோது அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான் (2 இ. 4; 18-20.). தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக்கொள்ளுகிறதைக் கண்டுப் பிள்ளை செத்துப்போயிற்று என்று அறிந்து தன் ஊழியக்காரரை நோக்கி, பிள்ளை செத்துப்போயிற்றோ? என்று கேட்டான்; செத்துப்போயிற்று, என்றார்கள். அதற்கு அவன், பிள்ளை இன்னும் உயிரோடிருக்கையில் பிள்ளை பிழைக்கும்படிக்குக் கர்த்தர் எனக்கு இரங்குவாரோ, எப்படியோ, யாருக்குத் தெரியும் என்று உபவாசித்து அழுதேன். அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியதென்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனேயல்லாமல் அது என்னிடத்திற்குத் திரும்பிவரப்போகிறதில்லை, என்றான். யோவாபின் ஆயுததாரிகளாகிய சேவகர் அப்சலோமைச் சூழ்ந்து அவனை அடித்துக் கொன்று போட்டார்கள். அவர்கள் அப்சலோமை எடுத்து அவனைக் காட்டிலுள்ள ஒரு பெரிய குழியிலே போட்டு அவன்மேல் மகா பெரிய கற்குவியலைக்

குவித்தார்கள். அப்பொழுது இராசா மிகவும் கலங்கி கெவுனி வாசலின் மேல்வீட்டிற்குள் ஏறிப் போய் அழுதான்; அவன் ஏறிப்போகையில், என் மகனாகிய அப்சலோமே! என் மகனே! என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே! என் மகனே! என் மகனே! என்று சொல்லி அழுதான் (2 சா. 12; 19, 22, 23: 18; 15, 17, 32.). தேவ பத்தியுள்ள மனுஷர் ஸ்தேவானை எடுத்து அடக்கம் பண்ணி அவனுக்காக மிகவும் துக்கங்கொண்டாடினார்கள் (அ. 8; 2.).

சாமுவேல் மரித்துப்போனான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குத் துக்கங்கொண்டாடி அவன் ஊராகிய ராமாவிலே அவனை அடக்கம்பண்ணினார்கள் (1 சா. 28; 3.). கர்த்தர் எலியாவைச் சுழல் காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் போகிறபோது எலியா எலிசாவோடேகூட கில்காலிலிருந்து புறப்பட்டுப்போனான். அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில் இதோ, அக்கினி இரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான் (2 இ. 2; 1, 11.). ஆரோன் சீவித்துப்போனான் என்பதைச் சபையாரெல்லாரும் கண்டபோது இஸ்ரவேல் வம்சத்தாரெல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண்டாடினார்கள் (எண். 20; 29.). கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்

விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்தி லுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக் கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். மோசே மரிக்கிறபோது நூற்றிருபது வயதாயிருந் தான்; அவன் கண் இருள் அடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள். மோ சேக்காக அழுது துக்கம் கொண்டாடின நாட்கள் முடிந்தது (உபா. 34; 5–8.). யாக்கோபு தன் குமா ரருக்குக் கட்டளையிட்டு முடிந்தபின்பு அவன் தன் கால்களைக் கட்டிலின்மேல் மடக்கிக்கொண்டு சிவித்துப்போய்த் தன் சனத்தாரோடே சேர்க்கப் பட்டான். அப்பொழுது யோசேப்பு தன் தகப் பனுடைய முகத்தின்மேல் விழுந்து அழுது அவனை முத்தஞ்செய்தான். சாராள் நூற்றிருபத்தேழு வரு ஷம் உயிரோடிருந்தாள்; இவ்வளவே சாராளுடைய வயது. கானான் தேசத்திலுள்ள எபிரோன் என்னும் கிரியாத் அர்பாவிலே சாராள் மரித்தாள்; அப்பொ ழுது ஆபிரகாம் வந்து சாராளுக்காகப் புலம்பி அழு தான். ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசு நாட்கள் நூற்றெழுபத்தைந்து வருஷம். பிற்பாடு ஆபிரகாம் நல்ல, நரை வயதிலும் முதிர்ந்த, பூரண ஆயுசிலும் பிராணன்போய் மரித்துத் தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான் (ஆதி. 49; 33: 50; 1: 23; 1, 2: 25; 7, 8.).

யோபு நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளை யும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாள் இருந்து பூரண வயதுள்ளவனாய் மரித்தான் (யோபு. 42; 16, 17.). மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்தறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்தான் (ஆதி. 5; 27.).

நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமை பாராட்டாதே, ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே (நீ. 27; 1.). நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத். 24; 44.). விழித்திருங்கள், ஏனெனில் வீட்டெசமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் (மா. 13; 35–37.). உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு (ஆமோ. 4; 12.). எசமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான் (மத். 24; 46.). துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்; நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன் (நீ. 14; 32.). ஆதலால் இன்னும் உயிரோடிருந்து பிழைக்கிறவர்களைப்பார்க்கிலும் முன்னமே காலஞ்சென்று மரித்தவர்களையே பாக்

கியவான்கள் என்றேன் (பிர. 4; 2.). நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக (எண். 23; 10.). நான் மரண நிழலின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது (சங். 23; 4: 116; 15.). பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப் போம்; ஆவியானவரும், ஆம், என்று திருவுளம் பற்றுகிறார், என்று சொல்லிற்று (வெ. 14; 13.). கிறிஸ்து எனக்குச் சீவன், சாவு எனக்கு ஆதாயம். ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால் நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் (பிலி. 1; 21–23.). பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே

நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும் எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (2 கொ. 5; 1, 6–8.).

மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன், என்றாள். இயேசு அவளை நோக்கி, உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான், என்றார். அதற்கு மார்த்தாள், உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன், என்றாள். இயேசு அவளை நோக்கி, நானே உயிர்த்தெழுதலும் சீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா? என்றார். இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள்

சீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவா. 11; 21–26: 5; 28, 29.). மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக் கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; சீவ புஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள்தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள்தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள் (வெ. 20; 12, 13.). இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரை அடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்

கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். சன்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; சன்ம சரீரமும் உண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாம் எல்லாரும் நித்திரை அடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாம் எல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் செயமாக விழுங்கப்பட்டது, என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே, உன் கூர் எங்கே! பாதா

ளமே, உன் செயம் எங்கே! மாணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவி ஞலே நமக்குச் செயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொ. 15; 19–23, 42–44, 50–57.). அன் றியும், சகோதரரே, நித்திரை அடைந்தவர்களினி மித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்ற வர்களைப்போலத் துக்கித்து அறிவில்லாதிருக்க என க்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்ப டியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்க ளையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவரு வார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, கர்த் தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வ தில்லை. ஏனெனில் கர்த்தர்தாமே ஆரவாரத்தோ டும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வரு வார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோ டிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொ ழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகை யால் இந்த வார்த்தைகளினலே நீங்கள் ஒருவரை ஒருவர் தேற்றுங்கள் (1 தெ. 4; 13–18.).

APPROBATION TO PREACH.

பிரசங்கிக்குக் கொடுக்கும் யோக்கியதா பத்திரம்.

[இன்ன] சங்கத்தார் [இன்னாரை]

வேதத்தைப் போதித்து வியாக்கியானம் பண்ணுவதிலும், வேதசாஸ்திர அறிவிலும், ஆவிக்குரிய அனுபவத்திலும் பொதுவான திறமைகளிலும் பரீட்சித்து இவர் சுவிசேஷப் பிரசங்கியாயிருக்கத் தக்கவரென்று எண்ணி இவரைக்குறித்து இந்தப் பத்திரத்தைக் கொண்டு எந்தக் கிறிஸ்து சபைக்கும் நற்சாட்சியிடுகிறோம்.

இப்பத்திரம் நாளதுமுதல் [இத்தனை] வருஷக் காலத்திற்கு உபயோகமானது.

[இன்னார்] , தலைவர்.
[இன்னார்] , இராயசக்காரர்.

[இடம்,]
[தேதி.]

முற்றிற்று.